www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி


පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 12 | யூலை 2005 | பக்கம்12 | விலை 12/ | சுழற்சி 81



## • சேது கால்வாய் வெட்டும் திட்டம்
## • மேல் கொத்மலை நீர்மின் திட்டம்
## • இலங்கை- இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம்



# வடக்கு கிழக்கு மலையக மக்களுக்கு வெட்டப்படும் மரணக் குழிகள்

* சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டத்திற்கான ஆரம்ப அடிக்கல் நாட்டு விழா யூலை இரண்டாம் திகதி இடம் பெறுகிறது. இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் சோனியா காந்தி மு. கருணாநிதி ஆகியோர் பிரதானமாகக் கலந்து கொள்கிறார்கள்.

* இலங்கை- இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என அண்மையில் இலங்கை வந்திருந்த இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வார்சிங் கொழும்பில் வைத்து அறிவித்துள்ளார்.

* யப்பானிய கடன் உதவியுடன் முன்னெடுக்கப்படவுள்ள மேல் கொத்மலை நீர்மின் திட்டத்தை ஆரம்பிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எத்தகைய எதிர்ப்பு வந்தாலும் அத்திட்டம் நிறைவேற்றப்படும் என மின்சாரத்துறை அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த் கூறியுள்ளார்.

இலங்கை இந்திய அரசாங்கங்களினால் விரைவுபடுத்தி முன்னெடுக்கப்படவுள்ள மேல் குறித்த மூன்று திட்டங்கள் இலங்கைக்கும் குறிப்பாக வடக்குகிழக்கு மலையக மக்களுக்கும் அபாயகரமானவையாகும். இவை அப்பிரதேசங்களுக்கும் மக்களின் இருப்பிற்கும் எதிர் காலத்திற்கும் வெட்டப்படும் மரணக்குழிகளேயாகும்.

சேது சமுத்திரக் கால்வாய்த் திட்டம் நடைமுறைக்கு வருவதையிட்டு இந்தியாவின் சகல பிரதான கட்சிகளும் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன. தமிழ்நாட்டில் மீனவர்கள் கரையோர மக்கள் சுற்றுப்புற சூழலியலாளர்கள் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்து வந்த போதிலும் அவற்றையெல்லாம் மீறியே சேது சமுத்திரக் கால்வாய் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இக் கால்வாய் வெட்டும் திட்டத்தால் இந்தியக் கப்பல் கம்பனிகளும் பெரு முதலாளிகளும் உச்சப் பயனடைவார்கள். அத்துடன் இந்தியாவின் பிராந்திய மேலாதிக்கத்திற்கான கடல் ஆதிக்கம் வலுப்படுத்தப்படும். அதே வேளை இக் கால்வாய் திட்ட நடைமுறையால் இலங்கையின் முக்கிய துறைமுகங்களின் பொருளாதார வருவாய் இழக்கப்படுவதுடன் இலங்கை மீதான இந்திய மேலாதிக்கப்பிடி மேலும் திணிக்கப்படும் நிலை



வலுவடையும். இவற்றுக்கும் அப்பால் மன்னார் வளைகுடாவிலிருந்து கிழக்கே திருகோணமலை வரையான மீன பிடித்தொழில் கடுமையாகப் பாதிக்கப்படும். பவளப்பாறைகள் அற்றுப்போவதாலும் இருபத்திநான்கு திட்டுகள் இல்லாது செய்யப்படுவதாலும் மீன்இனங்களின் மற்றும் கடல் வாழ் உயிரினங்களின் இனப்பெருக்கமும் வளமான வாழ்வும் பாழாகிவிடும். மீன் இனங்களும் ஏனைய கடல் வாழ் உயிரினங்களும் அழிவுகளுக்கு உள்ளாகும் அபாயம் ஏற்படும்.

மேற்படி சேது கால்வாய் வெட்டப்படுவதால் இலங்கையின் வடக்கு கிழக்கு கரையோரங்கள் பாரிய மண்ணரிப்பால் பாதிக்கப்படும். வடக்கின் நன்னீர் கீழிறங்கி உவர்நீர் மேலோங்கும் ஆபத்து ஏற்படும். அத்துடன் இது வரை வடபுலம் சந்தித்திராத நில நடுக்கம் ஏற்பட வாய்ப்புக்கள் அதிகரிக்கும். வெட்டப்படும் கால்வாய்க்கும் அதன் மூலம் பிரயாணம் செய்யும் கப்பல்களுக்கும் வழங்கப்படும் இந்தியக் கடற்படைப் பாதுகாப்புக்கள் காரணமாக வடக்குகிழக்கு கடற்பரப்பு கண்காணிப்பிற்கு உள்ளாக்கப்படும். அதனால் அப் பிரதேச மீனவர்கள் சுதந்திர தொழில் செய்ய முடியாதவர்கள் ஆவார்கள்.

இவ்வாறு இச் சேது சமுத்திரக் கால்வாய்த்திட்டத்தால் வடக்கு கிழக்கு மீனவர்களும் மக்களும் புவியியல் சூழலில் கடுமையான பாதிப்புகளையே பெறுவர். இலங்கைத் தமிழர்களுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கும் திராவிட இயக்க தமிழ் இனப் பாதுகாப்புப் பேசும் தலைவர்கள் தமிழ் நாட்டில் சேது சமுத்திரக் கால்வாய் வெட்டுவதால் ஏற்படப் போகும் அபாயங்கள் அழிவுகள் பற்றி மௌனமாக இருந்து வருகிறார்கள். அங்குள்ள மீனவர்கள் கரையோர மக்கள் மற்றும் சுற்றுச் சூழலியளார்களின் எதிர்ப்புக்களைக் கூட கவனத்தில் கொள்ளாது மத்திய அரசின் செயலை ஏதோ தமிழ் நாட்டிற்கான வரப்பிரசாதம் என வரவேற்று மகிழ்ந்து நிற்கிறார்கள். இங்கும் இதுவரை சேது சமுத்திரக் கால்வாய் வெட்டும் திட்டத்திற்கு வடக்கு கிழக்கின் தமிழர் தலைமைத்துவங்களிடமிருந்து

தொர்ச்சி 12ம் பக்கம் ➡

# மேல்கொத்மலைத்திட்ட அதிகாரிகளின் உறுதி மொழிக் கடிதங்களை ஏற்க மக்கள் மறுப்பு

மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டங்களை வீடியோ படமெடுத்த அவற்றில் பங்கு கொண்டவர்களை அடையாளம் கண்டு மிரட்டும் நடவடிக்கைகளை தலவாக்கலையிலுள்ள மேல்கொத்மலைத்திட்ட காரியாலயம் செய்துவருவதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இது ஜனநாயக விரோத நடவடிக்கை ஆகும். இவ்வாறான ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கைவிட்டு மக்களின் எதிர்ப்பை மதித்து மேல்கொத்மலைத்திட்டத்தை கைவிட வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் அவர்களின் உறுதியான எதிர்ப்பு போராட்டங்களினால் அத்திட்டத்தை தடுத்து நிறுத்துவார்கள். மேல்கொத்மலைத் திட்ட அதிகாரிகள் மேற்கொண்டுவரும் அராஜக நடவடிக்கைகளுக்கும் பதிலடி கொடுப்பார்கள்.

மேல்கொத்மலைத்திட்டத்தினால் பாதிக்கப்படுபவர்களுக்கு காணிவழங்குவதாக உறுதியளிக்கும் கடிதங்களை வழங்குவதற்காக மேல்கொத்மலைத்திட்ட அதிகாரிகளால் யூன் மாதம் 16ஆம் திகதி கூட்டப்பட்ட கூட்டத்தில் மக்கள் பலத்த எதிர்ப்புகளை காட்டியுள்ளனர். அவ்வாக் குறுதிக் கடிதங்களை மக்கள் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டார்கள். அதே வேளை மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் மேலும் எதிர்ப்பு போராட்டங்களை நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கவுள்ளது.

தென்னாபிரிக்காவில் இயங்கும் உலக நீர்த்தேக்கங்கள் பற்றிய ஆணைக்குழுவிற்கு மேல்கொத்மலைத்திட்டத்தினால் ஏற்படப்போகும் அழிவுகள் பற்றி மே.எ.ம.இ முறைப்பாடு செய்துள்ளது. இதன் மூலம் சர்வதேச ரீதியாக அதன் பாதிப்புகளை எடுத்துரைக்கவும் அதன் மூலம் ஆதரவுப் போராட்டங்களை முன்னெடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன.

# பொதுக்கட்டமைப்பின் பலாபலன்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைய வேண்டும்



சுனாமிப் பேரழிவு இடம் பெற்று ஆறு மாதங்கள் கடக்கும் நிலையிலேயே அதிலிருந்து மக்களை மீட்பதற்கான பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கை கைச்சாத்திடப் பட்டிருக்கிறது. சுனாமிக்குப் பின்னரான செயற்பாட்டு முகாமைத்துவக் கட்டமைப்பு (Post- Tsunami Operational Management Structure- P-TOMS) அரசாங்கம் புலிகள் இயக்கம் ஆகிய இருதரப்பாலும் 24-06-2005 கைச்சாத்திடப்பட்டுள்ளது. 2002ம் ஆண்டு அன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவும் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரனும் கைச்சாத்திட்ட புரிந்துணர்வு- யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்குப் பின்பு தற்போதைய அரசாங்கமும் புலிகள் இயக்கமும் இப் பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் கைச்சாத்திட்டுள்ளனர். இது இருபது வருட யுத்தத்திற்குப் பின் இடம் பெற்றுள்ள வரலாற்று முக்கியத்துவம் கொண்ட ஒன்றாகும்.

ஏனெனில் இத்தகைய ஒரு பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் சுனாமி இடம் பெற்ற ஒரு மாதத்திற்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். மனித நேய அடிப்படையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாவட்டங்களின் கரையோர மக்களின் மறுவாழ்வுக்கே இப் பொதுக்கட்டமைப்



பாகும். ஆனால் பேரினவாத ஜே.வி.பி.யும், பிக்குமாரின் ஜாதிகஹெல உறுமயவும் இப் பொதுக்கட்டமைப்பை வெறித்தனமான இனவாத நிலை நின்று எதிர்த்து வந்ததன் விளைவாக இழுத்தடிப்பு நிலை ஏற்பட்டது. இருப்பினும் ஜே.வி.பி. யூன் 15ம் திகதி காலக்கெடு விதித்து அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பின்பும் ஜனாதிபதி மிகத்துணிச்சலுடன் பொதுக்கட்டமைப்பை பின்வாங்காது உருவாக்கியுள்ளமை வரவேற்கத்தக்கதாகும். இதே துணிச்சலை ஜனாதிபதி அடுத்த கட்டத்திற்கு முன்னெடுத்து தேசிய இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க வேண்டும் என்பதே சமாதானத்தை விரும்பும் அனைத்து மக்களினதும் விருப்பமாகும்.

அதே வேளை பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளனவற்றின் அடிப்படையில் உயர்மட்டக் குழு, மாவட்டக்குழு, பிரதேசக்குழு என்பனவற்றின் மூலமான நிவாரணம், புனரமைப்பு, புனர்வாழ்வு என்பன பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடைய வேண்டும்.

வடக்கு கிழக்கின் ஆறு மாவட்டங்களை உள்ளடக்கி நிற்கும் இப் பொதுக்கட்டமைப்பின் மூலமாகவே முன்நூறு கோடி அ. டொலர்கள் நிதி பயன்படுத்தப்படவுள்ளது. இங்கே தான் பொதுக்கட்டமைப்பின்

தொடர்ச்சி 12ம் பக்கம் ➡

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வவுனியா வளாக மாணவர் அவல நிலை!

## முதல்வர் மீது கணை தொடுக்கும் மாணவர்கள்

யாழ்-பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் சீரழிந்த நிலையிலேயே இருந்து வருகின்றது. ஆரம்பத்தில் வளாகமாக ஆரம்பிக்கும் பெரும்பாலான வளாகங்கள் வருடா வருடம் வளர்ச்சி பெற்று விரைவிலேயே முழுமையான பல்கலைக்ழகமாகிக் கொள்வதையே காணமுடியும். இலங்கையின் பல பாகங்களில் குறிப்பாகத் தெற்கில் இதனைக் காணலாம். ஆனால் வவுனியா வளாகம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்களுக்கு மேலாகியும் எவ்வித வளர்ச்சியோ முன்னேற்றமோ இன்றி பெயரளவில் (பெயர்ப்பலகை கூட பரிதாபகரமாக உள்ளது) வளாகமாகவே இருந்து வருகிறது.

இவ் வளாகத்தின் ஒவ்வொரு பிரிவும் வவுனியாவில் ஒவ்வொரு இடங்களிலும் இயங்கி வருகிறது. பூங்காவீதி, உள்வட்ட வீதி, குருமன்காடு ஆகிய பகுதிகளில் வெவ்வேறு தேவைகளுக்காக ஏற்கனவே இருந்து வந்த கட்டிடங்களிலேயே விரிவுரைகள் இடம் பெறுகின்றன. விரிவுரை மண்டபங்களோ, நூலக கட்டிட வசதிகளோ, மாணவர் தங்குமிட விடுதிகளோ, விரிவுரையாளர்களுக்கான பொது அறைகளோ, ஆய்வுகளை மேற்கொள்ளக் கூடிய சூழல் கொண்ட கூடங்களோ எதுவுமே இல்லை. வளாக நிர்வாகத்திற்கான கட்டிடம் மட்டும் கட்டப்பட்டுள்ளது. முதல்வருக்கான சகல வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. வவுனியாவின் வெப்பத்திலிருந்து தப்ப குளிரூட்டப்பட்ட அறைகள் கூட நிர்வாகப் பகுதியில் அமைக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது. ஆனால் மாணவர்களின் நிலை பரிதாபகரமாகவே தொடர்கிறது. வெளி இடங்களில் அதிக வாடகை கொடுத்தே மாணவர்கள் தங்கியிருந்து படித்து வருகின்றார்கள். சாப்பாடு அதிக விலை கொடுத்து பெறுகிறார்கள். வளாகக் கட்டிடங்களில் உரிய உணவகங்கள் இல்லை. கற்றலுக்கு அப்பால் மாண்வர்கள் தமது உடற்பயிற்சிகளில் ஈடுபடவோ விளையாட்டுகளில் பற்கு பெறவோ வளாகத்திற்கென ஒரு விளையாட்டு மைதானம் இல்லை.

இத்தனைக்கும் வவுனியா பம்மைமடு பகுதியில் வவுனியா வளாகத்திற்கென ஒதுக்கப்பட்ட 100 ஏக்கர் காணியில் உரிய கட்டிடங்களை உரியவாறு கட்டி சகல வசதிகளையும் ஒரே இடத்தில் பூர்த்தி செய்ய முடியும். ஆனால் இந்த விடயம் பற்றி வளாக நிர்வாகமோ அதன் முதல்வர்களாக இருந்தவர்களோ அல்லது இன்று இருக்கும் அம்மையாரோ எவ்வித சிரத்தையும் அக்கறையும் எடுக்கவில்லை. இதனால் மாணவர்கள் இக்குறைபாடுகளையும் சீரழிவுகளையும் நிவர்த்தி செய்யக்கோரி அடிக்கடி பகிஷ்கரிப்புப் போராட்டங்களை நடாத்தி வந்துள்ளனர். தற்போதைய போராட்டம் நான்காவது தடவையாக நடைபெறுகிறது.

பம்பைமடுவில் ஒதுக்கப்பட்ட காணியில் கட்டிடம் அமைக்க ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்தே பூங்கா வீதியில் நிர்வாகத்திற்காக மூன்று மாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. வளாகத்தையும் மாணவர்களையும் நிர்வகிக்கவே நிர்வாகிகளும் அதற்குரிய கட்டிடங்களும். ஆனால் அதே மாணவர்கள் அங்குமிங்கும் அலைந்து அங்காடி வியாபாரிகள் போன்று அரைகுறைக் கட்டிடங்களில் எவ்வித அடிப்படைவசதிகளும் இன்றி எவ்வாறு உயர் கல்வியை கற்று முடிக்க முடியும்.

ஒரு புறம் பேரினவாதம் பாராட்டும் அரசாங்கம் அக்கறையின்றி இருந்து வருகிறது. அதேவேளை யாழ் பல்கலைக்கழக உயர் நிர்வாக பீடமோ அல்லது வளாக முதல்வரும் அவரை சுற்றி இருப்போரும் மறு புறத்திலே அசட்டைத்தனமாக மாணவர்களது கோரிக்கைகளை உதாசீனம் செய்வது ஏன்? இவர்களுக்கும் அப்பால் தமிழ் தமிழ் என்று கூறிக் கொண்டு எல்லா வாக்குகளையும் எங்கள் சாக்குகளுக்குள்ளே போடுங்கள் என வாங்கிச் சென்ற தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த தமிழ் மாணவர்களின் அவல நிலையும் அதற்கான கோரிக்கைகளும் சிறிய விடயங்களாகவே உள்ளன. தாங்கள் இவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள் என்றும் கூறுகின்றனர்.

எனவே மாணவர்கள் தமது கோரிக்கைகளின் நியாயத்தன்மையை வவுனியா பிரதேச மக்களுக்கும் தமது பெற்றோர் உறவினர்களுக்கும் எடுத்து விளக்கி மாணவர்கள்-மக்கள் இணைந்த பரந்த வெகுஜனப் போராட்டமாக முன்னெடுத்தால் மட்டுமே உரிய இடங்களுக்கு உறைக்கச் செய்யலாம். போராட்டங்களில் ஒரு சிறு பகுதி நேரத்தை ஒதுக்கி முகம் காட்டி ஊடகங்களுக்கு போஸ் கொடுத்து மறையும் பா.உ.க்களையோ பிரமுகர்களையோ மட்டும் நம்பினால் அடுத்த பத்து வருடங்களில் கூட பம்மைமடுவில் ஒதுக்கப்பட்ட வவுனியா வளாகக் காணியில் கட்டிடங்கள் எழும்பமாட்டாது. வன்னிப் பிரதேசத்திற்கான பல்கலைக்கழகம் என்பது சாத்தியமாகுவதற்கு முதலில் பம்மைமடுவில் ஒதுக்கப்பட்ட காணியில் முழுமையானது விரிவுபெறக் கூடியதுமான வளாகம் அமையப் பெறல் வேண்டும். அதுவே இன்றைய தேவையாகும்.

# மலையகத்தில் கசிப்புக்காரர்களின் அட்டகாசம்

மலையகத் தோட்டப்புறங்களில் கசிப்பு காரர்களின் அட்டகாசம் கூடியுள்ளது. அவர்களுக்கு தொழிற்சங்கத் தலைமைகளின் ஆதரவும் வழிகாட்டலும் இருந்து வருகிறது. இ.தொ.காவின் தலைமையில் பாதுகாப்புடன் பல கசிப்பு உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும் இயங்கி வருகின்றனர்.

சாராயத்தால்தான் மலையகம் அழிகிறது என்று காலஞ்சென்ற சௌ. தொண்டமான் கூறினார் இன்று அவரது பேரன் கசிப்புக்காரர்களுக்கு ஆதரவாகவும் பாதுகாப்பாகவும் இருந்துவருகிறார்.

கசிப்பு விற்பனையால் சாதாரண தொழிலாளிகள் சமூகரீதியாகவும் சுகாதார ரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கசிப்பு என்பது சுகாதார முறையாக அரசாங்க அனுமதியுடன் வடிக்கப்படுவதில்லை. அது சுகாதாரத்திற்கு கேடானதாகும். எனினும் குறைவான விலைக்கு விற்கப்படுவதாலும் ஏனைய சட்டரீதியான சாராயத்தைவிட அதிகமாக வெறிக்க கூடியதாக இருப்பதாலும் தொழிலாளர்கள் கசிப்பு பாவனைக்குள் மாட்டிக் கொண்டுள்ளனர்.

கசிப்பு காய்ச்சுபவர்கள் அவர்களின் குற்றச்செயல்களாலும் அடாவடித்தனங்களாலும் தோட்டப்புறங்களில் ஆதிக்கம் செலுத்திவருகின்றனர். அவர்களின் குற்றச்செயல்களை தமது அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தும் நோக்கில் தொழிற்சங்கத் தலைமைகள் குறிப்பாக இ.தொ.கா தலைமை அவர்களுக்கு ஆதரவாகவும் அனுசரணையாகவும் செயற்பட்டு வருகிறது.

பொலிஸாரினால் கசிப்புகாரர்களினால் கைது செய்யப்படாமலும் கைது செய்யப்பட்டாலும் இலகுவாக தப்பித்துக் கொள்ளவும் தொழிற்சங்கத் தலைமைகளால் அழுத்தம் கொடுக்கப்படுகின்றன.

கசிப்புக்காரர்களிடமிருந்து தொழிற்சங்கத்தலைமைகள் பணத்தை பெற்றுக் கொள்வதுடன் அவற்றின் தேவைக்காக கசிப்புக்காரர்களை குற்றச்செயல்களில் ஈடுபடுத்தியும் வருகின்றன. தொழிற்சங்க அரசியல் எதிரிகளை தாக்கவும் கசிப்புக்காரர்களை தொழிற்சங்கத் தலைமைகள் பயன்படுத்தி வருகின்றன.

இவ்வாறன நிலைமை சிங்கள மக்கள் வாழும் கிராமங்களிலும் இரட்ணபுரி, கேகாலை, கண்டி, ஆகிய மாவட்டங்களிலுள்ள தோட்டப்பகுதிகளிலும் இருக்கின்றன. கடந்த சில வருடங்களாகவே மத்திய மலைநாட்டிலுள்ள தோட்டங்களிலும் இந்நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இன்று மலையகத் தோட்டங்களில் பரவலாக கசிப்பு விற்பனை அமோகமாக நடைபெறுகிறது.

நாவலப்பிட்டியிலிருந்து உயர்ந்த பகுதிகளில் அமைந்துள்ள வட்டவளை, கடுகஞ்சேனை, பத்தனை, கொட்டகலை, அட்டன் பகுதி தோட்டங்களில் கசிப்பு காய்ச்சப்படுகின்றன. கசிப்பு காய்ச்சுவதிலும் வியாபாரத்திலும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகின்றனர். அபாயகரமான கசிப்பு உற்பத்தி முறையில் கசிப்பு குழாய்கள் வெடித்து காயமடைந்து இறந்தவர்களை வெளியே தெரியாமல் அவ்விடங்களில் புதைக்கப்பட்ட சம்பவங்கள் பற்றிய தகவல்களும் கிடைத்துள்ளன. அத்தொழிலில் ஈடுபடுத்தப்படும். சிறுவர்களும் அவர்களின் குடும்பத்தினரும் கசிப்பு குடிப்பழக்கத்தில் ஈடுபடுகின்றனர்.

கசிப்பு குடிப்பழக்கத்திற் உட்பட்டவர்கள் அதற்கு அடிமையாகிவிடுகின்றனர். அதனால் உடல் உள ரீதியாகப் பாதிக்கப்படுவதுடன் பொருளாதார ரீதியாகவும் பாதிப்பிற்குட்படுகின்றனர். அதனை குடிப்பவர்கள் நோய் வாய்ப்பட்டு குறைந்த வயதிலேயே இறக்கின்றனர். குடும்பங்களில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. பல இடங்களில் கசிப்புக்காரர்கள் ஆட்கடத்தல்கள் கொலைகள் பாலியல் வல்லுறவுகள் போன்ற குற்றச் செயல்களில் ஈடுட்டுள்ளனர்.

இதனை மலையகத்திலிருந்து ஒழிப்பதற்கு மக்களுக்கு அறிவூட்டுவது மட்டுமன்றி கசிப்புக்காரர்களுக்கு எதிராகவும் போராட வேண்டியிருக்கிறது.

# கொள்ளையோ கொள்ளை! பெற்றோலில் கொள்ளை!!

தற்சமயம் பெற்றோலிய விநியோகத்தில் மூன்றில் ஒரு பகுதியையே இந்திய நிறுவனமான ஐ.ஒ.சி கொண்டுள்ள போதும் அது பெரும் இலாபத்தில் இயங்குகிறது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மூன்றில் இரண்டு பகுதியை விநியோகிக்கின்ற போதும் நட்டத்தில் இயங்குவதாகக் கூறப்படுகிறது. அதனால் அடிக்கடி விலையேற்றங்கள் செய்யப்படுகின்றன.

ஐ.ஒ.சியின் இலாபம் 2004ம் நிதியாண்டில்51கோடி81 இலட்சமாக விருந்தது. 2005ம் நிதியாண்டில் ஐ.ஒ.சியின் சுத்த இலாபம் 232 கோடி 92 இலட்சமாக அதிகரித்துள்ளது. இந்த இலாபம் இந்தியாவுக்கு படிப்படியாக அனுப்பப்படுகிறது. ஒருகையால் தரும் உதவியை மறுகையால் எடுப்பதென்பது சகல முதலாளித்துவ நாடுகளின் நடைமுறையாகும். இந்திய முதலாளித்துவம் இதற்கு விதிவிலக்கல்ல.

இவ்வாறு பெற்றோலியத்துறையில் லாபம் பெறுவதாலேயே எஞ்சியுள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மூன்றில் ஒரு பங்கினையும் பாரத் ஒயில் கம்பனி மூலம் அமுக்கிக் கொள்ள இந்தியா முயன்று வருகிறது. பெற்ற தாயையும் விற்கக் தயாரான இலங்கை அரசாங்கம் ஆமாம் போட்டு நிற்கிறது. நாட்டின் வளங்களும் அரச கூட்டுத்தாபன முதலீடுகளும் அந்நியர் கைகளுக்குப் போவது பற்றி ஆளும் வர்க்க அதிகார வெறிபிடித்தோருக்கு அக்கறை ஏன்தான் வரவேண்டும்?

# நாலும் நடக்கும் உலகிலே

நற்குணன்

## இந்தியக் கடைக்கண் பார்வை

இந்திய உள்நாட்டு அமைச்சின் அறிக்கையில் விடுதலைப்புலிகள் தமிழகத்தையும் இணைத்த ஒரு தனித் தமிழ் நாட்டை அமைக்க முயல்வதாகத் தெரிவிக்கப்பட்டதையிட்டு இங்கு எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்டுள்ளன. இது திட்டமிட்ட பொய் என்பது எல்லாரும் அறிந்ததே. எனினும் ஏன் இத்தகைய பொய் பரப்பப்படுகிறது என்பது பற்றி நாம் விசாரிப்பதில்லை.

இந்திய அரசாங்கப் பிரமுகர்கள் இலங்கையின் வடக்குக்கிழக்குப் பற்றித் தாங்கள் அக்கறையுடன் இருக்கிறதாக அறிவிக்கும் போது நம்மிற் பலர் அகமகிழ்கின்றோம். அது எத்தகைய அக்கறை என்பதை நாம் எவ்வளவு தூரம் கவனத்தில் எடுக்கிறோம்? இந்திய ஆளும் வர்க்கத்தின் இலக்கு விடுதலைப் புலிகளை நசுக்குவது மட்டுமல்ல. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை நசுக்குவதுடன் இலங்கை அரசை இந்தியாவின் அடிமையாக்குவதே. எனவே தமிழ் மக்களின் விடுதலைப்போராட்டம் வெல்லாமலும் இலங்கை பற்றிய தமது திட்டங்கள் நிறைவேறும் வரை தோற்காமலும் கவனித்துக் கொள்ளுவார்கள்.

## முந்தி விட்டார் சங்கரியார்!

அமைச்சர் கதிர்காமரை விட அதிகமாக இன்று பேரினவாத ஊடகங்களால் மெச்சப்படுகிறவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பேர்ப்பலகையின் சட்டரீதியான உரிமைக்காரருமான ஆனந்த சங்கரியாவார். விடுதலைப்புலிகள் எதைக் கேட்டாலும் கொடுக்க வேண்டாம் என்று சொல்லுவதில் அவர் சில சமயம் ஜே.வி.பியையும் முந்தி விடுகிறார். இப்போது ஜே.வி.பியைச் சமஷ்டிக் கோரிக்கைக்கு இணங்கச் செய்வதற்கு அவர் முயல்கிறதாகச் சொல்லியுள்ளார். அவர் ஜே.வி.பியின் காதில் பூச்சுற்றப் பார்க்கிறாரா தமிழ் மக்கள் காதில் பூச்சுற்றப் பார்கிறாரா தெரியவில்லை. விரக்தியும் அந்நிய எசமான விசுவாசமும் யார் யாரை என்ன வெல்லாம் செய்யத் தூண்டுகின்றன!

## வடிகட்டின கவிதை

யஸர் அரஃபாத் சாகுந்தறுவாயில் இருந்த போது அவரது உடல் நிலை பற்றி அவருடன் இருந்த ஒரு மதகுரு பத்திரிகையாளர்கட்குச் சொன்ன சொற்கள் அவர் உயிருடனிருக்கிறார், அவர் நோய் வாய்ப்பட்டுள்ளார், அவருடைய நிலைமை மோசமாக உள்ளது என்றாலும் அவர் உயிரோடிருக்கிறார். அவர் கடவுளின் கைகளில் இருக்கிறார்.

இது முதலில் என்ன மொழியில் சொல்லப்பட்டதோ தெரியாது. ஆங்கில வாயிலாகவே நமக்குக் காணக் கிடைத்தது. என்றாலும் கவிதைக்குரிய சாயல் கொண்டதாக யாருக்கும் தோன்றவில்லை. ஆனால் இங்கே சிலபேர் கொண்டாடுகிற சுந்தரராமசாமி என்கிற மேதாவிக்குத் தோன்றுகிறது. அவர் இப்போது உவமையோ உவமானமோ படிமமோ அழகியலைக் கூட்டுவதற்கான வேறு முயற்சியோ சொற்களை மாற்றிப் போடும் தந்திரங்களோ இல்லாத கவிதையைத் தேடிப் போய்க்கொண்டிருக்கிறார். முன்பு அவருடைய திறனாய்வுக் கட்டுரைகளில் தூய இலக்கியவாதிகளைத் தேடிக் கொண்டிருந்தார். இப்போது தூய இலக்கிய வடிவங்களைத் தேடுகிறார் போல அவர் சொல்லுகிற விஷயங்களைப் பார்க்கும் போது ஒன்றைச் சொல்லத் தோன்றுகிறது. சுந்தரராமசாமிக்கும் சுத்தமாகக் கவிதை பற்றி ஒன்றுமே தெரியாது. இதை நான் வேறு யாரையாவது பற்றிச் சொல்லியிருந்தால் அதுவும் அவருக்குக் கவிதையாகவே தோன்றும் என்று நம்பலாம்.

## இனவெறியால் மனிதரை இழிவுசெய்தல்

அமெரிக்கப் படைகள் கியூபாவில் உள்ள தமது குவான்டனாமோ ராணுவத் தளத்தில் மறித்து வைக்கப்பட்டிருக்கும் அல் கைடா சந்தேக நபர்களை நடத்திய விதம் பற்றிய குற்றச்சாட்டுக்கள் கடந்த இரண்டு வருடங்களாகச் சொல்லப்பட்டாலும் அங்குள்ள படையினர் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இப்போது முஸ்லிம்களின் புனித நூலான குர்ஆனைக் கழிப்பறையில் வைத்தும் குறைந்தது ஒரு குர்ஆன் பிரதியையாவது நீரால் அடித்துக் கழித்து விட்ட செய்தி உலக முஸ்லிம்களைக் கோபத்துக்குள்ளாக்கியுள்ளதும் ஆஃப்கானிஸ்தானிலும் பாக்கிஸ்தானிலும் நடந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அசம்பாவிதங்களும் நாம் அறிந்தவை. அமெரிக்கப் படைகள் இஸ்லாத்தை அவமதிப்பதும் முஸ்லிம்களைக் கேவலப்படுத்துவதும் ஒரு சில ராணுவச் சிப்பாய்களது மன வக்கிரம் என்று தட்டிக் கழித்துவிட முடியாது.

இலங்கையில் வடகிழக்கில் ராணுவத்தினரது நடத்தை எவ்வளவு தூரம் ஆளும் வர்க்கத்தால் வளர்த்தெடுக்கப்பட்ட பேரினவாதத்தின் விளைவோ அதுபோலவே அமெரிக்க படையினது நடத்தையுமாகும்.

இவ்வாறான விடயங்களில் இலங்கை அரசின் மெத்தனமான போக்குக்கு அமெரிக்க அரசின் மெத்தன்மான போக்குக் கொஞ்சமும் சளைத்ததல்ல. இன,மத வெறியைத் தூண்டிவிடுவதில் பெரிய ஊடகங்கள் நடந்து கொள்கிற விதங்களும் வித்தியாசமானவையல்ல.

## தானறியாச் சரித்திரம்

மே மாதம் ஞாயிறு தினக்குரலில் கிளின்ற்றனின் கவனத்துக்குரியது என்று சொல்லி ஏதேதோ எல்லாம் எழுதியுள்ளார் பத்தி எழுத்தாளர் பீஷ்மர். விடுதலைக்காகப் போராடும் தேசங்கள் ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரத்தைப் பிரகடனம் செய்யலாம் என்பதற்கு முன்மாதிரியாக றொடீசியா (இப்போதைய ஸிம்பாப்வே) நாட்டைக் குறிப்பிட்டு அவர் எழுதியிருக்கிறார். றொடீசியாவில் ஒருதலைப்பட்சமாகச் சுதந்திரம் 1960களின் நடுப்பகுதியில் பிரகடனம் செய்யப்பட்டது. அதைச் செய்தவர்கள் விடுதலை இயக்கம் எதையும் சேர்ந்தவர்களல்ல. மாறாக வெள்ளைச் சிறுபான்மையினரின் ஆதிக்கத்தில் இருந்த றொடீசியாவின் பிரதமரும் நிறவெறியருமான இயன் ஸ்மித் ஆவார். அந்தப் பிரகடனத்தின் நோக்கம் பிரிந்தானியா ஸிம்பாப்வேயில் ஆட்சி அதிகாரத்தைக் கறுப்பர்களிடம் கையளிக்காமல் தடுப்பது மட்டுமே. இதற்கு பிரித்தானிய ஆளும் வர்க்கத்தின் ஆசிகளும் இருந்தன என்பதற்கும் பின்னைய நிகழ்வுகள் சான்று கூறின. பீஷ்மர் என்ற பேரில் எழுதுகிறவருக்குத் தான் வாழும் நாட்டின் அரசியல் வரலாறு பற்றிய தெளிவே போதாது. இந்த அழகில் தானறியாத உலக வரலாற்றையும் அல்லவா குழப்பியடிக்கிறார் கோமாளியார்.

தானறியாச் சிங்களம் தன் பிடரிக்குச் சேதம் என்று ஒரு பழமொழி உண்டு.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# ஒய்வுபெற்ற போராளியா? ஒய்வுபெற்ற போராட்டமா?

2003ல் வெளிவந்த ஈழப்போராட்டத்தில் எனது சாட்சியம் என்ற நூலில் கொஞ்சம் பொய்ச்சாட்சியமும் அளிந்த சி.புஷ்பராஜ் என்ற முன்னாள் போராளியைத் தீராநதி என்ற குமுதம் வெளியீடு செல்விகண்டுள்ளது. அதில் அவர் ஈழப்போராட்டம் முடிந்து விட்டது என்று சொல்லி இந்திய மேலாதிக்கவாதிகளை மகிழ்வித்துள்ளார். இந்தத் தேசியவாதிகள் எல்லாருக்கும் விளங்காதது ஏதெனில் தனித்தமிழீழத்துக்கான அவர்களது போராட்டம் எப்போதோ ஓய்ந்து விட்டாலும் தமிழ் மக்களின் விடுதலைக்கான போராட்டம் பூரணசுயநிர்ணய அடிப்படையிலான தீர்வு கிட்டும் வரை ஒயாது என்பது தான். சில போராட்ட இயக்கங்களும் போராளிகளும் ஒய்வு பெறலாம் ஒதுங்கிச் செல்லாலம் துரோகமும் செய்யலாம். எனினும் நீதிக்கான போராட்டங்கள் என்றும் ஒய்வதில்லை.

இந்த விதமாகத் தங்கள் இயலாமையை ஒரு முழுச் சமூகத்தின் மீதும் சுமத்துவது தேசிய இன விடுதலைப் போராட்டத்தில் மட்டுமில்லாமல் இடதுசாரி இயக்கத்திலும் நடந்து வந்த கதை தான்.

# மின்சார சபையும் மறுசீரமைப்பும்

இப்பொழுது தனியார் மயம் என்ற சொற்பதம் மக்களின் வெறுப்புக்குள்ளானது என்பதால் அதை நாசூக்காக மறுசீரமைப்பு அல்லது முகாமைத்துவம் என்று கூறுகிறார்கள். ஜே.வி.பி உட்பட சகலரும் மின்சார சபையை மறுசீரமைப்புச் செய்ய இணங்கியுள்ளனர். எனவே படிப்படியாக இ.மி.ச. தனியாரிடம் போய்ச் சேர சகலரும் பச்சைக் கொடி காட்டியுள்ளனர்.

அண்மைக்காலமாக இலங்கை மின்சார சபை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் புகையிரதத்திணைக்களம், இ.போ.ச போன்ற நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாகவும் அதைச் சரிப்படுத்த தனியார் மயமே தீர்வு எனவும் உலகவங்கியின் கட்டளைப்படி மாறிமாறி வந்த அரசாங்கங்கள் கூறி வந்துள்ளன. உலக வங்கி 1953 ஆண்டு அரிசி, தபால், போக்குவரத்து விலை, கட்டண அதிகரிப்பை சிபார்சு செய்ததிலிருந்து இன்று வரை விலை உயர்வுக்கும் கட்டண அதிகரிப்பிற்கும் ஆணை பிறப்பித்தவாறே உள்ளது.

அதே உலக வங்கி சகல வியாதிகளுக்குமான தீர்வாகத் தனியார் மயப்படுத்தலையே ஆலோசனையாக கூறிவருகிறது. ஒரு நிறுவனம் நட்டத்தில் இயங்குகின்ற தென்றால் அதற்கான காரணங்களை அறிய வேண்டும். சரியான நிருவாகத்தின் கீழ் நிறுவனத்தை நட்ட மின்றி இயங்கவைக்க முடியும். புதிய நிர்வாகிகளை நியமித்து கறாராக இயங்கவைப்பதே உரிய முறை. ஊழல் செய்வோரை எவ்வகையிலும் அனுமதிக்காது உறுதியான முடிவுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். நிறுவனம் சம்பந்தப்பட்ட முக்கிய தகவல்களை மக்களுக்கு மறைத்து நட்டம் நட்டமென ஒப்பாரிவைப்பது மாறி மாறி வந்த ஆட்சியாளர்களின் வழமையாகி விட்டது மட்டுமன்றி தனியார் மயத்துக்கு தகுந்த சாட்டாகவும் இந்த நட்டப் புராணம் பாடப்படுவதும் ஒரு வழிமுறையாகி விட்டது.

நட்டத்தில் இயங்குவதாக கூறிக் கொண்டு தமது அடிவருடிகளை பெரிய சம்பளத்தில் அமர்த்தி வந்துள்ளனர். அந்த நிறுவனங்களில், தேவைக்கு மேலதிகமாக நியமனம் செய்த யூஎன்.பியும் சரி, சி.ல.சு.கட்சியும் சரி அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்கவேண்டும்.

இரண்டாவது பாரிய பிரச்சினை கடன். பேரினவாத யுத்தத்தை மும்முரமாக நடத்திய இரண்டு அரசாங்கங்களும் இராணுவச் செலவை உச்ச நிலைக்கு ஏற்றியுள்ளனர். அதனால் உள் நாட்டிலும் வெளி நாட்டிலும் கடன் பெறப்பட்டது.

இராணுவம் பெற் றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கோடிக் கணக்கான ரூபாய் கொடுக்குமதி யாகவுள்ளது. இலங்கையின் முப்படையினரும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு கொடுக்க வேண்டிய கடன் தொகை எவ்வளவு என்பதை விபரமாக அரசாங்கம் வெளிப்படுத்துமா? பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு பல்வேறு அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பன கோடிக் கணக்கில் கொடுக்குமதியாகவுள்ளன. அரசு இந்த விபரங்களை வெளியிடாது மூடிமறைக்கின்றது.

இதே போலவே மின்சாரசபைக்கும் முப்படை அமைப்புகளும் அரச திணைக்களங்களும் கூட்டுத் தாபனங்களும் கோடிக் கணக்கில் கொடுக்குமதியாகவுள்ளது,

ஒவ்வொரு அரச திணைக்களமும் கூட்டுத்தாபனமும் யார் யாருக்கு எவ்வளவு கொடுக்க வேண்டியுள்ளதென்பதை வெளியிடாது மூடி மறைப்பதில் பிரதான கட்சிகளான யூஎன்.பியும், சி.ல.சு.கட்சியும் ஒத்துழைத்தே வந்துள்ளன.

ஜே.வி.பி யும் இவர்களுடன் கூட்டுச் சேர்ந்து விபரங்களை மக்களுக்குத் தெரியாதவாறு மூடி மறைக்கின்றனர். மக்களை ஏமாற்றி மடையர்களாக வைத்திருப்பதில் இவர்களிடையே ஒற்றுமை நிலவுகிறது.

அரச நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்களில் நிலவும் ஊழல்கள் வெளிக்கொணரப்படல் வேண்டும். இவற்றில் ஏற்பட்டுள்ள அவல நிலமைக்கு மாறி மாறி வந்த அரசாங்கங்களே பொறுப்பேற்கவேண்டும். இந்த நிறுவனங்களை மறுசீரமைப்புச் செய்வது என்பது சுத்த ஏமாற்றாகும். இந்த நாட்டில் நீடித்து நிலவும் அரசியலமைப்பு மக்களுக்கும் நாட்டிற்கும் தகுந்தவாறு மாற்றியமைக்கப்படாது விட்டால் தாராளமயம், தனியார்மயம், உலகமயம் என்ற மாயவித்தைகளால் எவ்வித பயனும் கிடைக்க மாட்டாது. தொடர்ந்தும் உள்ளூர் சொத்து சுகம், சுரண்டல் கொண்டவர்களும் அவர்களுடன் கட்டி புரளும் அந்நிய மூலதனக்காரர்களுமே நன்மை பெறுவர். ஏகப்பெரும்பான்மையான மக்கள் தொடர்ந்தும் வறுமை நோய் வேலை இன்மை உட்பட இல்லாமை போதாமை ஏக்கம் பெருமூச்சு இவற்றுடன் மல்லாடி மடிந்து போகும் வாழ்க்கையைத் தான் அனுபவிக்க முடியும். இதனை மக்கள் பெரும் திரள் அரசியல் ரீதியாக உணர்ந்து செயலாற்ற முன்வரல் வேண்டும் என்பதே காலத்தின் நியாயம் முன்வைக்கும் போராட்டக் குரலாகும்.

# சாதியும் சாதித்தவையும்

எவராவது பட்டிமண்டபம் நடத்துவதற்கு தலைப்புக் கேட்டால் உடனடியாகக் கொடுக்கக் கூடிய தலைப்பு யாழ்ப்பாணத்தில் சாதிப் பிரச்சனை முடிந்து விட்டதா? இல்லையா? என்பதாகும். அதனை சற்று செழுமைப்படுத்தி சாதி முறைமை அல்லது அடிமை குடிமை முறை- என்று கையாளலாம். ஆனால் அது ஏதும் ஒரு பக்கமாக தீர்ப்புக் கூறக் கூடிய விவாதம் அல்ல.

யுத்தம் நிறுத்தப்பட்டு A9 பாதை திறக்கப்பட்டு மூன்று வருடங்கள் கடந்த நிலையில் கடந்த புத்தாண்டு தினக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் காதில் விழுந்த சில மண்வாசனை உரையாடல்களைக் கவனிக்கலாம்.

"முந்தி வருசம் பிறந்தா கைவியளம் வாங்க எண்டு ஒரு நூறு சனம் வரும். இப்ப ஒருத்தரும் வாறேல"

"இவன் கதிரன் முந்தி மேளம் அடிச்சுக் கொண்டு வந்து தான் கைவியளம் கேட்பான். இந்த முறை சத்தம் போடாம வந்து வாங்கிக் கொண்டு போறான், பிள்ளையள் அறிஞ்சால் விடமாட்டாங்களாம்."

"முந்தி கோயில் குளிர்த்தி கலியாண வீடு எண்டால் மிஞ்சிற சாப்பாடு வாங்க ஆக்கள் வரிசையா வருவினம். இல்லை எண்டாலும் கேளாதுகள். இப்ப சாப்பாடு மிஞ்சினால் கிடங்கு வெட்டித் தாக்கிறதை தவிர வேற வழி இல்லை.

"இப்ப எங்கட ஆக்கள் வெளிநாட்டில் இருந்து கொண்டு தங்கட முதுசக் காணியளை விற்கிறார்கள், 'உவங்கள்' அங்க இருந்து காசு அனுப்பி அதுகளை கண்டபடி விலை குடுத்து வாங்கிறாங்கள்"

"முந்தி தேடுவார் அற்றுக் கிடந்த வீடு வளவு, காணியெல்லாம், இப்ப உங்க கண்ட நிண்ட சாதியள் எல்லோ வாங்குதுகள்"

"வெளிநாட்டில் இருப்பவை சுகமாக இருப்பினம், இஞ்ச எங்களுக் கெல்லோ கண்ட கண்ட அயலட்டையோட இருக்க வேண்டிக்கிடக்குது."

இவை பண முதன்மைப்படுத்தப்பட்ட ஒரு சமூக மாற்றத்தின் எழுச்சி. அடிமை குடிமைகளாக, தீண்டத்தகாதவர்களாக அடையாளமிடப்பட்ட சில சமூகக் குழுக்களின் விழிப்புணர்வின் விளைவு. யாழ்ப்பாணத்தில் தொழில்சார் குழும முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த நில வாழ்வு முறைகள், அல்லது நிலப் பிரபுத்துவ முறைமைகள் சிதைக்கப்பட்டுள்ளன.

யுத்தத்தின் நேரடி விளைவுகளான பொருட்சேதம், உயிர்சேதங்களுக்கும் மறுபுறத்தில் இடப்பெயர்வுகள், புலப்பெயர்வுகள், கல்வி, தொழில் துறைசார் மாற்றங்கள் என்பன அடிப்படைவாத சமூக அமைப்பினை ஒரளவு சிதைத்து விட்டிருப்பதை வெளிப்படையாக காண முடிகின்றது.

ஆனாலும் சாதிய அடையாளங்களும் அவற்றுக்கான கருத்தியல்களும் யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் ஊடுசரடாக இன்னமும் புரையோடிய நிலையிலேயே உள்ளது.

பெருங்குடி மக்களாக தம்மைத் தாமே முடிசூடி, தற்பெருமைபேசி வாழ்ந்த உயர்சாதிக் குழுமங்கள் இன்று கையால் ஆகாத தன்மைக்கு ஆளாகி உள்நின்று குமைகின்றன.

ஆலயப் பிரவேசம், தேநீர்க் கடைப் பிரவேசம் என்று அன்று நடந்த சாதிய தீண்டாமைக்கு எதிரான போராட்டங்களின் விளைவுகள் நான்கு தசாப்தங்களின் பின்பே ஓரளவு சாத்தியமாகி உள்ளன. இந்தப் போக்கில் மனிதாபிமானம் என்பது இரண்டறக்கலக்கும் போதே வன்மம் இல்லாத உண்மையான தமிழ் சமூகம் உருவாகும் வாய்ப்பு உள்ளது. அது சாத்தியமா என்பதே சிந்திக்க வேண்டிய விடயதாகும்.

## துப்பறியும் அமைச்சர்

சிவராமைக் கொலை செய்தவர்கள் விடுதலைப்புலிகள் தான் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கூறியுள்ளார். அத்துடன் குமார் பொன்னம்பலம் கொலைக்கும் அவர்களையே குற்றங்சாட்டியிருக்கிறார். இவ்வளவு விவரம் அறிந்த அமைச்சர் ஏன் கொலையாளிகள் பற்றிய விவரங்களையும் தெரிவிக்காமலிருக்கிறார் என்று தெரியவில்லை. தினமுரசு ஆசிரியரையும் நிமலராஜனையும் கொலை செய்தபர்கள் யாரென்றும் அவர் சொல்லுவாரயின் உதவியாயிருக்கும்.

எது எப்படியாயினும் அரசியற் கொலைகளைச் செய்து விட்டு உரிமை கோராமல் இருப்பது இன்று மரபாகிவிட்டது. இதன் விளைவுகள் எங்கே கொண்டுபோய் விடும் என்பது பற்றி இக் கொலைகட்குக் காரணமனவர்கள் சிந்திப்பதாகத் தெரியவில்லை. இவர்கள் எல்லாரும் கொண்டாடும் செல்வநாயகம் சொன்னது பொருந்தும் "இன்று அவர்களுக்கு நாளை.நமக்கு"....

## வவுனியா தமிழ்த்தினப் போட்டியில் பரிசுகேடு!

கல்வித்துறையில் கீழிருந்து மேல் வரை மாணவர்கள் வசதி, உயர்வு, குடும்ப செல்வாக்கு என்றும் வசதியின்மை, ஏழ்மை, சாதாரண குடும்ப நிலை என்றும் பார்த்து விடயங்கள் இடம் பெறுவது வழமை. அத்துடன் நகரப் பாடசாலைகள் கிராமப் பாடசாலைகள் என்று பார்க்கப்படுவதும் தாராளம். சாதி ஊர் அதுகள் இதுகள் என்று பார்க்கப்படுவதும் ஏராளம். இவை பாடசாலை மாணவர்களுக்கிடையிலான போட்டி முறைகளில் நன்கு வெளிப்படுவதுண்டு.

உதாரணமாக வவுனியா தெற்கு வலயத்தில் இவ்வாண்டும் வழமை போல தமிழ் மொழித் தினப் போட்டிகள் குடும்ப நிகழ்வாக நடந்துள்ளது. தமது பிள்ளைகளுக்கு தாமே நடுவர்களாக இருந்து தமது கைங்கரியங்களை சிறப்பாக அரங்கேற்றியுள்ளனர் கல்வித்துறைச் சீமான்களும் சீமாட்டிகளும்.

சமூக நாடகப் போட்டியில் பங்கு கொண்ட கிராம பாடசாலையொன்றினை ஓரங்கட்டிய சம்பவமொன்று இதில் அடங்கும். விதிப் பிரமாணங்களில் (சுற்றுநிருபங்களில்) இல்லாத விதியை முன் வைத்து கல்வி அதிகாரிகள் கிராமப் பிள்ளைகளை புறம் தள்ளி நசுக்கியுள்ளனர். முதலாம் இடம் பெற்ற பாடசாலையோ விதிமுறைக்கு விலகி சினிமா மெட்டுகளை உபயோகித்தும் இரண்டுக்கு மேற்பட்ட பக்கவாத் தியங்களையும் பயன்படுத்தியது இவர்களது கண்களுக்கு பிழையா கப்படவில்லை. ஏனெனில் இப்பாடசாலைகள் இவர்களது செல்லப்பிள்ளைகளாகும். கல்விக்கு முன் சகலரும் சமன் என்று யார் சொன்னான் முட்டாள்?

## யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளரை மாணவி தாக்கினார்

யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத்துறையை சேர்ந்த பெண்விரிவுரையாளர் அவரின் பட்டதாரி மாணவியொருவரால் தாக்கப்பட்டுள்ளார். பல்கலைக் கழகங்களில் பொதுவாக மாணவர்கள் கண்டிக்கப்படுவதில்லை, தண்டிக்கப்படுவதுமில்லை. ஆனால் அம்மாணவி அவ்விரிவுரையாளரின் கன்னத்தில் அறைந்ததுடன் அவரின் தலைமுடியை பிடித்து இழுத்து தலையை சுவரில் மோதியும் உள்ளார்.

இச்சம்பவம் யாழ்- பல்கலைக்கழகத்தில் கடந்தமாதம் நடந்துள்ளது. நாடகம் ஒன்றை அரங்கேற்றுவதில் ஏற்பட்ட ஒழுங்கீனங்கள் பற்றி மாணவியிடம் விளக்கம் கேட்டபோதே விரிவுரையாரை அம்மாணவி தாக்கியுள்ளார்.

இப்பிரச்சினை சுமுகமாக தீர்க்கப்படவுமில்லை அம் மாணவிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை. இது பற்றி மாணவர் அமைப்பு விரிவுரையாளர் அமைப்பு என்பவற்றினூடாக மாணவிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை நுண்கலைத்துறைத் தலைவர் அதில் தலையிட்டு தடுத்து நிறுத்தியுள்ளார் என்றும் அறிய முடிகிறது.

அம்மாணவியின் உணர்ச்சியை தூண்டும் வகையில் அவ்விரிவுரையாளர் நடந்து கொண்டதாலேயே தாக்கப்பட்டுள்ளார் என அவர் பதிலளித்துள்ளார்.

மாணவியின் உணர்வுகளை மதிக்கத்தான் வேண்டும். ஆனால் விரிவுரையாளருக்கும் உணர்வுகள் இருக்கிறன என்பதை புரிந்து கொள்வதும் அவசியம்.

ஒழுக்கம் பரஸ்பர மரியாதை நட்புறவு போன்றன பல்கலைக்கழகத்தில் ஆசிரிய மாணவரிடையே பேணப்படுவது அவசியம். அதை விடுத்து பக்கசார்பு அடாவடித்தனம் ஜனநாயக விரோதம் போன்றனவற்றை மேற்கொள்வது பல்கலைக்கழகத்தையே பாழாக்குவதாகும்.

விரிவுரையாளரைத் தாக்கிய அம் மாணவி பெண்பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மிகவும் நெருக்கமானவராகையாலேயே அவர் பாதுகாக்கப்பட்டதாக பல்கலைக்கழக வட்டாரத்தில் பரவலாகப் பேசப்படுகிறது.

## யாழ்ப்பாணத்தில் மூடச் சம்பிரதாயங்கள் வளர்ச்சி

யாழ். குடா நாடு தேசிய இன விடுதலைப் போராட்டத்தையும் கொடிய பேரினவாத யுத்தத்தையும் அனுபவித்த பிரதேசம். இத்தனைக்குப் பின்பும் அங்கு மூடத்தனமான சம்பிரதாயங்களும் ஏன்? எதற்கு? என்ற கேள்விகளற்ற கிரிகைகளும் விமரிசையாக இடம் பெற்று வருகின்றன. அவை புலம் பெயர்ந்த குடும்பங்களில் வெளிநாட்டு பணத்தின் மூலம் போலி அந்தஸ்து கௌரவம் என்பனவற்றுக்காக இடம் பெறுகின்றன. பேய் பிசாசு கிரகங்கள் என்ற பயப்பீதியிலும் இவை நடைபெறுகின்றன.

ஒருவர் இறந்தால் கிரிகைகள் இன்றி எளிமையான நினைவு கூரலுடன் சாவு வீடுகள் நடப்பதில்லை. இறந்தவர் இப்படித்தான் செய்ய வேண்டும் என முற் கூட்டியே கூறி வைத்து இறந்தாலும் கூட குடும்பத்தவர் உறவினர் சடங்குசம்பிரதாயம் நடத்துனர்கள் விடுவதில்லை. இதற்கு ஒரு உதாரணம் 457 காங்கேசன்துறை வீதி யாழ்ப்பாணம் முகவரியைக் கொண்ட மா.சின்னத்தம்பி (போர்டிங் மாஸ்ரர்) என்பவர் கொழும்பில் இறந்தார். அவர் தனது விருப்பத்தை முன் கூட்டியே தெரியப்படுத்தி இருந்தார். "உடலை விட்டு உயிர் சென்றதும் செய்ய வேண்டியவை, பொருத்தமான உடை அணிந்து பெட்டிக்குள் உடன் வைக்குக. ஏழு சிட்டி விளக்கு ஏற்றி சுற்றிவர வைக்குக. 24 மணி நேரத்திற்குள் பல்கலைக் கழக மருத்துவ பீடத்திற்கு உடலை அனுப்பி வைக்குக. கிரிகைகளில் அடியேனுக்கு நம்பிக்கை இல்லை.

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆதரவற்ற பிள்ளைகளுக்குப் பண உதவி நன்கொடை செய்யவும். இங்ஙனம் மா.சின்னத்தம்பி எனவும் எழுதியிருந்தார். அவரது இவ் விருப்பத்தை ஒரு கார்டில் அச்சிட்டு சாவு வீட்டில் விநியோகித்தும் இருந்தனர். இங்கே குறிப்பிட்டுக் கூறவேண்டியது யாதெனில் இறந்தவரின் விருப்பத்திற்கு மாறாக கிரிகைகள் யாவும் நடத்தப்பட்டு உடல் எரிக்கப்பட்டது தான். இது ஒரு உதாரணம் மட்டுமே. யாழ்ப்பாணத்தின் மூடச் சம்பிரதாயங்கள் கிரிகைகள் அங்கு மட்டுமன்றி போகுமிடம் மெல்லாம் எவ்வளவிற்கு வலிமையாக உள்ளன என்பதே சிந்தனைக்குரியதாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



## மலையகத்தில்
# இரத்தசோகை (Annemia) ஒரு சமூகப் பிரச்சினை

தொழிலாளர்கள், விவசாயிகள் வசதி குறைந்த மக்கள் மத்தியில் இரத்த சோகை முக்கியபிரச்சினையாக இருக்கிறது. கிராமப்புறங்களிலும் பெருந்தோட்டங்களிலும் முக்கிய ஆட்கொல்லி நோயாக இருக்கிறது. பெருந்தோட்டங்களில் மலையகப் பகுதிகளில் இந்நோய் சமூக நோயாக அடையாளம் காணப்பட்டுள்ளது. போஷாக்கின்மை தரமான சுகாதாரப் பழக்கவழங்கங்கள் இல்லாமை குருதிப்போக்கு (குடும்பக்கட்டுப்பாடு சத்திரசிகிச்சைக்குப் பின் மாதாந்தம் குருதி அதிகம் வெளியேறுதல்) போன்றவற்றால் ஏற்படும் இரத்த சோகை மலையக சமூகத்திற்கு பெரும் சவாலாக இருக்கிறது. நோய்கள் சமூகப்பிரச்சினையாக இருக்கும் போது அதற்கு சமூகரீதியாக அரசாங்கமே தீர்வு காண வேண்டும். மலையகப்பகுதிகளிலும் கிராமப் புறங்களிலும் குருதிச்சோகையை இல்லாமலாக்க பொதுவாக அரசாங்கமே திட்டமிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் அந்நோய்பற்றியும் அதனை முகம் கொடுப்பதற்கான வழிமுறைகள் பற்றியும் தெரிந்திருப்பது அவசியம்.

குருதியில் செங்குருதிக்கலங்கள், வெண்குருதிக்கலங்கள், குருதி சிறு கூட்டுகள் மற்றும் குருதிப் பாயம் (Plasma) போன்றவை காணப்படுகின்றன. இவற்றுள் செங்குருதிக்கலங்களும் அக்கலங்களினுள் காணப்படும் ஹீமோகுளோபின் எனும் மூலக்கூறும் குறைவடையும் போது அந்நிலை குருதிச்சோகை என அழைக்கப்படுகிறது. நாம் சுவாசிக்கும் போது எமது (நுரை ஈரலுக்கு) சுவாசப்பைக்குள் செல்லும் ஒட்சினானது செங்குருதிக்கலங்களிலுள்ள ஹீமோகுளோபினிலுள்ள (Haemoglobin) இரும்புடன் பிணைப்படைந்து உடலின் எல்லா உறுப்புகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆகவே குருதியில் ஹீமோகுளோபினின் அளவு குறைவடையும் போது இதயம் மூளைபோன்றவற்றிற்கு அவசியமான ஒட்சிசன் குறைவடைகிறது. இதனால் உடற்சோர்வு, தலைவலி, நடக்கும் போது அல்லது சிறு வேலைகள் செய்யும் போது மூச்சு வாங்குதல் நெஞ்சுபடபடத்தல் நாக்கு வெளிறுதல் போன்றவை ஏற்படுகிறது.

குருதிச்சோகை பின்வரும் காரணங்களால் ஏற்படுகிறது.

1.உடலிலிருந்து அதிகமாக குருதி வெளியேறுதல் (Bleeding)

2.கண்ணுக்கு தெரியாமல் குருதி இழக்கப்படுதல் (Occult Bloodloss)

3.என்புமச்சையில் குறைவாக குருதி உற்பத்திசெய்யப்படுதல் (Decreased production)

4.குருதிக்கலங்கள் உடைதலும் (Haemolysis) சிறந்த உற்பத்தியும் (Defective Erythro poiesis)

1.உடலிலிருந்து அதிகமாக குருதி வெளியேறுதல்

மூலவியாதி காரணமாக, மாதவிடாயின் போது அதிகளவு குருதி வெளியேறல், பிள்ளைப் பேற்றின் போது குருதி வெளியேறுதல் என்பனவற்றாலும்,

மதுபானம் அருந்தி சிரோசிஸ் நோய் ஏற்பட்டு இரத்தவாந்தி எடுத்து அல்லது விபத்துக்காரணமாக அல்லது புற்று நோய்காரணமாக குருதி அதிகளவு வெளியேறுவதனாலும் குருதிச்சோகை ஏற்படலாம்.

2.கண்ணுக்கு தெரியாமல் குருதி இழக்கப்படுதல்

குடற்புழுக்கள் (குடற்பூச்சி) குருதியை உறுஞ்சிக்குடிக்கின்றன. அத்தோடு குடலில் சிறு காயங்களை ஏற்படுவதால் சிறிது குருதி இழக்கப்படுகிறது. மற்றும் குடற்புளுக்கள் குடலில் புற்று போன்றவையினாலும் குருதி கண்ணுக்கு தெரியாமல் இழக்கப்படுகிறது.

3.என்புமச்சையில் குறைவாக குருதி உற்பத்திசெய்யப்படுதல்

என்புமச்சையில் குறைவாக உற்பத்தி செய்யப் படுவதற்கு காரணம்

1.எமது உணவில் அவசியமான இரும்புச்சத்து, Vitamin $B^{12}$ போலிக் அமிலம் (Folic Acid) மற்றும் விற்றமின் C போன்றவை போதியளவில் இல்லாமையேயாகும். பொதுவாக வளர்முகநாடுகளில் இரும்புச்சத்துக்குறைபாடே குருதிச்சோகைக்கு முக்கிய காணமாகும்.

2.குருதி உற்பத்திக்கு அவசியமான (Erythro poietoin) எனும் ஹோமோன் சிறுநீரகத்திலேயே உருவாக்கப்படுகிறது. எனவே சிறுநீரகம் பழுதடையும் பட்சத்தில் (Renai Failure) குருதிச்சோகை ஏற்படுகிறது. காசநோய் மூட்டுவாதம் போன்ற நீண்டகால நோய்கள் குருதி உற்பத்தியை பாதிக்கின்றன.

வைத்திய ரீ.ஜேசுதாஸ்
எம்.பி.பி.எஸ்

4.சில வேளைகளில் குருதிக்கலங்கள் அதிகளவில் உடைவடைகின்றன.

இதற்கு பல காரணங்கள் காணப்படுகின்றன. அத்தோடு லீயூகிமியா போன்ற நோய்களில் குருதிக்கலங்கள் என்புமச்சையில் உற்பத்திசெய்யப்பட்டாலும் அவை சுற்றோட்டத்தை அடையுமுன் உடைகின்றன. எனவே நாங்கள் குருதிச்சோகை ஏற்படாமலிருப்பதற்கு பின்வரும் விதிமுறைகளை கையாளவேண்டும்.

(1) இரும்புச்சத்து மற்றும் விற்றமின் $B^{12}$ என்பன மாமிச உணவில் தேவையான அளவு உள்ள தால் தினமும் எமது உணவில் மாமிசம் சேர்த்துக்கொள்ள வேண்டும். மாமிச உணவு உண்ணாதவர்கள் கீரைவகைகள் மற்றும் பால் போன்றவற்றை அதிகமாக உண்ணவேண்டும். மரக்கறி உணவு உண்பவர்களுக்கு குருதிச்சோகை ஏற்பட்டால் விற்றமின் $B^{12}$ Injection ஏற்றிக் கொள்வது நல்லது.

தொடர்ச்சி 9ம் பக்கம்

# மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான இயக்கத்தை
## சீர்குலைக்க முயற்சியா? பு.ஜ.கட்சி விளக்கம்

"மேல் கொத்மலைத் திட்டத்தை கைவிட்ச் செய்ய இன்னும் வலுவான போராட்டங்கள் அவசியம்" எனும் தலைப்பில் யூன்மாதம் 18 ஆம் திகதி சனிக்கிழமை வீரகேசரி பத்திரிகையின் 6ஆம் பக்கத்தில் புதிய ஜனநாயக கட்சி விடுத்துள்ள அறிக்கை என்று ஒரு செய்தி வெளியாகியுள்ளது. அவ்வறிக்கை புதிய ஜனநாயக கட்சி விடுக்கவில்லையென்றும் அவ்வறிக்கைக்கும், புதிய ஜனநாயக கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் புதிய- ஜனநாயக கட்சி புதிய பூமிக்கு அறிவித்துள்ளது.

அவ்வறிக்கை பற்றி புதிய- ஜனநாயக கட்சி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது.

அவ்வறிக்கையை புதிய ஜனநாயக கட்சி விடுக்கவில்லை. அவ்வாறான ஒரு அறிக்கையை விடவேண்டிய தேவையும் புதிய ஜனநாயக கட்சிக்கு இல்லை. மேல்கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை 1979 முதல் நாம் முன்னெடுத்து வருகிறோம். எமது கட்சி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) என்ற பேரில் இயங்கியபோது அதன் இளைஞர் இயக்கமான இலங்கை தேசபக்த வாலிபர் இயக்கம் (தற்போது இலங்கை ஜனநாயக வாலிபர் முன்னணி) மேல்கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வந்தது.

அப்போதிருந்தே இ.தொ.கா அதனை ஆதரித்து வந்தது. 2000 ஆண்டு ஐ.தே.கட்சி அரசாங்கத்தில் மாகாவலி திட்ட பிரதியமைச்சராக இருந்த ம.ம.மு யின் தலைவர் பி. சந்திரசேகரன் அத்திட்டத்தை ஆதரிக்கிறார் என்பதற்காகவே இ.தொ.கா தலைவர் தொண்டமான் எதிர்த்திருந்தார். (சந்திரசேகரனும் ஆரம்பத்திலிருந்தே இத்திட்டத்தை எதிர்க்கவில்லை) 2004 ஆம் ஆண்டு ஐ.ம. சு.மு அரசாங்கத்தில் இணைந்த பிறகு இ.தொ.கா அதனை ஆதரிக்கத் தொடங்கியது.

இந்த இரண்டு அமைப்புக்களுக்கும் மேலாக மேல்கொத்மலைத்திட்டத்திற்கு மக்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். அதனை ஒருங்கிணைக்கும் வகையில் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் அமைக்கப்பட்டது. அதில் புதிய ஜனநாயக கட்சி முக்கிய பங்கை வகித்து வருகிறது. இம்மக்கள் இயக்கத்தில் மேலும் பல அமைப்புகள் இணைந்திருக்கின்றன.

இதைதவிர என். ஜீ. ஓக்களில் இருக்கும் சில நல்லெண்ணம் கொண்டவர்களை தவிர என்ஜீ.ஓக்கள் அனைத்தும் வெளிநாடுகளிலிருந்து பணத்தை பெற்று செலவிடுவதற்கு ஏற்ற வகையிலேயே மேல் கொத்மலைத் திட்டத்தை எதிர்த்து வருகின்றன. மே. கொ. திட்டத்திற்கு எதிரான இயக்கத்தை அபகரித்துக் கொள்வதற்கான முயற்சியை இன்னும் பல என். ஜீ. ஓக்கள் கைவிடவில்லை. வெளிநாட்டுப்பணத்தை கொண்டு இங்கு மக்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது. என். ஜீ.ஓக்கள் சமூகமாற்றத்திற்கான போராட்டங்களை மழுங்கடிக்கும் நிகழ்ச்சி நிரல்களை அடிப்படையாகக் கொண்டே செயற்படுகின்றன. அவை முன்னெடுத்த "போராட்டங்கள்" யாவும் சரணடைவிலேயே முடிவடைந்துள்ளன.

நுரைச்சோலை அனல்மின்திட்டத்திற்கு எதிரான போராட்டத்தினை என்.ஜீ.ஓக்கள் பொறுப்பெடுத்து அப்போராட்டத்தை பலவீனப்படுத்திவிட்டன. இன்று அப்போராட்டம் ஐ.தே.கட்சியின் எம்.பி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இன்றைய நிலைமையில் அப்போராட்டம் ஆரோக்கியமாக இருப்பதாகத் தெரியவில்லை.

எப்பாவலை பொஸ்பேற் கனிய சுரங்கத்தை அமெரிக்க கம்பெனிக்கு விற்பதனை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டத்தை என்.ஜீ.ஓக்கள் (அவை வெளிநாடுகளிலிருந்து பணம் பெறுவதற்காக) அபகரித்து சிறிது காலம் வைத்திருந்து விட்டு கைவிட்டதன் காரணமாக அப்போராட்டமும் பலவீனப்படுத்தப்பட்டது. இன்று அப்போராட்டம் ஹெல உறுமயவை சேர்ந்த சிலரிடம் அகப்பட்டுக் கொண்டுள்ளது.

அவ்வாறான ஒரு நிலைமை மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான போராட்டத்திற்கும் ஏற்படக்கூடாது என்பதற்காகவே மே.கொ. எ.ம இயக்கம் என்.ஜீ.ஓ அடிப்படையற்ற மக்களினது சுதந்திரமான இயக்கமாக ஆரம்பிக்கப்பட்டது. அது என்.ஜீ.ஓ ஆதிக்கத்திற்குட்படாமல் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. என்.ஜீ.ஓக்களில் வேலை செய்யும் பலரும் மே. கொ. எ.ம.இயக்கம் என்.ஜீ.ஓ பிடிக்குட் பட்டதாக இருக்கக்கூடாது என்றே விரும்புகின்றனர்.

எனவே இ.தொ.கா, ம.ம.மு பிற்போக்குத்தலைமைகளின் தயவிலோ என்.ஜீ.ஓ பணத்திலோ மே.கொ.எ. போராட்டங்கள் முன்னெடுக்கப்படுவதை புதிய- ஜனநாயக கட்சி ஏற்கவில்லை. மே.கொ.எ.ம. இயக்கத்தின் நிலைப்பாடும் அது தான்.

அதனால் யூன் 6 ஆம் திகதி வீரகேசரி பத்திரிகையில் வெளியான அறிக்கையை வெளியிடவேண்டிய தேவை பு.ஜ.கட்சிக்கு இல்லை.

அத்துடன் யூன் 6 ஆம் திகதி வீரகேசரியில் வெளியான அதே அறிக்கை யூன் 6 ஆம் திகதி சுடரொளி பத்திரிகையின் 7 ஆம் பக்கத்தில் மேல் கொத்மலைத்திட்டம் குறித்து ம. ம. மு வின் தீர்மானத்துக்கு வரவேற்பு எனும் தலைப்பில் புதிய பண்பாட்டு அமைப்பு விடுத்த அறிக்கை என வெளியிடப்பட்டிருந்தது.

அவ்வறிக்கை வீரகேசரியில் புதிய- ஜனநாயக கட்சியின் அறிக்கை என தவறுதலாக வெளியிடப்பட்டதா அல்லது வேறு உள்நோக்கத்துடன் வெளியிடப்பட்டதா என்பது தெரியவில்லை.

எவ்வாறாயினும் மேல் கொத்மலைத் திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கத்தைப் பலவீனப்படுத்துவதற்கு திரைமறைவில் முயற்சி மேற் கொள்ளப்படுகின்றதா என்ற கேள்வி எழுகிறது. ஆதலால் புதிய- ஜனநாயக கட்சி தொடர்ந்து தனது பங்களிப்பினை வழங்கியே வரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆறுமுகன் யாருக்காக சத்தியாக்கிரகம் செய்தார்?

பல இ.தொ.கா தோட்டக் கமிட்டித்தலைவர்கள் உத்தியோத்தர்கள் கசிப்பு உற்பத்தியையும் விற்பனையையும் வெகுஜோராக செய்து வருகின்றனர். அவர்களை பாதுகாக்கும் முயற்சிகளில் இ.தொ.கா தலைமையும் பொறுப்புணர்வுடன் செயற்படுகிறது.

கசிப்பு காய்ச்சினார்கள் என்ற சந்தேகத்தில் நாவலப்பிட்டி பொலிசாரினால் தேடப்பட்ட ஹனுகொட்டுவ தோட்டத் தொழிலாளர்களை இ.தொ.கா தோட்டக்கமிட்டித் தலைவரும் உறுப்பினரொருவரும் பொலிஸாரிடம் சரணடைய பயந்து தற்கொலை செய்து கொண்டதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அவர்களது சடலங்களை பிரேத பரிசோதனை செய்யாமலே அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென இ.தொ.கா தலைவரும் பொதுச்செயலாளரும் நுவரேலியா பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகன் தொண்டமான் நாவலப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள பிரதான வீதியில் அமர்ந்து நள்ளிரவு 11 மணிமுதல் அதிகாலை வரை சத்தியாக்கிரகம் செய்துள்ளார்.

தற்கொலைகள் அகாலமரணங்கள் என்பவற்றினால் உயிரிழந்தவர்களின் சடலங்களை பிரேதபரிசோதனை செய்யாமல் அடக்கம் செய்வதற்காக ஒப்படைக்கப்படமாட்டாது என்பது சாதாரணமான ஒருவருக்கே தெரியும். சடலங்களை சீக்கிரமாக விடுவிக்க வேண்டுமெனில் பிரேத பரிசோதனையை விரைவாக நடத்துவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்காமல் வீதியில் அமர்ந்து சத்தியாக்கிரகம் செய்பவர்கள் எல்லாம் மலையக மக்களின் தலைவராகியுள்ளார்கள்.

தேடப்பட்ட சந்தேகநபர்கள் பொலிஸ் நிலையத்திற்கு போகப் பயந்து தற்கொலை செய்து கொண்டமை மிகவும் பாரதூரமானதாகும். அந்தளவிற்கு பொலிசார் மீது மலையகத் தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லை என்பதையே விளங்கிக் கொள்ள முடிகிறது.

தேடப்பட்ட சந்தேகநபர்களை சட்டத்தரணி ஒருவருக்கூடாக பொலிஸ் நிலையத்தில் ஆஜர் செய்திருக்கலாம். அதற்காக எவ்வித நடவடிக்கையும் எடுக்காது அச்சந்தேகநபர்களை நிராதரவாக விட்டுவிட்டு அவர்கள் தற்கொலை செய்து கொண்ட பிறகு சத்தியாக்கிரகம் இருப்பதெல்லாம் வெறும் 'ஸ்டண்ட்' ஆகும். ஒரு வகை நடிப்பாகும்.

அதற்கு அப்பால் சந்தேகநபர்களை கசிப்பு உற்பத்தியிலும் வியாபாரத்திலும் ஈடுபடாமல் தடுத்திருக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம். சந்தேக நபர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும் வரை அவர்கள் சுற்றவாளிகள் என்பதே சட்டத்தின் நிலைப்பாடாகும். ஆனால் மேற்படி சந்தேக நபர்கள் கசிப்பு உற்பத்தியிலும் வியாபாரத்திலும் ஈடுபட்டார்களா இல்லயா என்பது இ.தொ.கா தலைமைக்கு நன்கு தெரியும். அவர்கள் ஈடுபட்டிருந்தார்கள் என்று புதியபூமிக்கு சாட்சியங்கள் கிடைத்துள்ளன.

அந்த கசிப்புக்காரர்களுக்காக இ. தொ.கா தலைவர் ஏன் இவ்வளவு அக்கறையுடன் செயற்பட்டார். அதிகமாக இ.தொ.கா உத்தியோகத்தர்கள் கசிப்பு உற்பதியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அக்கசிப்பு வியாபாரத்திற்கு இ.தொ.கா தலைமையின் ஆசீர்வாதமும் வலைப்பின்னலும் இருப்பதாகவும் அறியமுடிகிறது.

கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கும்படி இ.தொ.கா. வின் கொட்டகலை காரியாலயத்திலிருந்து கேட்டுக் கொண்டபோதும் விடுவிக்காதபடியால் பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இ.தொ.கா கொட்டகலை காரியாலயத்திற்கு அழைக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளார். அதனால் படுகாயமடைந்த நிலையில் நுவரெலிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த அப்பொறுப்பதிகாரி பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு தண்டனை இடமாற்றம் செய்யப்பட்டதாகவும் அறிய முடிகிறது. இச்சம்பவம் கடந்த மாதம் நடைபெற்றது.

கசிப்புக்காரர்களை பாதுகாப்பதில் இ.தொ.கா தலைமை எவ்வளவு அக்கறையுடன் செயற்படுகிறது என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். கசிப்புகாரர்களை விடுவிக்க பொலிஸ் பொறுப்பதிகாரியை தாக்கியது மட்டுமல்ல அவரை இடமாற்றம் செய்யும் அளவிற்கு இ.தொ.கா செயற்பட்டுள்ளது.

ஹகனுகொட்டுவ தோட்டத்தொழிலாளர்கள் இருவர் தற்கொலை செய்துகொண்டதற்கான பொறுப்பை இ.தொ.கா தலைமையே ஏற்க வேண்டும். தொழிற்சங்கத்தின் அடிமைகளாக வைத்திருப்பது மட்டுமல்ல கசிப்பு போன்ற சட்டவிரோத ஒழுக்கக்கேடான சமூகசீரழிவான நடவடிக்கைகளிலும் இ. தொ. கா ஈடுபடுத்தி வருகிறது என்று பரவலாகக் குற்றம் சாட்டப்படுகிறது. இதனை தொழிலாளர்களோ தொழிலாளர் வர்க்க நலனில் அக்கறையுள்ளவர்களோ அனுமதிக்க முடியாது.

தோட்டத்தொழிலாளர்களையும், மலையகத் தமிழ் மக்களையும் அடிமையாக வைத்திருக்கும் சமூக சீரழிவுகளில் ஈடுபடுத்தும் தொழிலாளர் வர்க்க விரோத தொழிற்சங்க அரசியல் தலைமைகளை நிராகரிப்பதே சரியான பதிலடியாக அமையும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි Puthiya Poomi
சுற்று 12 யூலை 2005 பக்கம் 12 விலை 12/- சுழற்சி 81

எஸ்.47,3ம் மாடி , கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11. இலங்கை. தொ.பே: 2435117.தொலை நகல்:011-2473757
ஈ-மெயில் : puthiyapoomi@hotmail.com

## சந்தர்ப்பவாத அரசியலுக்கு எதிராகவும்போராட வேண்டும்

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது திருமண தம்பதியரில் ஒருவருக்கு இருக்கும் விவாகரத்து பெறுவதற்கான உரிமை போன்றதாகும். அவ்வுரிமை இருப்பதற்காக எல்லோரும் விவாகரத்து பெறவேண்டும் என்ற கட்டாயமில்லை. இது லெனின் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி கூறியவிடயமாகும். தமிழ் தேசிய இனத்திற்கு அவ்வுரிமை அதாவது சுயநிர்ணய உரிமை அல்லது விவாகரத்து உரிமை கிடையாது என்பது ஜே.வி.பி யின் நிலைப்பாடாகும். (ஜே. வி.பி யை இடதுசாரி கட்சி என்றும் புரட்சிகர கட்சியென்றும் கூறுபவர்களுக்கு இது வியப்பை தரும்) அதே போன்று தான் ஐ.ம.சு முன்னணியிலிருந்து ஜே.வி.பி க்கு விவாகரத்து பெறும் உரிமை இல்லையென்று ஜே.வி.பி யில் சிலர் கூறுகிறார்கள்.

அதாவது கடந்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து ஐ.ம.சு முன்னணியிலிருந்து ஜே.வி.பி விலகிவிட்டாலும் அதுவெறும் பிரிந்து இருப்பதேயன்றி விவாகரத்தாகாது என்று ஜே.வி.பி யில் பலர் கூறுகின்றனர்.

அதாவது மீண்டும் ஜே.வி.பி சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்து அரசியல் குடும்பம் நடத்தலாம் என்பதுதான் அதன் அர்த்தமாகும். ஐ.ம.சு. முன்னணியிலிருந்து பிரிந்தபோது நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் பேசிய ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இப்போது பிரிந்து சென்றாலும் மீண்டும் சேர்வதற்கு வாய்ப்பில்லாமல் இல்லை என்று கூறினார் என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இவ்வாறான சந்தர்ப்பவாத நிலைப்பாடு ஜே.வி.பி க்கு புதிய தொன்றல்ல என்பது அதன் வரலாற்றை நேர்மையாக பார்க்கும் எவருக்கும் புரியும்.

இன்று பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் ஜே.வி.பி நாளை பொதுக்கட்டமைப்பில் அங்கம் வகித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எவ்வித நியாயப்படுத்தல்களுமின்றி பொதுக்கட்டமைப்பை ஆதரிக்க கூடும். தேர்தல்களை முற்றாக பகிஷ்கரித்து 1971 இல் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜே.வி.பி யினர் 1980 இற்கு பின்னர் முழுக்கமுழுக்க தேர்தல் பாதையில் இறங்கினர். பின்னர் 1988-89 இல் மீண்டும் கிளர்ச்சி. பின்னர் 1994 முதல் மீண்டும் தேர்தல் என்றாகிவிட்டது.

1971 முதல் இந்தியாவை பிராந்திய மேலாதிக்க விஸ்தரிப்புவாத சக்தியென்று கூறினர். அதனால் தோட்டத்தொழிலாளர்களுக்கு எதிரான நிலைப்பாட்டையும் கொண்டிருந்தனர். 1987 இல் இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பிறகு இந்தியாவுக்கு எதிராக போராடுவதற்காகவே 1989 கிளர்ச்சியில் ஈடுபட்டனர். 60 ஆயிரம் பேருக்கு மேல் அக்கிளர்ச்சியால் பலிகொடுக்கப்பட்டனர். 6 ஆயிரத்துக்கு மேற்பட்ட இடதுசாரிகள் ஜே.வி.பி யினரால் கொல்லப்பட்டனர் என கூறப்படுகிறது. இலங்கை இந்திய சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட மாகாணசபையை கர்ணகடூரமாக எதிர்த்தனர்.

பின்னர் மாகாண சபை தேர்தல்களில் போட்டியிட்டனர். ஐ.ம.சு.மு யுடன் இணைந்து மாகாணசபைகளில் ஆட்சியும் நடத்தினர். சு. கட்சியும் ஐ.தே. கட்சியும் ஒன்றே என்று கூறியவர்கள் சுதந்திரக்கட்சியுடன் சேர்ந்தே ஐ.ம.சு முன்னனி அமைத்தனர். 2004 ஏப்ரல் ஆட்சியிலும் பங்கெடுத்தனர். திடீரென இந்தியாவின் நம்பிக்கைகுரிய நண்பராகி விட்டனர். இந்தியாவுக்கு ஒரேயடியாக சப்பை கட்டினர். சமாதான முன்னெடுப்புகள் பற்றி பேசப்பட்டுக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் என்றுமில்லாதவாறு இந்தியாவின் பொருளாதார ஆதிக்கம் கூடியுள்ளது. பெற்றோலியம் மின்சாரம் போன்றவற்றில் இந்திய அரசின் ஆதிக்கம் நிலை நாட்டப்பட்டுள்ளது. இதை ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் தனியார்துறை முதலீடுகள் போன்றவற்றிலும் இந்திய முதலாளிகளின் ஆதிக்கம் நிலைநாட்டப்பட்டுள்ளது.

வி.பு. இயக்கத்திற்கு எதிராக போராடவும் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபடவும் இந்தியாவை தலையிடும்படி ஜே.வி.பி வெளிப்படையாகக் கேட்டுக் கொண்டுள்ளது. அதே மாதிரியான வேண்டுகோளை அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் ஜே.வி.பி விடுத்துள்ளது.

இலங்கையின் நலனுக்கு எதிரான இந்திய மேலாதிக்கத்திடமும் விஸ்தரிப்புவாதத்திடமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமும் சரணடைந்துள்ள ஜே.வி.பி யின் சந்தர்ப்பவாதம் பற்றி விளங்கிக் கொள்வது கடினமாக இரு க்கமுடியாது. இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி. ல.ச.ச. கட்சி போன்ற பழைய இடதுசாரி கட்சிகள் போன்று இருக்கப்போவதில்லை என்று கூறிக்கொண்டு சுதந்திரக்கட்சியுடன் இணைந்து ஐ.ம.சு.மு அரசாங்கத்தை அமைத்த ஜே. வி. பி கடந்த ஒருவருடமாக அதிகரித்து வந்துள்ள விலைவாசிகள் பற்றி மௌனமாக இருந்துவந்தது. மக்களின் வாழ்க்கை செலவு அதிகரித்திருப்பது குறித்து அதற்கு கவலை ஏற்படவில்லை. சு.கட்சியும் ஐ.தே.கட்சி ஒன்றேதான் என்று கூறிய ஜே.வி.பி, சு.கட்சியுடன் சேர்ந்து ஆட்சியில் பங்கெடுத்த மட்டுமன்றி இப்போது ஐ. தே. கட்சியுடன் சேர்ந்து ஆட்சியமைக்க தயார் என் சோமவன்ச அமரசிங்ஹ கூறியுள்ளார்.

தேசத்தை பாதுகாக்கப்போவதாக கூறிக்கொண்டு பேரினவாதத்தை தூண்டி தமிழ் மக்களின் நியாயமான போராட்டத்திற்கு எதிராக செயற்படுவதுடன் புலி எதிர்ப்பு என்ற அடிப்படையில் பொதுக்கட்டமைப்புக்கு எதிர்ப்பு தெரிவித்தும் வருகிறது. பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதற்கு வலிதான அடிப்படைகள் எதுவும ஜே.வி.பி. யிடம் இல்லை.

நாட்டு வளங்கள் யாவும் விற்றுத் தீர்க்கப்படுகின்றபோதும் வெளிநாட்டு சக்திகள் நாட்டின் பொருளாதாரத்தின் மீது மேலாதிக்கம் செலுத்தும் போதும் பேசாமல் இருந்து கொண்டு தேசபக்தி பற்றி பேசுவது அர்த்தமுள்ளதாகாது. பேரினவாதத்தை தூண்டி பெரும்பாண்மை சிங்கள மக்களின் ஆதரவை பெறுவதற்காகவே ஜே.வி.பி யின் தேசபக்தர்கள் வேடம் பூண்டுள்ளனர் என்பது அம்பலமாகிவிட்டது. ஐ.தே.க, சு.க என்பன மட்டுமன்றி ஜே.வி.பி.யும் அவை மாதிரியான இன்னொரு கட்சிதான்.

எனவே நேர்மையான இடதுசாரி ஜனநாயக சக்திகளின் வேகமான நடவடிக்கைகள் அவசியமாகின்றன. ஐ.தே.க, சு.கட்சிக்கு மாறாக ஆகக் குறைந்த தேசிய ஜனநாயக வேலைத்திட்டத்துடனாவது ஐக்கியப்பட்டு வேலை செய்வது அவசியமாகும். இடதுசாரிகள் எனப்படுவோர் என். ஜீ. ஓக்களை நம்பி செயற்படுவது ஆரோக்கியமானதல்ல. கடந்த கால தவறுகளிலிருந்து பாடங்களை படித்து புதிய வழிமுறைகளை கையாள்வதே ஒரே வழியாகும்.


**ஆசிரியர் குழு**

## சுனாமிப் பொதுக் கட்டமைப்பு உருவாக்கமும் பௌத்த பேரினவாதிகளின் வெறிக் கூச்சலும்

இலங்கையில் பௌத்த சிங்களப் பேரினவாதம் 1977ம் ஆண்டின் ஜே. ஆர்.ஜயவர்த்தனாவின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சி அதிகார வரவோடு ஒழுங்குமுறை யுத்தமாக மாற்றப்பட்டது.அவ் யுத்தமானது தமிழ்த் தேசிய இனத்திற்கு எதிரான ஒன்றாக இலக்கு வைத்து ஆரம்பிக்கப்பட்ட போதிலும் ஏனைய தேசிய இனங்களான முஸ்லீம் மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரு முன்னெச்சரிக்கையாகவும் முன்னெடுக்கப்பட்டது. இந்த யுத்தத்தின் சாராம்சமே பௌத்த சிங்கள பேரினவாதத்தின் மேலாதிக்கத்தை நீடித்து நிலைபெறச் செய்வதாகும்.

இவ்வாறு ஆரம்பிக்கப்பட்டு சுமார் இருபது வருடங்களாக இடம் பெற்றுவந்த பேரினவாத ஒடுக்குமுறை யுத்தத்தால் வடக்கு கிழக்கின் மக்கள் அனுபவித்த கொடுமைகளும் துன்பதுயரங்களும் வரலாற்றில் என்றுமே மறக்கமுடியாதவைகளாகும். இன்றும் அவற்றின் பாரிய அழிவுகள் பாதிப்புகளிலிருந்து வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் மக்கள் மட்டுமன்றி அப்பிரதேசங்களில் வாழ்ந்த சிங்கள மக்களும் கூட விடுபடவில்லை.

இத்தகைய அவல வாழ்வுக்கும் அதற்குக் காரணமான யுத்ததிற்கும் முடிவோ தீர்ப்வோ மறுவாழ்வோ ஏற்படாத சூழலிலேயே 2004ம் ஆண்டு டிசம்பர் 26ம் திகதி சுனாமிப் பேரழிவு இடம் பெற்றது. பட்ட காலிலேயே பட்டது போன்று இச் சுனாமிப் பேரலை வடக்க கிழக்கிலேயே பாரிய அழிவுகளை ஏற்படுத்தி கரையோர மக்களின் வாழ்வைச்சின்னா பின்னப் படுத்திக் கொண்டது. ஆறு மாதங்கள் கடந்த நிலையிலும் இப் பேரழிவுக்கு ஆட்பட்ட மக்களும் அப்பிரதேசங்களும் அவற்றிலிருந்து மீள முடியவில்லை. உலக நாடுகள் உதவிக்கு வந்தன. தத்தமது உள்நோக்கங்களுக்காக அவை வந்த போதிலும் பாதிக்கப்பட்ட மக்கள் அவ் உதவிகளுக்கு கை நீட்டுவதைத் தவிர வேறு வழிகள் இருக்கவில்லை. உள்ளூரில் உடன் உதவிகள் மக்களால் அமைப்புகளால் வழங்கப்பட்ட போதிலும் அவை மட்டுப்படுத்தப்பட்டவைகளாகவே இருந்தன. அரசாங்கம் ஏற்கனவே யுத்தத்தால் சகல வளங்களையும் இழந்து கையறு நிலையில் இருந்தது. சமாதான முயற்சிகள் இடம் பெற்றால் தருவதாகத் தனவந்த நாடுகளால் வாக்குறுதியளிக்கப்பட்ட நாற்பத்தையாயிரம் கோடி பணமும் கிடைக்காது கிடப்பில் போடப்பட்டு விட்டது.



இச் சூழலிலேயே சுனாமிப் பேரழிவுக்காக உதவுவதற்கு மேற்குலக நாடுகளும் யப்பானும் முன் வந்தன. சமாதானப் பேச்சுவார்த்தையை ஒரு புறத்தில் வைத்து விட்டு வடக்கு கிழக்கிற்கான சுனாமிப் பேரழிவில் இருந்து மக்களுக்கு நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பு வழங்குவதற்கு நிதி அளிக்க முன்னூறு கோடி அ.டொலர்களை ஒதுக்கினார்கள். அதற்கான உதவும் நாடுகளின் மாநாடுகளையும் நடாத்தி இலங்கை அரசாங்கத்தின் முன் அதற்கான நடைமுறைத் திட்டங்களையும் முன்வைத்தார்கள். அதில் பிரதானமானதாக வடக்கு கிழக்கில் போராடி வரும் புலிகள் இயக்கத்துடன் இணைந்த ஒரு பொதுக் கட்டமைப்பின் ஊடாக நிவாரணம், புனரமைப்பு, புனர்வாழ்வு முன்னெடுக்கப்படுவதை உதவி வழங்கும் நாடுகள் வற்புறுத்திக் கொண்டன.

ஏற்கனவே சுனாமிப் பேரழிவிற்கான நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பு அரசாங்கத்தாலும் அரச சார்பற்ற நிறுவனங்களாலும் ஆங்காங்கே முன்னெடுக்கப்பட்டு வந்த போதிலும் அவை அழிவுகளின் சிறு பகுதிகளைக் கூட நிவர்த்தி செய்வதாக அமையவில்லை. அத்துடன் வடக்கு கிழக்கின் யதார்த்த நிலை அரசாங்கத்தினதும் புலிகள் இயக்கத்தினதும் இரட்டை நிர்வாகம் இருந்து வருவதால் நிவாரணம் புனர்வாழ்வு புனரமைப்பு முன்னெடுப்பதற்கு இரு தரப்பையும் இணைத்து செயற்பட வேண்டிய அவசியம் ஒரு தவிர்க்கவியலாத தேவையாகும். மேலும் அத்தகைய ஒரு பொதுக் கட்டமைப்பின் ஊடா

**வெகுஜனன்**

கவே நிதி வழங்க முடியும் என்ற உதவி வழங்கும் நாடுகளின் கடுமையான அழுத்தங்களும் மேற்படி நிதியினை விட்டால் வேறு மார்க்கம் இல்லை என்ற கையறு நிலையும் மேற்குலகையும் யப்பானையும் பகைத்துக் கொள்ள முடியாத சூழ் நிலையும் ஜனாதிபதியைப் பொதுக் கட்டமைப்புக்கு இணங்க வைத்தன.

பொதுக்கட்டமைப்பு விடயத்திலும் அதற்கு ஊடாகப் பெருந் தொகைப் பணத்தைக் கொடுப்பது என்ற உதவி வழங்கும் நாடுகளின் உள்ளார்ந்த நோக்கங்களும் செயற்பாடுகளும் தனியே மனிதாபிமான உணர்வுகள் கொண்டவை அல்ல என்பதை அரசியல் விவகாரங்களை ஆழமாகப் பார்ப்போர் புரிந்து கொள்வர். இந்த சுனாமி உதவிகளுக்கு ஊடாக இலங்கையில் குறிப்பாக வடக்கு கிழக்கில் எவ்வாறு ஊடுருவிக் கொள்வது. அங்குள்ள வளங்களை எவ்வாறு அபகரித்துக் கொள்வது, மக்களின் எண்ணங்களில் தமக்குரிய இடங்களைப் பிடிப்பது என்பதெல்லாம் அடிப்படையான அம்சங்களாகும். ஆனால் இவை அனைத்திற்கும் அப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அதிலிருந்து மீள்வதற்குரிய வேறு வழிவகைகள் இல்லாத சூழலில் பொதுக்கட்டமைப்பும் அதன் ஊடான உதவிகளும் ஒரு நிர்ப்பந்த தேவையாகும். ஆனால் அவற்றின் நீண்ட கால எதிர் விளைவுகள் மக்களுக்குச் சாதகமாக அமைய மாட்டாது என்பதை விளங்கிக் கொள்வது அவசியமாகும்.

இவ்வாறு இலங்கையில் தமது உள்ளார்ந்த நோக்கங்களுக்கான தேவைகளின் அடிப்படையிலேயே பொதுக்கட்டமைப்பை மேற்கு நாடுகளும் யப்பானும் வற்புறுத்துவதாக இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்கள் கருதுகிறார்கள். அதனால் அதன் சாத்தியப்பாட்டை கை கூடாமல் செய்வதற்கு மறைமுக முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்பது புரிந்து கொள்ளக் கூடிய ஒன்றாகும். இதனை ஜே.வி.பி. ஜாதிக ஹெல உறுமய மற்றும் பேரினவாத ஊடகங்கள் பிரதிபலிக்கின்றன. இவற்றின் ஊடாக இலங்கையில் ஆதிக்கம் பெற நிற்கும் அமெரிக்க இந்தியப் போட்டியின் சாராம்சத்தைக் கண்டு கொள்ள முடிகின்றது.

ஜே.வி.பி யினர், ஜாதிக ஹெல உறுமயவினர், தேசிய பிக்கு முன்னணியினர் உள்ளிட்ட பேரினவாதிகள் பொதுக் கட்டமைப்புக்கு எதிராகக் கூச்சல் கிளப்பி நின்று சிங்கள மக்கள் மத்தியில் நச்சு வாயுவைத் திறந்து விட்டு வருகிறார்கள். இதனால் சாதாரண சிங்கள மக்கள் குழப்பமடையவும் பதற்றமடையவும் கூடிய சூழல் நிலவி வருகிறது. இத்தகைய நிலை வரலாற்றில் முதல் தடவையல்ல. ஆனால் மீண்டும் மீண்டும் வரலாற்றில் இருந்து எதனையும் சிங்கள பேரினவாத ஆளும் வர்க்கமும் பேரினவாத அரசியல் தலைமைகளும் உரிய படிப்பினைகளைப் பெற மறுத்துச் செல்வது தான் அரசியல் சோகமாகும்.

இத்தகையவர்கள் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியம் என்பனவற்றை எவ்வாறு மேற்குலக ஏகாதிபத்தியச் சக்திகளும் யப்பானும் ஒரு புறமாகவும் இந்திய பிராந்திய மேலாதிக்க சக்தி மறுபுறமாகவும் சூறையாடி வருகின்றன என்பதை மறந்து நிற்பது தான் வேடிக்கையும் விசனமும் தரக்கூடியதாகும். சுயசார்பு சுய தேவை தேசிய பொருளாதாரம் தொட்டு அரசியல் சமூக கல்வி பண்பாட்டுத் துறைகளின் ஊடாக மேற்கூறிய அந்நிய சக்திகள் உள்ளூர ஊடுருவி இலங்கையின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியத்தை விலை பேசி வருகின்றன என்பதை ஜே.வி.பி யோ அல்லது காவி உடை தரித்து புத்தரை கேவலப்படுத்தி வருவோரோ காண மறுக்கின்றனர். அதே வேளை மனிதாபிமானத் தேவையான சுனாமி நிவாரணத்திற்கு என உருவாக்கப்பட்டுள்ள பொதுக் கட்டமைப்பை எதிர்ப்பதில் தத்தமது வீரத்தைக் காட்டி அதனைக் கைவிடச் செய்வதற்கு முயலுகின்ற கேவலத்தையும் காணமுடிகிறது.

இவையாவற்றையும் ஆழ்ந்து நோக்கும் போது ஒரு உண்மை புலப்படுகின்றது. சுனாமிப்பேரழிவுக்கான வடக்கு கிழக்கின் பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படுவதை ஆதரிப்போரும் சரி எதிர்ப்போரும் சரி அல்லது அதில் சம்மந்தப்படும் தரப்பினரும் சரி, பாதிக்கப்பட்டு வாழ்விழந்து நிற்கும் நிர்க்கதிக்குள்ளான சாதாரண உழைக்கும் மக்களுக்கு உரிய நிவாரணம் புனரமைப்பு புனர்வாழ்வு கொடுத்து மறுவாழ்வளிப்பது என்பதற்கும் அப்பால் தத்தமது தேவைகள் இருப்பு அதிகாரம் எதிர்கால ஆட்சி அதிகாரம் மற்றும் இலங்கை மீதான மேலாதிக்கம் ஊடுருவல் என்பனவற்றுக்கே முதன்மை இடம் கொடுத்து செயற்பட்டு வருகின்றனர். ஆனால் ஆறு மாதங்களாகியும் வெறும் எதிர்பார்ப்புகளுடன் யாவற்றையும் இழந்து நிற்கும் மீனவ மற்றும் சாதரண கரையோர மக்கள் தான் பரிதாபத்திற்குரியவர்கள். அவர்களின் மறுவாழ்வுக்கே வடக்கு கிழக்கு சுனாமிப் பொதுக் கட்டமைப்பு அவசியமானதாகும்.

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சுனாமிக்குப் பின்னால்
## சுழன்றடிக்கும் அரசியல்

சுனாமிப் பேரழிவு மனிதரின் நல்ல பண்புகளை வெளிக்கொண்டுவரும். அதன் மூலம் இந்த நாட்டில் புதிய ஒற்றுமையையும் கட்டியெழுப்பலாம் என்று சுனாமியை அடுத்துச் சில நாட்களாக வெளிவெளியாகப் பேசப்பட்டது. ஆனால் வெகு விரைவாகவே அந்த நம்பிக்கைகள் தகர்ந்து விட்டன.

நாட்டுக்கு ஏற்பட்ட அழிவில்ஆதாயம் தேடுகிற சக்திகள் வெகு விரைவிலேயே செயலில் இறங்கிவிட்டன. உலக மக்களது அனுதாப அலை, குறிப்பாகச் சாதாரண மக்களின் மனிதாபிமான மிக்க நன்கொடைகள், அரசாங்கங்களை வெட்கச் செய்தன. சுனாமிப்பேரலை பற்றி எச்சரிக்காமல் அசட்டையாக இருந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இப்போது சுனாமியைக் காரணங்காட்டி இலங்கையிலும் தாய்லாந்திலும் இந்தோனீசியாவிலும் தன் இராணுவக் குறுக்கீடுக்கான வசதிகளை மனிதாபிமான உதவி என்ற பேரில் மும்முரமாக முன்னெடுக்கிறது. அதே வேளை முதலில் உதவி செய்தவர்கள் நாங்களே என்று இந்திய மேலாதிக்கவாதிகளும் தங்கள் பங்குக்கு உரிமை கோருகிறார்கள்.



ஜப்பான், தென்கொரியா என்பன உட்படப் பல வேறு நாடுகளது சுனாமி நிவாரண உதவிகளும் உள்நோக்கங்களைக் கொண்டவையே. இந்த நாட்டின் சுனாமி அழிவுக்குட்பட்ட பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்பப் பல்வேறு வகையான உதவிகள் பற்றிப் பேசப்பட்டன. இலங்கையின் பொருளாதார மீட்சிக்காக முன்னர் உறுதியளிக்கப்பட்ட 45 கோடி டொலர் உதவியைப் பெறுவதற்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றமின்மை ஒரு முட்டுக்கட்டையாகிவிட்ட நிலையில், இலங்கை அரசாங்கத்துக்கு கொடுக்கிற தெய்வம் கூரையைப் பிளந்து கொடுக்கிற மாதிரியேதான் சுனாமி அமைந்தது.

வாக்களிக்கப்பட்ட கடனுதவிகளும் நன்கொடைகளும் அரசாங்கத்தை மிகவும் உற்சாகப்படுத்தினாலும், அரசாங்கத்தின் கடந்த காலநடத்தை காரணமாகவும் 'உதவி' வழங்கும் நாடுகளின் உள் நோக்கங்கள் காரணமாகவும் அரசாங்கம் எதிர்பார்த்தபடி அயல் உதவி கைக்கு வந்து சேரவில்லை. இலங்கையில் ஏகாதிபத்திய மேலாதிக்கத்தை நிலைநிறுத்த இப்போது அமைதியை வேண்டுகிற அமெரிக்காவும் அதன் கூட்டாளிகளும் அண்மையில் வழங்குவதாக உறுதியளித்த நிவாரண உதவி விடுதலைப்புலிகளுடனான ஒத்துழைப்பை ஒரு முன் நிபந்தனையாகவே கொண்டுள்ளது. இது இலங்கையின் அரசியல் தலைமைகள் எதிர்பாராததல்ல. சென்ற யூஎன்.பி. ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு வாக்களிக்கப்பட்ட அயல் உதவிக்கு இருந்த அமைதிக்கான முயற்சிகள் பற்றிய முன் நிபந்தனைகளே இம் முறையும் விதிக்கப்பட்டுள்ளன. இதனா லேயே சனாதிபதி விடுதலைப்புலிகளுடனான பொதுக்கட்ட மைப்புப்பற்றி இப்போது வற்புறுத்திப் பேசி வருகின்றார்.

உண்மையிலேயே வடக்குக்கிழக்கில் சுனாமி நிவாரண புனர்நிர்மாண வேலைகட்கான பொதுக்கட்டமைப்பு என்ற கருத்தை முதலில் முன் வைத்தவர் சனாதிபதியே. விடுதலைப் புலிகள் அதை ஏற்க மறுப்பார்கள் என்பது அவருடைய கணிப்பாக இருந்திருக்கலாம். விடுதலைப் புலிகளும் தொடக்கத்தில் பொதுக்கட்டமைப்பு என்ற கருத்தை ஐயத்துடனேயே நோக்கினர். எனினும் தமது கட்டுப்பாட்டுப்பகுதியில் நிவாரண, புனர்நிர்மாண வேலைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதன் தேவை அவர்களால் நிராகரிக்க இயலாதது. இதன் விளைவாக அவர்கள் பொதுக்கட்டமைப்பு ஆலோசனைக்கு இணங்கிய்தோடு நோர்வே மூலம் வழங்கப்பட்ட அடிப்படைகளையும் ஏற்றனர்.

விடுதலைப் புலிகள் பொதுக்கட்டமைப்புக்கு உடன்பட்ட பின்பு அதை ஜே.வி.பி யும் ஸ்ரீ.ல.சு. கட்சிக்குளுள்ள தீவிரமான பேரினவாதிகளும் அவர்களது தேச பக்த இயக்கமும் மும்முரமாக எதிர்த்து வந்துள்ளன. அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்தும் எந்தவிதமான ஒத்துழைப்பும் விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பதாகும் என்பது அவர்களது நிலைப்பாடு. இதன் கருத்து என்னவென்றால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான எந்த விதமான நிவாரணத்திற்கும் அரசாங்கமும் அதன் கூட்டாளிகளுமே முழுப்பொறுப்பையும் ஏற்க வேண்டும் என்பதாகும். இதன் மூலம் விடுதலைப்புலிகளை ஓரங்கட்டித் தங்களது ஆதிக்கத்தை விருத்தி செய்யலாம் என்பதும் பேரினவாதிகளது எதிர்பார்ப்பாகும். வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புத்தர் சிலைகளை நிறுவுகிற முயற்சிகள் திட்டமிட்டே அமைதியைக் குலைக்கிற நோக்கமுடையவை என்பது பற்றி நாம் ஐயப்படத் தேவையில்லை.

எனினும், வேறெவரையும் விட மிகத் தீவிரமாக ஜே. வி. பி பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதும் கிழக்கில் இன மோதலுக்கான சூழ் நிலையை உருவாக்குவதும் ஜே.வி.பி தனித்து எடுக்கும் முயற்சிகள் என்று கருதுவது கடினம். மூன்று ஆண்டுகட்கு முன்னர் கிழக்கில் தமிழ்- முஸ்லீம் சமூகங்களிடையிலான மோதல்களைத் தூண்ட நம் அண்டை நாட்டின் முகவரகள் கருவிகளாக இருந்தனர் என்பதை நாம் மறக்கலாகாது.


இன்று, சுனாமிக்குப் பின்பான நிலவரங்களின் கீழ், புனர்நிர்மாண உதவி என்ற பேரில் அமெரிக்கா இலங்கை மீது தனது பிடியை வலுப்படுத்தி வருகிறது. இலங்கையில் அமெரிக்காவின் ராணுவம் நிலை கொள்ளும் சூழ்நிலை இந்தியா இங்கே தனது ராணுவ ஆதிக்கத்தை வலுப்படுத்துவதற்குத் தடையாயிருக்கும் என்பதால் இரண்டு நாடுகளும் இலங்கையில் ஒரு கெடுபிடி யுத்தத்தில் இறங்கியுள்ளன. உடனடியான இந்த சூழலில் இந்த யுத்தத்தின் களமாக அமைவது வடக்கு- கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளாகும்.

அமெரிக்கா சென்ற ஆண்டு வரை விடுதலைப்புலிகள் பற்றிக் காட்டிய கடும் போக்கிலிருந்து சற்று நெகிழ்வான ஒரு தோற்றத்தைக் காட்டுவதும் அமைதிக்கான முயற்சிகள் பற்றியும் பொதுக்கட்டமைப்புப் பற்றியும் இலங்கை ஆட்சியாளர்கட்குக் கொடுக்கும் சினேகபூர்வமான நெருக்குவாரங்களும் இந்திய அதிகாரவர்க்கத்தைக் கவலைக்குட்படுத்தியுள்ளன என்றே தெரிகிறது.

இந்திய அரசாங்கமும் அதன் நிருவாக இயந்திரமும் சொல்லத் தயங்குகிற விடயங்களைச் சொல்லுகிற இந்தியாத் தகவல் ஊடகங்கள் இலங்கை அரசிடம் விடுதலைப்புலிகளுடன் ஒத்துழைக்க வேண்டாம் என்று போதிக்கின்றன. இதற்கும் மேலாக இந்தியாவின் முகவர்களாகவே செயற்படும் சில தமிழ் அரசியல்வாதிகளும், ஜே. வி. பி. போலவே, பொதுக்கட்டமைப்புக்கு ஆப்பு வைக்கிற முயற்சிகளில் மும்முரமாக இருக்கிறார்கள். அரசியலில் தற்செயலானவை என்று அதிகம் இல்லை. பொதுக்கட்டமைப்பை எதிர்க்கிறவர்கள் யார் என்று பார்க்கும் போது அவர்களது எதிர்ப்புத் தற்செயலானதல்ல என்று தெரியும்.

அமெரிக்காவையோ ஜப்பானையோ உலகவங்கியையோ தமிழ் மக்களின் நண்பர்கள் என்று யாரும் நம்ப முடியாது. அவர்களது தேவை தமிழ்மக்களது விடுதலையோ சுயாட்சியோ அல்ல. அவர்கள் இன்று தென்னிலங்கையில் வலுவாகக் காலூன்றி நிற்கின்றனர். அதை நாடு முழுவதுக்கும் விரிவுபடுத்துவதே அவர்களது நோக்கம். சில காலமாகவே வடகிழக்கின் பொருளாதார அவலத்தை அவர்கள் தமக்குச் சாதகமாகப் பாவிக்க முயலுகிறார்கள். சுனாமி அதை அவர்கட்கு இலகுவாக்கியுள்ளது. இலங்கை அரசாங்கம் ஒரு பொதுக்கட்டமைப்புக்கு உடன்படாது போனால் நேரடியாகவே விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகட்கு உதவிகளை வழங்குவோம் என்ற தோரணையில் உலக வங்கியினது முகவர்கள் பேசுவது பற்றி நாம் மகிழ்ச்சியடைவது அறிவுடைமையல்ல. 1987ல் இந்தியா வடக்குக்கு விமான மூலம் மனிதாபிமான உதவியை அனுப்பியதையிட்டு மகிழ்ந்தவர்கள் அதையிட்டு மனம் வருந்தச் சில மாதங்களே சென்றன என்பதை நாம் மறக்கலாகாது.

இலங்கை அரசாங்கத்தின் சுனாமி நிவாரண வேலைகளில் அரசியல் நோக்கங்களும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு எதிரான பாகுபாடும் நிர்வாக ஊழலும் அதிகாரிகளது கையாலாகாத்தனமும் உள்ளது பற்றி யாருக்கும் மயக்கங்கள் இல்லை. எனினும் பொதுக்கட்டமைப்பை நிறுவுவதன் மூலம் பல குறைபாடுகளை நீக்க வாய்ப்புண்டு. இப் பொதுகட்டமைப்பில் பாதிக்கப்பட்ட மக்களது நேரடியான பங்குபற்றுதலும் அவர்களது கலந்தாலோசனையும் முக்கிய இடம் பெறுமானால் புனர்நிர்மாண நிவாரண வேலைகள் கூடிய விளைபயனுடன் அமைவதுடன் மக்களின் வாழ்வைப் போருக்கு முன்பான நிலைக்கு வேகமாக மீட்டெடுக்கவும் இயலுமாயிருக்கும்.

பொதுக்கட்டமைப்புப் பற்றி யூ என். பியின் மௌனம் பற்றித் தமிழ்த்தேசியவாதத் தலைவர்களோ பிரதான தமிழ் ஊடகங்களோ எதுவுமே சொல்லவில்லை. யூ என். பியின் கவலை எப்படி அடுத்த ஆண்டு வரவுள்ள சனாதிபதித் தேர்தலில் ஆட்சியைப் பிடிப்பது, எப்படி இந்த அரசாங்கத்தைக் கவிழ்ப்பது என்பது போன்ற விடயங்கள் பற்றியது மட்டுமே. விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் உடன்படக்கூடிய பொதுக்கட்டமைப்பு எதையும் நிபந்தனையின்றி ஆதரிப்போம் என்று ஏன் யூஎன்.பி தலைமையால் தெரிவிக்க இயலவில்லை. இதைப்பற்றித் தமிழ்த் தலைவர்களும் ஊடகங்களும் அறியாமல் இருக்கிறதாக நான் நம்பவில்லை.

இந்த நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் இந்த நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த விரும்பும் அந்நிய நாடுகளின் பகடைக்காய்களாகவே செயற்படுகின்றன. இந்த நாட்டின் உள் விவாகாரங்கள் பற்றிய முடிவுகளை எடுக்க முன்னும் பின்னும் இடையிலும் தேசியத்தலைவர்கள் எனப்படுவோர் தில்லிக்கும் வோஷிங்ற்றனுக்கும் காவடி எடுக்க வேண்டியுள்ளது என்றால் இந்த நாடு சுதந்திர நாடா இல்லையா என்ற கேள்வி தவிர்க்க இயலாததாகவே இருக்கும்.

கால்நூற்றாண்டுக் காலமாகத் தேசிய இனப்பிரச்சனையை முன் வைத்து அந்நியர்கள் இந்த நாட்டைத் தமது செல்வாக்கிற்குட்படுத்தினார்கள். இப்போது மனிதபிமானத்தின் பேராலும் அதுவே நடக்கிறது. சுனாமிக்கு ஆறு மாதங்கள் பின்பும் பாதிக்கப்பட்ட மக்களது நலன்களை முதன்மைப்படுத்தித் தமது குறுகிய நோக்கங்களை ஒதுக்கி வைக்க இந்த நாட்டின் அரசியல் தலைமைகள் ஆயத்தமாக இல்லை என்பது ஒரு வருந்தத்தக்க உண்மை. மறுபுறம், தமது மேலாதிக்க நோக்கங்களை ஈடேற்றப் பாதிக்கப்பட்ட மக்களின் அல்லல்களைப் பயன்படுத்துகிற அந்நிய வல்லரசுகள் இருப்பது இயலாத ஒரு யதார்த்தம்.

சுனாமி நிவாரணமும் புனர்நிர்மாணமும் அடிப்படையில் அரசியல் பிரச்சினைகள். மேலாதிக்க வாதிகளது அரசியலாக உள்ள அவற்றை மக்களின் அரசியலாக மாற்றுவதன் மூலமே மக்களுக்கு முழுமையான மீட்சி உண்டு.

~நரசிம்மா~

# ஜே. வி. பிக்கு மாக்ஸிய அடையாளம் வழங்குவோர் இடதுசாரி விரோதிகளே!

ஜே.வி.பி ஒரு மாக்ஸியக்கட்சி என்று அடையாளப் படுத்துவதில் பிற்போக்குச்சக்திகள் தீவிரமாக உள்ளன. அதைச் செய்வதற்கென்று அவர்களிடம் ஒரு ஊடகக் கூலிப்படை உள்ளது. அரசியல் நிபுணர்களாகவும் நடுநிலையாளர்களாகவும் தங்களைக் காட்டிக் கொள்ளுகிற கூட்டம் ஒருபுறமும் சிங்களப் பேரினவாதத்தின் குரலாகவும் தமிழ்த் தேசியவாதத்தினது குரலாகவும் காட்டிக் கொள்ளுகிறவர்கள் இன்னொரு புறமாகவும் தத்தமது அரசியல் நோக்கங்கட்கு வசதியாகவே ஜே. வி. பியை அடையாளங் காட்டுகின்றனர்.

சிவப்புச் சட்டை போட்டவரெல்லாம் மாக்ஸியவாதி என்று நினைக்கிற 'நிபுணர்கள' இல்லாமலில்லை. ஆனால் ஜே. வி. பி யின் அரசியலை நன்றாக அறிந்து கொண்டே அதை ஒரு மாக்ஸிய இயக்கம் என்று வற்புறுத்தும் விஷமம் வேறுவிதமானது. இந்த விஷமத்தில் இறங்குகிறவர்களது நோக்கம் நாட்டில் உண்மையான இடதுசாரிச் சக்திகள் வலிமை பெறாமல் தடுப்பது தான். இந்த வரிசையில் இப்போது பெ. முத்துலிங்கம் என்பவர் இணைந்திருக்கிறார்.

1960களில் மாக்ஸிஸ லெனினிஸ கம்யூனிற்கட்சி அனுதாபியாகத் தோற்றங்காட்டி ஜே.வி.பி யின் 1971ம் ஆண்டுக் கிளர்ச்சியால் குழம்பிப் போன ஒருவர் இந்த முத்துலிங்கம். அரசியலில் அதிகம் செயலற்று இருந்த இவர் கடந்த சில ஆண்டுகளில் என்.ஜி.ஓ நிறுவனம் ஒன்றினூடாகத் தன்னை முதன்மைப்படுத்திக் கொள்ள முயல்கிறார். ஆறு ஆண்டுகள் முன்பு இலங்கையில் திராவிடர் இயக்கம் என்ற தலைப்பில் இளஞ்செழியன் என்கிற மலையகத் "திராவிட இயக்க வாதியை" விளம்பரப்படுத்தும் ஒரு முயற்சியை மேற்கொண்டு அதற்காகத் தமிழகத்தில் பெரியார் பக்தி இயக்கத்தின் மஹாச்சாரியார்களுள் ஒருவரான எஸ். வி ராஜதுரையால் மெச்சப்பட்டவர். அந்த நூல் பற்றிய விமர்சனங்கள் எதற்கும் முத்துலிங்கத்தால் பதில் கூற இயலவில்லை. மாறாக, இலங்கை இடதுசாரிகள் இலங்கையில் பெரியாரிய இயக்கத்தின் வரலாற்றை இருட்டடிப்புச் செய்துவிட்டார்கள் என்று எஸ். வி. ராஜதுரை தனக்கு விளங்காத விஷயங்கள் பற்றி யார்யாரையெல்லாமோ தூற்றித் தள்ளினார்.

இப்போது முத்துலிங்கம் ஒரு புறம் மலையகத் தமிழர் என்ற அரசியல் அடையாளத்தின் பேரில் பிழைப்பு நடத்துகிற ஓ. ஏ. ராமையா, அந்தனி ஜீவா போன்ற உதிரிகளுடன் கூட்டுச் சேர்ந்து இருந்த போதும், தனது என். ஜி. ஓ பிழைப்புக்குப் பங்கமில்லாமல் நடந்து கொள்ளுகிறார்.

அண்மையில், ஹற்றனை தளமாகக் கொண்டு இயங்கிய செங்கொடிச் சங்கத்தைச் செல்லாக்காசாக்கிச் சீரழித்துத் திரிபுவாதிகளிடம் சோரம் போன ராமையாவின் பேர்ப்பலகையைக் குத்தகைக்கு எடுத்துள்ள அந்தனிஜீவாவுடன் இணைந்து முத்துலிங்கமும் கண்டியில் செங்கொடிச்சங்க மேதினக் கூட்டம் நடத்தினார்கள். செங்கொடிச்சங்கம் கொடிகட்டிப்பறந்த காலத்திலும் கண்டியில் அது வலிய அமைப்பாக இருக்கவில்லை. இப்போது ஒரு உறுப்பினர் கூட இல்லாத கண்டியில் செங்கொடிச் சங்கம் மேதினம் கொண்டாடியதன் மூலம் ராமையாவின் அரசியல் அவலம் மேலும் சிரிப்புக்கிடமாகியுள்ளது. இந்த உதிரிகள் யாவருக்கும் ஜே.வி.பி யின் சரித்திரம் நன்றாகவே தெரியும். ஜே.வி.பி ஒரு பேரினவாதக் கட்சி என்பதை இவர்கள் எல்லாரும் நீண்ட காலமாக அறிந்து வற்புறுத்திப் பேசி வந்தவர்கள் தாம். என்றாலும், ராமையா, திரிபுவாதிகளுடன் ஒட்டிக் கொண்டே "இந்திய வம்சாவழி" அரசியல் கூட்டணி ஒன்றில் இணைந்து, மலையக மக்களை ஏமாற்றிவந்த தொண்டமானுக்கும் சந்திரசேகரனுக்கும் உதவி வழங்கி முட்டாளாக்கப்பட்ட பிறகு ஜே.வி.பி யின் புகழைப் பாடத் தொடங்கினார். பாவம், ராமலிங்கம் சந்திரசேகரன் என்பவர் அவரை முந்திவிட்டார்.

இன்று ஜே.வி.பி பச்சை இனவாதக் கட்சியாகத் தன்னை அடையாளங்காட்டிக் கொண்டுள்ள சூழலில், முத்துலிங்கம் ஜே. வி. பியை மாக்ஸியக் கட்சியாக அடையாளங்காட்டும் தேவை என்ன? அவரது கட்டுரைக்குள்ளேயே ஜே.வி.பி யின் மாக்ஸிய விரோதக் குழறுபடிகளை அவர் சுட்டிக்காட்டுகிற அதே வேளை ஜே.வி.பி ஒரு போலி மாக்ஸிய அமைப்பு என்றோ உண்மையில் ஒரு மாக்ஸிய விரோத அமைப்பு என்றோ அவர் சொல்லத் தயங்குவது ஏன்?

இன்று ஜே.வி.பி க்கு இடதுசாரி அடையாளம் வழங்குவதும் குறிப்பாக மாக்ஸிய அடையாளம் வழங்குவதும் மாக்ஸிய விரோதிகளின் தேவை. அதை அவர்கள் முதலாளியக் கட்சிகள் மூலம் செய்வதை விட என். ஜி. ஓ புல்லுருவிகள் மூலம் செய்வது கூடுதலான பயனளிக்கிறது. ஜே. வி. பியை முதலிலிருந்தே எதிர்த்து வந்தவர்கள் மாக்ஸிய- லெனினிய வாதிகளே என்ற உண்மையையும் இந்த உதிரிகள் திட்டமிட்டே ஒழித்து வந்துள்ளதும் கவனிக்கத்தக்கதே.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் சனநாயகமும்

## அரசியல் வரலாற்று விசாரணை (02)

பேராசிரியர் சி.சிவசேகரம்

உண்மையான ஜனநாயகம், பெரும்பான்மையின் பேரிலான ஆதிக்கமாகவும் அடக்குமுறையாகவும் அமைய இயலாது. பெரும்பான்மை என்பது சமூக அடையாளம் சார்ந்த ஒரு பெரும்பான்மையாக அமைகிற சூழ்நிலையில் பெரும்பான்மையினர் எனப்படுவோரது நலன்களைப் பேணுகிறபேரில் சிறுபான்மையினரது உரிமைகள் மறுக்கப்பட இடமுண்டு. எனவே ஒரு சனநாயகம் பெரும்பான்மையை எப்படி அடையாளங் காணுகிறது என்பதும் பெரும்பான்மையினரது நலன்களைப் பேணுவதற்கும் சிறுபான்மையினரின் நலன்களைப் பேணுவதற்குமிடையிலான முரண்பாட்டை எப்படி தீர்க்கிறது என்பதும் சனநாயகத்தின் தன்மையை அடையாளப்படுத்தும் விடயங்கள்.

பெரும்பான்மையினரின் அதிகாரத்தை விடப் பெரும்பான்மையினரின் பேரிலான அதிகாரமே முதலாளியச் சனநாயக நாடுகளில் உள்ளது. ஏனெனில், அரசின் செயற்பாடுகளிலும் முடிவுகளை எடுப்பதிலும் பொதுமக்களது பங்குபற்றுதல் பாராளுமன்றத் தேர்தல், சனாதிபதித் தேர்தல், உள்ளூராட்சித் தேர்தல் போன்றவற்றில் வாக்களிப்பது என்பதற்கும் அப்பால் போவதில்லை. அதை விட, மக்களின் கருத்துக்களை மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் எவ்வளவு தூரத்துக்குப் பாராளுமன்றத்திற்குள் வற்புறுத்துகிறார்கள் என்பது ஒரு கேள்வி. எந்தளவுக்கு மக்களின் கருத்துக்கள் அரசின் செயற்பாட்டை வழிநடத்துகின்றன என்பது இன்னொரு கேள்வி. உதாரணமாக ஈராக் போரைப் பிரித்தானியப் பொதுமக்கள் வெறுத்த போதும் அரசாங்கம் பிரித்தானியாவை அமெரிக்காவின் போரில் பங்காளியாக்கியது. அது மட்டுமன்றிப் பிரித்தானியாவின் இரண்டு பெரிய கட்சிகளுமே உண்மையிற் போருக்கு எதிரானவையல்ல. அமெரிக்காவின் நிலவரமும் அதிகம் வேறுபட்டதல்ல.

**முதலாளிய பாராளுமன்றத் தேர்தலில் ஒடுக்கப்பட்டவர்களான உழைக்கும் மக்களில் எவரும் தெரிவுசெய்யப்பட வாய்ப்பு இல்லை. ஒருவர், ஒரு முதலாளியக் கட்சி மூலம் தெரிவு செய்யப்பட்டால், தனது சமூகத்தின் நலன்களை எவ்வளவு தூரத்துக்கு வற்புறுத்த இயலும்?**

மக்கள் எந்த வொரு பிரச்சனையிலும் சரியான முடிவுகளை எடுப்பதற்கு அவர்களுக்கு அந்தப் பிரச்சனை பற்றிய முழுமையான பொய்க்கலப்பற்ற தகவல்கள் தேவை. இன்று, தகவல்கட்கு மக்கள் தகவல் ஊடகங்களையே நம்பியுள்ளனர். இந்த ஊடகங்கள் யாரால் வழிநடத்தப்படுகின்றன? இந்த ஊடகங்கள் மக்கள் அறிய வேண்டிய உண்மைகளைத் திரிக்காமல் வெளியிடுகின்றனவா? மக்களிடையே சில கருத்துக்களை உருவாக்குகிற நோக்கத்துடன் அவை செயற்படுகின்றனவா? இந்தக் கேள்விகளுக்கான விடைகள் எந்த முதலாளிய நாட்டின் ஊடகத் துறைக்கும் பெருமை சேர்க்கிற விதமாக அமையாது. குறிப்பாக, இன்று தொலைக்காட்சியே பொதுமக்களின் கருத்தை நெறிப்படுத்தும் செய்தி ஊடகமாக உள்ள சூழ்நிலை மேலைநாடுகளில் உள்ளது. வாசிப்புப்பழக்கம் குறைவாக உள்ள மூன்றாமுலக நாடுகளிலும் இப்போக்கே மேலோங்கியுள்ளது. பெரிய தனியார் தகவல் ஊடகங்கள் எல்லாம் ஒவ்வொரு நாட்டிலும் ஒரு சிலரது கைகளில் உள்ளன. அவற்றை நடத்தப் பெரும் அளவிலான பணம் தேவை. அவற்றுக்கான முதலீடு ஒரு புறமிருக்க நடத்தும் செலவை ஈடுகட்ட வர்த்தக விளம்பர வருமானமும் பொருள் வசதி உள்ளவர்களிடமிருந்தே கிடைக்க முடியும். எனவே பெரிய முதலாளிமாரின் செல்வாக்கு நேரடியாகவே ஒவ்வொரு ஊடக நிறுவனத்தையும் அதன் செயற்பாட்டையும் தீர்மானிக்கிறது.

பாராளுமன்றத் தேர்தல்களும் மாவட்டத் தேர்தல்களும் சனாதிபதி தேர்தலும் பெருந்தொகையான பணச் செலவைக் கொண்டவை. பத்தாயிரக்கணக்கான வாக்காளர்கள் முதல் கோடிக் கணக்கான வாக்காளர்கள் வரை பங்குபற்றும் தேர்தல்களில் வாக்காளர்களுடன் தொடர்பு கொள்ளவும் பிரசாரத்துக்கும் ஆகும் செலவை ஒரு சாதாரணப் பிரசையால் சமாளிக்க இயலாது. எனவே பணவசதி உள்ளவர்கள் அல்லது பணவசதியுள்ளவர்களது ஆதரவு உள்ளவர்கள் மட்டுமே தேர்தலில் போட்டியிட்டு வெல்ல இயலும். அதற்கும் மேலாக, அரசியல் உணர்வு மந்தமாக உள்ள சூழ்நிலைகளில் வாக்காளர்களுக்கு லஞ்சம் வழங்கி வாக்குக்களைப் பெற முடிகிறது. வறிய நாடுகளில் வாக்குக்கள் இப்படி விலைக்கு வாங்கப்படுவது வழமையான ஒரு விடயம்.

வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு வேறு உபாயங்களும் பயன்படுகின்றன. மிரட்டல்கள் மூலமும் வன்முறை மூலமும் மக்களை வாக்களிக்காமல் மறிப்பது. ஆள்மாறாட்டத்தின் மூலம் வாக்குக்களைப் பெறுவது. இவற்றுக்கும் மேலாக, அரசாங்கங்களும் ஆயுதப்படையினரும் பொலிசாரும் வாக்குப் பெட்டிகளைக் களவாடிக் குறிப்பிட்ட கட்சிக்கோ வேட்பாளருக்கோ சாதகமான வாக்கு சீட்டுக்களால் நிரப்புவது போன்ற பல வேறு மோசடிகள் நடக்கின்றன. அமெரிக்காவில் கறுப்பு இனத்தவர்களை வாக்காளராகப் பதியாமல் தடுக்கிற தந்திரங்களும் பயன்படுகின்றன என்பது 2000, 2004ம் ஆண்டு நடந்த தேர்தல்களில் உறுதிப்படுத்தப்பட்ட உண்மை. இது பல மூன்றாமுலக நாடுகளிலும் நடைபெறுவது. தேர்தல் அதிகாரிகள் பலவாறான அரசியல் நெருக்குவாரங்கட்கு உட்பட்டே செயற்படுவதை நாம் அறிவோம். இலங்கையில் தேர்தல்களில் ஒழுங்கீனங்கள் எப்போதுமே இருந்து வந்தாலும் 1977 வரை அவை ஒரு குறிப்பிட்ட அரசியற் கட்சிக்குக் கிடைத்திருக்கக் கூடிய வெற்றியை மறுக்கக் கூடிய அளவுக்கு அமைந்ததில்லை. 1978க்குப் பிறகு அப்பட்டமாகவே சட்ட ஒழுங்குகளை மீறும் விதமாக ஆளுங்கட்சியினர் நடந்து கொண்டதும் வாக்குப் பெட்டிகள் களவாடப்பட்டதும் பெருமளவுக்கு நடந்துள்ளன. இப்போதும் பிரதான அரசியல் அணிகள் இரண்டுமே பலவாறான ஒழுங்கீனங்களில் ஈடுபடுவதை நாம் அறிவோம்.

எனவே முதலாளிய பாராளுமன்றத் தேர்தலில் ஒடுக்கப்பட்டவர்களான உழைக்கும் மக்களில் எவரும் தெரிவுசெய்யப்பட வாய்ப்பு இல்லை. ஒருவர், ஒரு முதலாளியக் கட்சி மூலம் தெரிவு செய்யப்பட்டால், தனது சமூகத்தின் நலன்களை எவ்வளவு தூரத்துக்கு வற்புறுத்த இயலும்? உழைக்கும் மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தும் கட்சி ஒன்று ஆக மிஞ்சினால் ஒரு சில தொகுதிகளிலேயே வெற்றி பெற இயலும். விலக்காக, ஒரு நாட்டின் பாராளுமன்றத்துக்கோ மாநிலத்தின் சட்ட சபைக்கோ ஒடுக்கப்பட்ட மக்களின் பிரதிநிதிகள் பெரும்பான்மையாகத் தெரிவு செய்யப்பட்டு ஆட்சி அமைத்தால் அதைச் செயலற்றதாக்குவதற்கு ஆளும் அதிகாரவர்க்கம் பின்னிற்காது. இந்தியாவின் மாநில ஆட்சி ஒன்றை முதன்முதலாக கம்யூனிஸ்ற் கட்சி 1957ல் கேரளத்தில் கைப்பற்றியது. அதுவே மத்திய அரசால் கலைக்கப்பட்ட முதலாவது மாநில ஆட்சியாகவும் அமைந்தது. பிரித்தானிய கொலனிய ஆட்சியிலிருந்து விடுபட்டு, கயானா பிரித்தானிய முடியாட்சிக்கு உட்பட்ட சுதந்திர அரசாக அமைந்த போது, கம்யூனிஸ்ற் கருத்துடைய கயானா மக்கள் கட்சி தேர்தலில் வெற்றி பெற்றது. பிரித்தானிய மகாராணியார் அந்த ஆட்சியைக் கலைத்து, கயானாவில் இனவாத அரசியல் உருவாக வழி செய்தார்.

சனநாயக முறையில் அதிகாரத்துக்கு வந்த இடதுசாரி ஆட்சிகள் மட்டுமன்றி எத்தனையோ தேசியநலன் பேணும் ஆட்சிகளும் அமெரிக்கத் தலையீட்டின் மூலம் கவிழ்க்கப்பட்டுள்ளன. இன்றுங் கூட, அமெரிக்காவுக்கோ எந்தவொரு ஏகாதிபத்திய நாட்டுக்கோ உடன்பாடற்ற ஒரு சனநாயக ஆட்சி தேர்தல் மூலம் உருவாகுமென்றால் அந்தத் தேர்தல் செல்லாது என்று மறுப்பதும் மோசடிகள் நடந்துள்ளன என்று குற்றஞ்சாட்டுவதும் 1990களில் நிக்கராகுவா முதல் அண்மையில் ஸிம்பாப்வே வரை நாம் கண்டவை. எவ்வாறோ மூன்றாமுலக நாடுகளின் ஆட்சியாளர்களை ஏகாதிபத்திய நலன்கட்கு இணங்க வைப்பதில் அமெரிக்காவும் பிற ஏகாதிபத்திய வல்லரசுகளும் பின்னிற்கப் போவதில்லை. முதலாளியத்துடன் சமரசம் செய்யாமல் இடதுசாரிகள் எந்த நாட்டிலும், எந்த நாட்டின் ஒரு மாநிலத்திலும் ஆட்சியில் தொடர முடியாது.

## பாராளுமன்றமும் சனநாயகமும்

பாராளுமன்றத் தேர்தல்களைக் கம்யூனிஸ்ற்றுக்கள் தந்திரோபாயமாகவே பயன்படுத்துகின்றனர். பாராளுமன்றம் ஒரு கள்வர்குகை என்று கூறிய லெனின் பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கு பற்றுவதையும் பாராளுமன்றத்தை ஒரு களமாகப் பாவிப்பதையும் ஏற்றார். எனினும் பாராளுமன்றத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் நாட்டின் ஆட்சி முறையை மாற்றியமைக்க முடியாது. ஏனெனில் முதலாளிய சனநாயக முறையில் அரச அதிகாரம் பாராளுமன்றத்திற்கும் வெளியே உள்ள அரச நிருவாக, சட்ட நிறைவேற்று பாதுகாப்பு அமைப்புக்களில் தங்கியுள்ளது. நாட்டின் அரசியற் சட்டம் தனியார் சொத்துடைமையை, குறிப்பாக, உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியார் ஆதிக்கத்தை ஏற்கிறது. எந்தச் சனநாயக உரிமை மீறப்பட்டாலும் இந்த உரிமை மீறப்படும் போது ஆளும் அதிகார வர்க்கம் அரச இயந்திரத்தின் ஒவ்வொரு உறுப்பையும் செயற்படுத்தத் தயங்காது. ஏகாதிபத்திய ஆதிக்கத்துக்கு உட்பட்ட மூன்றாமுலக நாடுகளில் ஏகாதிபத்தியம் ஒரு நாட்டின் ஆட்சிக் கவிழ்ப்பிற் பொருளாதாரத் தடைமுதல் ராணுவக் குறுக்கீடு வரையிலான பல வகைகளிற் குறுக்கிட இயலும்.

எனவே, சனநாயகம் என்பது முதலாளியப் பாராளுமன்றச் சனநாயகம் என்ற வரையறைக்குள் மட்டும் நிற்காமல் மக்களுடைய அரசியல் அதிகாரத்தின் விரிவான பயன்பாடு என்ற திசையில் நகர வேண்டியுள்ளது. அதாவது, உழைக்கும் மக்கள் தமது சனநாயக உரிமைகளை நிலைநாட்டி இரண்டு தளங்களில் இயங்கவேண்டும். ஒரு புறம், முதலாளியச் சனநாயகத்தைத் தந்திரோபாயமாகப் பயன்படுத்தும் தேவை உள்ளது. முதலாளிய சனநாயகத்துக்கு எதிராக அதிகாரவர்க்கம் இராணுவச் சதியையோ அயற் குறுக்கீட்டையோ பாவிக்காமல் தடுக்கிற தேவை அதில் ஒரு முக்கியமான பகுதி. அதே வேளை, உண்மையான அரசியல் அதிகாரம் எங்கே உள்ளது என்ற தெளிவுடன் அதைக் கைப்பற்றி ஒரு மாற்று அரசியல் அதிகாரத்தை உருவாக்கும் தேவை உள்ளது. இதுவே மிக முக்கியமான சனநாயகப் பணி. இது மக்களை அரசியல் அதிகாரம் உடையவர்களாக்குவது பற்றியது. மக்கள் சனநாயகத்துக்கான செயற்பாடுகள் மக்கள் மத்தியிலிருந்தே உருவாக்கப்படவேண்டியன. பாராளுமன்ற அரசியலின் போதாமையை மக்களுக்கு உணர்த்துவதும் அதற்கு மாற்றான மக்கள் சனநாயகத்தை நடைமுறைமூலம் உருவாக்குவதுமே வெகுசன அரசியலின் முக்கியமான அரசியற்பணிகள்.

**பாராளுமன்றத் தேர்தல்களைக் கம்யூனிஸ்ற்றுக்கள் தந்திரோபாயமாகவே பயன்படுத்துகின்றனர். பாராளுமன்றம் ஒரு கள்வர்குகை என்று கூறிய லெனின் பாராளுமன்றத் தேர்தல்களில் பங்கு பற்றுவதையும் பாராளுமன்றத்தை ஒரு களமாகப் பாவிப்பதையும் ஏற்றார். எனினும் பாராளுமன்றத்தில் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலம் நாட்டின் ஆட்சி முறையை மாற்றியமைக்க முடியாது.**

# பொதுவுடைமைவாதிகளும் தேசியவாதிகளும்

இன்று மூன்றாம் உலக நாடுகளில் தத்தமது தேசியங்களை வலியுறுத்தும் வகையிலான போராட்டங்கள் இடம் பெற்று வருவதைக் காணமுடிகின்றது. இன மேன்மை, மொழித் தொன்மை, பிரதேசப் பாரம்பரியம் என்பனவற்றை உள்ளடக்கிய தனித்துவங்களை பாதுகாத்து நிலைநிறுத்திக் கொள்ளவே தேசியவாதத் தலைமைகள் ஒடுக்கு முறையினைக் கையாளும் பெரும் தேசிய ஆளும் வர்க்க சக்திகளுக்கு எதிராகப் போராட்டங்களை நடாத்தி வருகின்றன. இலங்கையில் இடம் பெறும் தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டமும் இதில் ஒன்றாகும்.

இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கும் தேசியவாதத் தலைமைகள் வரலாற்றில் இருந்து மிக முக்கிய அனுபவங்களையும் பாடங்களையும் படித்து கொள்ள வேண்டிய நிலைக்கு இன்றைய சர்வதேசியச் சூழல் நிர்ப்பந்திக்கிறது. அதாவது உலகில் தேசியவாதத் தலைமைகள் எனப்பட்டவை ஒருபோதும் தூய்மையான நடுநிலை என்ற நிலைப்பாட்டை வகித்து நின்றதில்லை. எந்த தேசியவாதத் தலைமையும் அதன் கீழான போராட்டமும் ஏதாவது ஒரு பக்கத்தைச் சார்ந்தே நிற்க வேண்டிய நிலை என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அதாவது முற்போக்கையும் சமூக விடுதலையையும் இறுதியில் சோஷலிசத்தையும் முன்னிறுத்தி நிற்கும் பொதுவுடைமையின் பக்கம் தேசியவாதத் தலைமையானது நிற்க வேண்டும். அல்லது நிலவுடமை முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் பக்கம் நிற்க வேண்டும். முன்னையதன் பக்கம் நின்ற தேசியவாதத் தலைமைகள் வரலாற்றில் தமக்குரிய மக்கள் சார்பு நிலையினை வெளிப்படுத்தி நாட்டிற்கும் மக்களுக்கும் மிகப்பெரும் சேவைகள் புரிந்து சாதனைகளை நிலை நாட்டிச் சென்றன. பின்னையதன் பக்கம் நின்ற தேசியவாதத் தலைமைகள் முதலாளித்துவ ஏகாதிபத்தியத்தின் சேவகர்களாகி மக்களையும் அழித்து நாட்டையும் காட்டிக் கொடுத்து வரலாற்று அவப்பெயரையும் பொறித்துக் கொண்டன.

உலக வரலாற்றில் ஒரு சில உதாரணங்களை நோக்குவது பயன் உள்ளதாகும். சீன நாட்டையும் மக்களையும் அடிமைத்தனம், அந்நியப் பிடி, அறியாமை என்பனவற்றிலிருந்து மீட்டெடுக்க முன்வந்த சீனத் தேசிய வாதிகளுக்கு தலைமை தாங்கியவர் சன் யட் சன் என்ற அறிவு ஜீவியாவார். அவரது தலைமையிலான கொமிண்டாங் கட்சியானது சீனப் பொதுவுடைமைக் கட்சியுடனும் தோழர் மாஓ சேதுங்குடனும் இணைந்து நின்று செயற்பட்டனர். ஆனால் சன் யட் சன் மறைவுக்குப் பின் அக் கட்சிக்குத் தலைமை தாங்கிய சியாங்கை ஷேக் பிற்போக்கின் பக்கம் சென்று யப்பானிய ஏகாதிபத்தியத்தின் கையாளாகி பொதுவுடைமைக் கட்சியை அழித்தொழிக்கப் போரிட்டு இறுதியில் தோல்வி காண நேர்ந்தது. ஆனால் யப்பானையும் அமெரிக்காவையும் தோற்கடித்து சீனம் எழுந்தது.

வியட்நாமில் தேசியப் போராட்டத்தை தலைமைதாங்கிய தேசியவாதத் தலைவர் ஹோசிமின் விரைவாகவே பொதுவுடைமையாளராகி வியட்நாம் பொதுவுடைமைக் கட்சிக்குத் தலைமை தாங்கி சர்வ வல்லமை கொண்ட அமெரிக்க ஏகாதிபத்தியத்தை வியட்நாம் மண்ணில் இருந்து துடைத்தெறிந்து ஒன்றுபட்ட வியட்நாமை உருவாக்க முடிந்தது.

கியூபாவில் தேசிய வாதியாகப் போராட்டத்தை வழி நடாத்திய பிடல் காஸ்ரோ போராட்ட அனுபவங்களின் ஊடே மாக்சிச லெனினிச வாதியாகி பொதுவுடமைக் கட்சிக்கே தலைமை தாங்கினார். இன்றுவரை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியாத வீரம் மிக்க கியூ நாட்டிற்கு தலைமை தாங்கி நிற்கின்றார்.

தொடர்ச்சி 9ஆம் பக்கம்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஊடகவியலாளர் டி.சிவராமின் அரசியல் பற்றிய ஒரு மதிப்பீடு

டி.சிவராமின் கொலையைத் தொடர்ந்து அவர்பற்றிய பல்வேறு விதமான மதிப்பீடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அண்மைக்காலத்தில் கொலைக்குள்ளான தமிழ்ப் பத்திரிகையாளர்களில் தென்னிலங்கையில் அதிகம் அறியப்பட்டவர் என்பதாலும் போரியல் நிபுணர் என அறியப்பட்டிருந்ததாலும் விடுதலைப்புலிகளுக்கு நெருக்கமானவர் என்பதாலும் அவரது கொலை சிங்கள ஆங்கில ஊடகங்களிலும் கணிசமான கவனிப்பைப் பெற்றது. சிவராம் பற்றிய மதீப்பீடுகளிற் சில, பத்திரிகையாளர் என்ற அளவில் அவரது தகைமைக்கு மட்டுமே முக்கியத்துவந் தந்தன. அவரது அரசியல் நிலைப்பாடு பற்றிய மதீப்பீடுகளில் விடுதலைப் புலிகள் பற்றி ஒருவரது நிலைப்பாடே சிவராம் பற்றிய நிலைப்பாட்டையும் தீர்மானித்ததைப் பரவலாகக் காண இயலுமாயிருந்தது.

சிவராம் ஒரு மாமனிதராகக் கவுரவிக்கப்பட்டதன் விளைவாக விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்களாகத் தம்மைக் கருதுகிறவர்கள் பொதுவாகவே சிவராமை விமர்சனத்துக்கு அப்பாற்பட்ட ஒருவராகவே காண முற்பட்டனர். மறுபுறம் விடுதலைப் புலிகள் மீதான வெறுப்பைச் சிவராம் பற்றிய காழ்ப்பான சொற்கள் மூலம் வெளிப்படுத்தியவர்களும் உள்ளனர். இரண்டு விதமான போக்குக்களும் தவறானவை என்பது ஒரு விடயம். அதிலும் முக்கியமாகச் சிவராம் சொல்லியிருந்தால் அது சரியானது என்கிற விதமான மயக்கம் சில தமிழ் ஊடகங்களில் உருவாக்கப்பட்டு வருகிறது.

காலஞ்சென்ற கூட்டணித் தலைவர் சிவசிதம்பரத்தின் அரசியல் வரலாற்றின் பெரும் பகுதி போல சிவராமின் அரசியற் கடந்த காலத்தின் ஒரு பகுதி பேசப்படாத ஒரு விடயமாகவே உள்ளது. சிவராமின் அரசியல் நிலைப்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்கள் பற்றி ஆராய்வதோ அவரது தனிப்பட்ட குறைநிறைகளை அலசுவதோ நமக்கு முக்கியமானதல்ல. எனினும் அவரது ஆளுமையும் பங்களிப்பும் பற்றிய ஒரு நிதானமான மதிப்பீட்டுக்குத் தேவை உள்ளது. அதற்கும் மேலாக அவரது ஆய்வுகளின் அடிநாதமாக உள்ள அரசியல் நிலைப்பாட்டையும் அணுகுமுறையையும் அடையாங்காணுந் தேவையுள்ளது. இல்லாது போனால் எவரும் தமது வசதிக்கேற்றபடி சிவராமின் எழுத்துக்களைப் பயன்படுத்திக்கொள்ளலாமே ஒழிய அவரது முடிவுகள் எவ்வளவு தூரம் செல்லுபடியானவை என்று மதிப்பிட இயலாது. சிவராமின் தமிழ், ஆங்கில எழுத்தின் தெளிவு இன்று நம்மிடையே உள்ள பெரும்பாலன தமிழ்ப் பத்திரிகையாளர்கள் பின்பற்ற உகந்தது. ‘தமிழ் நெற்’ இணையத்தளத்தில் அவரது பங்களிப்பு மெச்சத்தக்கது. வெறும் பிரசார இணையத்தளமாக இருந்த அதை இலங்கைத் தமிழர் பற்றிய தகவல்களைத் தகவல்களாக வழங்கும் ஒரு இணையத்தளமாக மாற்றியது ஒரு பயனுள்ள பணி. சொற்பிழை இலக்கணப் பிழையற்ற முறையில் தகவல்களைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் விரைவாகவும் வழங்கும் ஒரு ஊடகமாக்கியது இன்னொன்று. அவரது பங்களிப்பின் பெறுமதியை, அவரது மறைவின் முன்பும் பின்பும் ‘தமிழ் நெற்’ தகவல்களைப் பார்த்தோர் உணர்வர். போரியல் பற்றிய அவரது அக்கறை காரணமாகவோ என்னவோ அவரது எழுத்துக்களில் ஆயுத வலிமை, போர்முறை என்பன பெற்ற கவனத்தை வெகுசன அரசியல், மக்கள் யுத்தம் ஆகியன பெறவில்லை. விடுதலைப் போராட்டத்தின் சமூக அரசியல் பரிமாணத்தை விட இராணுவப் பரிமாணத்தித்திற்கும் வல்லரசு அரசியற் காய் நகர்த்தல்கட்கும் அவர் வழங்கிய முக்கியத்துவம் பெரிது. இதனாலேயே தமிழ் மக்களின் நிலைப்பாட்டைச் சிங்கள மக்களுக்குக் கொண்டு சென்றவர் என்ற சிலரது பாராட்டுரை மிகையானதாகிறது.


சண்டே ற்றைம்ஸ், ஐலன்ட் ஆகிய ஏடுகள் சிங்களப் பேரினவாத அரசியலை முதன்மைப்படுத்துகிற ஏடுகள். சண்டே ற்றைம்ஸ் ஒரு நடுநிலையான பாசாங்கைக் கடைப்பிடிக்கிற போக்கில் யாராவது ஒரு தமிழரைக் கொண்டு ஒரு பத்தியை எழுதுவித்தது. சிவராமின் எழுத்து வெளிவெளியாகவே விடுதலைப் புலிகட்கு ஆதரவாக வலிமையாக வெளிப்பட்ட நிலையில், சிவராமின் பத்தி இடைநிறுத்தப்பட்டது. நீண்ட காலத்தின் பின்பு, அதே பேரினவாத நிறுவனத்தின் சற்று நிதானமான டெய்லி மிரரில் அவரது எழுத்துக்கள் வெளியாயின. எனினும் சிவராம் தனது எழுத்தை அங்கு பயன்படுத்திய முறை சற்று வித்தியாசமாக இருந்தது.

ஐலன்ட் தனது ‘நம்பகத் தன்மைக்காக’ இனத்துவேஷம் மிக்க பல கட்டுரைகள் நடுவே தமிழர் ஒருவரது கட்டுரையை இடையிடையே பிரசுரிக்கும் ஐலன்ட் தமிழர் பற்றிய பகைமையான ஒரு கண்ணோட்டத்தை வளர்க்கும் நோக்குடனே ஒரு பிரச்சனை பற்றிய ‘தமிழ் நிலைப்பாட்டை’ முன்வைத்து, அதற்குப் பேரினவாதிகளின் மூர்க்கமான எதிர்வினைகளையும பிரசுரிக்கும். ஐலன்ட் ஆங்கிலம் படித்த சிங்களவர்களின் பேரினவாத மனங்களில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் பற்றிய எந்தவிதமான தெளிவையும் உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டனவல்ல என்பதை அறிய யாரும் ஊடகவியல் நிபுணராக இருக்கத் தேவையில்லை. சிவராமை ஐலன்ட் அதற்காக எழுதுவிக்கவில்லை. சிவராம் அதற்காக எழுத வுமில்லை.

சிவராமின் பங்களிப்பின் பெறுமதி எவ்வளவாயிருந்தாலும் அதை



மறுதலிக்கிற விதமாக முன்னாள் நவசமசமாஜக் கட்சிப் பிரமுகரும் இந்நாள் பச்சை இன வெறியருமான நளின் டி சில்வா முதலாகப் பல்வேறு பேரினவாத ‘ஆய்வாளர்கள்’ எழுதும் கட்டுரைகளை நாள் தவறாமல் ஐலன்ட் வெளியிட்டு வந்தது. வருந்தத்தக்க ஒரு விடயம் எது வென்றால் கடுமையான பேரினவாத நெருக்குவாரங்கட்கி டையே தமிழ் மக்களின் போராட்ட நியாயத்தைச் சொல்லி வரும் நல்ல சக்திகள் சிங்களவரிடையே இருந்து வந்துள்ளனர் என்பதைத் தமிழ் ஊடகவியலாளர்களும் எழுத்தாளர்களும் உரிய நேரங்களில் மறந்து விடுகின்றனர் என்பதாகும்.



D. Sivaram

சிவராமின் மாக்ஸிய விரோதம் மாக்ஸியவாதிகளை ஓரங்கட்டுகிற ஒரு போக்காக அவரது எழுத்தில் வெளிப் பட்டு வந்துள்ளது. அதன் ஒரு விஷமத்தனமான பரிமாணமும் அண்மையிற் புலனானது. ஜே. வி. பி ஒரு மாக்ஸியக் கட்சி என்றும் அதன் பேரினவாத அரசியல் வழமையான ஒரு மாக்ஸிய உபாயம் என்றும் அவர் இவ் வருட முற்பகுதியில் எழுதியிருந்தார். இன்றைய ஜே. வி. பி யில் எந்தவித மாக்ஸியமும் இல்லை என்பது இலங்கையின் அரசியல் தெரிந்த யாவரும் அறிந்த விடயமே. மாக்ஸியவாதிகள் என்றுமே பேரினவாதத்தை அரசியற் கருவியாக ஏற்க இடமில்லை என்பதும் சிவராம் அறியாத விடயமல்ல. இருபத்தைந்து ஆண்டுகள் முன்பு மாக்ஸியம் பற்றி அவர் எழுப்பிய சற்றே கருத்துக் குழப்பமான ஒரு கேள்வியை முன்வைத்து அவருக்கு மாக்ஸியத்தில் புலமை உண்டு என்று ஒரு முன்னாள் புலி எதிர்பு ‘இலக்கியவாதி அண்மையில் எழுதியிருந்தார். மாக்ஸியம் பற்றிச் சிவராமின் அக்கறை அதை அறிவது பற்றியதாக இருந்ததாகக் கூற இயலாது. குறுகிய தமிழ்த் தேசியவாத மரபில் வந்த மாக்ஸிய விரோதத்திற்கு அவர் விலக்காக அமையவில்லை.

> எந்தவொரு ஊடகவியலாளரோ அன்றி வேறு எவருமோ அவர் கொண்டிருக்கும் கருத்துக்களுக்காகக் கொல்லப்படக் கூடாது. அந்த வகையில் சிவராமின் கொலை எவருடைய துப்பாக்கியின் மூலம் இடம் பெற்றிருந்தாலும் அது வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும். அதேவேளை சிவராமின் கருத்தும் எழுந்தும் எத்தகையவை என்பதை இவ் வேளை சீர்தூக்கிக் பார்ப்பது தேசிய இனவிடுதலைப்போராட்டச் சூழலில் அவசியமானதாகும். ஆ-ர்

குறுகிய தேசியவாதத்தின் இன்னொரு வலுவான பரிமாணமாகப் பிரதேசவாதம், சாதிய அரசியல் என்பன அமையலாம் என்பதற்கு இன்று தமிழகத்தில் திராவிட இயக்கத்தின் சீரழிவிலும் இலங்கையின் தமிழ்த் தேசியவாதத்தினுள்ளும் போதிய சான்றுகள் உள்ளன. கருணா அயற் தூண்டுதலால் விடுதலைப் புலிகள் இயக்கத்தினுள் பிரதேசவாத அரசியலை முன்னெடுப்ப

**-மோகன்-**


தற்குச் சில மாதங்கள் முன்பு வரை சிவராமின் எழுத்தில் மட்டக்களப்புப் பிரதேசவாத முனைப்பைக் காண முடிந்தது. இது புதிய பூமியில் கடுமையாக விமர்சிக்கப்பட்டதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

தேசியவாதத்தால் மக்களை ஒன்றுபடுத்துகிற சக்தியாக நீடித்துச் செயற்பட இயலாது. ஏதோ ஒரு சூழ்நிலையில் அது வர்க்க நலன்கட்கும் வர்க்க முரண்பாடுகட்கும் முகங்கொடுத்தே தீர வேண்டும். சிறு முதலாளியப் போக்குக்கள் தலை தூக்கும் போது. அரசியல் சந்தர்ப்பவாதம் சாதி, மதம், பிரதேசம் போன்ற வேறுபாடுகள் மூலம் செயற்படுகிறது. ஈழத்தமிழ் மக்களின் விடுதலை இயக்கம் இன்னமும் தமிழ்ச் சமூகத்தின் அக முரண்பாடுகட்கும் ஒடுக்குமுறைகட்கும் சரிவர முகங்கொடுக்கவில்லை. புதிய பூமியில் இது பற்றிச் சில மாதங்கள் முன்பு விரிவாக ஆராயப் பட்டிருந்தது, சிவராம் தனது இறுதிக் காலக் கட்டுரைகளுள் ஒன்றில் இந்த உண்மையை முதன் முறையாக ஏற்றிருந்தார் என்பது நல்ல ஒரு அறிகுறியாகத் தென்பட்டது.

தமிழ் தேசியவாதிகள் பலரை விட அதிகளவுக்கு இலங்கையின் அலுவல்களில் வல்லரசுகளின் தலையீடு பற்றியும் சிவராம் எழுதியிருக்கிறார். எனினும் இந்தியாவின் நோக்கங்களை அறிந்தது போல அவர் எழுதியதில்லை. அமெரிக்காவைப் பற்றிச் சிறிது விமர்சித்து எழுதியபோதும், அமெரிக்க ஆதிக்கத்துக்கு எதிரான ஒரு வலுவான முனைப்பு அவருடைய எழுத்தில் இருந்ததில்லை. அதே வேளை, சீனாவுக்கு இலங்கையின் பூகோள மூலோபாய முக்கியத்தை மிகவும் வலியுறுத்தி எழுதி வந்துள்ளார். இங்கே அவருடைய ஆய்வுத் திறனை விடத் தமிழ்த் தேசிய வாதத்தினுடன் ஒட்டிப் பிறந்த சீனவிரோத முற்சாய்வு தான் மேலோங்கி நிற்கிறது.

சிவராமின் அகச்சார்பான போக்கு கூடுதலாகத் தெரிவது சிங்களமக்கள் மீதான பொதுவான அவநம்பிக்கையிலேயே தான். நீண்டகாலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் போரைத் தூண்டுகிற விதமாகவே அவர் தமிழில் எழுதிவந்துள்ளார். ஆங்கிலத்தில் இந்த முனைப்புக் குறைவாகவே காணப்படுவது கவனிக்கத்தக்க ஒரு விடயமெனலாம். குறுதிய இனவாதப் போக்குக்கள் எந்தத் தேசிய இனத்திற்குள்ளும் உருவாகி வளரக் கூடியவை என்பதை அவர் அறியாமல் இருந்திருக்க இயலாது. சிங்கள, தமிழ் தேசிய இனங்களிடையிலான முரண்பாடுகளின் சினேகமான தீர்வை அவர் விரும்பியதாகவோ வற்புறுத்தியதாகவோ சொல்ல இயலாது. இது சில தீவிர தமிழ்த் தேசியவாதிகட்கு அவரை மேலும் இனியவராக்குவது அதிசயமில்லை. முஸ்லிம்களின் பிரச்சனைகளில் அவரது அக்கறை போதுமானதாயிருந்ததாயும் கூறஇயலாது. மறுபுறம் சிவராம் மீது வெறுப்பைக் கக்குகிற தமிழ் அரசியல் வாதிகளும் ஊடகவியலாளர்களும் மேற் குறிப்பிட்ட குறைபாடுகட்காக அவரை நிராகரிக்வில்லை. விடுதலைப்புலிகள் மீதான அவர்களின் பகைமையே சிவராமின் மீது வெறுப்பாக வெளிப்படுகிறது. சிவராமின் கொலை பற்றிய பரபரப்பு ஓய்ந்த பின்பு அவரது கடந்தகால அரசியலும் நடத்தையும் பற்றிய சில தகவல்கள் கவனமாகக் கசியவிடப்படுகின்றன. இதன் நோக்கம் பற்றியும் நாம் தெளிவாக இருப்பது நல்லது.


இன்று சிவராமின் கருத்துக்களுக்கு வழங்கப்படும் முக்கியத்துவம் ஒவ்வொருவர் தமது அகச்சார்பான நிலைப்பாடுகளை ஒட்டி வழங்குவது என்பதே உண்மை. உலக விவரங்கள் பற்றிய அறிவு அவரிடம் இருந்தாலும் அவரது பார்வை உலகளாவிய ஒரு விடுதலைப் பார்வையாகவோ விடுதலைப் போராட்டங்களிடையே ஒருங்கிணைவு தேடும் பார்வையாகவோ அமையத் தவறியதற்கு முதலாளியச் சார்பான ஒரு தேசியவாதமே அடிப்படையாயிருக்க வேண்டும். அவரிடம் ஒரு நிலையில் தலைதூக்கிய பிரதேசவாதத்தின் அடிப்படையும் அதுவாகவே அமையக் கூடும்.



ஏகாதிபத்திய உலகமயம் மானுடத்தின் புதைகுழி



அமெரிக்க இந்திய ஆதிக்கப் போட்டிக்கு தேசிய இனப்பிரச்சினை தீர்வு பலிக்கடா



பொதுவுடமைச்செங்கொடியை உயர்த்தி முன் செல்வோம்

யாழ்ப்பாணத்தில் புதிய-ஜனநாயக கட்சி நடாத்திய மே தினத்தில் வைக்கப்பட்ட மூன்று கட்டவு ட்டுக்களை மேலே காணலாம்.

## அன்று இந்தியா! இன்று அமெரிக்கா!

அன்று தமிழர் கூட்டணியினர் இந்தி யாவை தொப்புள் கொடி உறவு எனக் கொண்டாடி இந்திய ராணுவம் இங்கு வந்து கொண்டது. மறைந்த அமிர்தலிங்கம் அதற்கு உரிமை கொண்டாடி மகிழ்ந்தார். அதன் வழியிலே இன்று ஆனந்தசங்கரியாரும் இந்திய ராணுவம் மீண்டும் வர வேண்டும் என வேண்டிநிற்கிறார்.

அன்று கூட்டணியாக நின்றவர்கள் இன்று கூட்டமைப்பாகி நிற்கின்றனர். அவர்களுக்கு உள்ளூர் இந்தி யப் பாசம் இருந்தாலும் இப்போது அமெரிக்கத் துதிபாடி வருகின்றனர். அண்மையில் அமெரிக்க உதவிச் செயலர் கிறிஷ்டினா ரொக்கா இலங்கை வந்த போது பிரிவினைக் கோரிக்கையைத் தாம் எதிர்க்கவில்லை என்று கூறியது தான் தாமதம் கூட்டமைப்பின் ஈழவேந்தனும் கனகசபையும் ரொக்காவையும் அமெரி க்காவையும் ஏற்றிப் போற்றி புகழாரம் சூட்டினர் காதில் தேன் பாய்வதாக ஈழவேந்தன் எம்.பி. அறிக்கை விட்டார். இந்தியா வைப் புகழ்ந்து இந்தியாவால் கழுத்தில் பிடித்து தள்ளப்பட்ட அந்த மனிதர் இப்போது அமெரிக்க புகழ்பாடி நிற்கிறார். அமெரிக்கா சிரித்தாலும் அழுதாலும் மௌனம் காட்டினாலும் அவற்றில் உலக மேலாதிக்க ஏகாதிபத்திய அர்த்தம் இருக்கவே செய்யும். ரொக்கா ஏன் சொன்னார் எதற்கு முத்தாப்பு வைத்தார் என்பதை தூர நோக்கில் சிந்திக்காது அமெரிக்க புகழ்பாட முற்படுவது மிகவும் முட்டாள்தனமானதாகும். முன்பு இந்தியா இப்போது அமெரிக்கா என ஏமாறக் கூடாது என்பதைத் தமிழ் மக்கள் புரிந்தால் போதுமானதாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஜே. வி. பி தலைவருக்கு
## தோழர் வாசுதேவ நாணயக்காரா
### பகிரங்க கடிதம்

அமெரிக்காவின் உதவிச் செயலர் கிறிஸ்ரீனா றொக்காவிடம் ஜே.வி.பி யினர் கடிதம் ஒன்றை ஏப்ரில் 20-04 2005 கையளித்தனர்.

**அக்கடிதத்தில்**

முதற் கண் ஜே.வி.பி அமெரிக்க மக்களுக்கும் அரசாங்கத்திற்கும், ஆயுதப் படையினருக்கும் தனது விசேட நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது. எமது கட்சியும், எமது மக்களும் உங்களின் தயவுக்காக மனதார மெச்சுவதுடன் நன்றியுடையவர்களாகவு முள்ளோம்.

எமது இலட்சியத்தை கைவிடாத முதலாவது புரட்சிகர கட்சி யென்ற நிலையிலிருந்து பாராளுமன்ற கட்சியாக மாற்ற மடைந்து கலப்புப்பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்டுள்ளோம். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் உங்கள் நாட்டவர் மனிதாபிமானத்துடன் ஆற்றிய பணி பற்றி எமது கட்சி ஊழியர் மிக உயர் வாகமெச்சி அறிக்கை சமர்ப்பித்திருந்தனர். கொடுங்கோலும், ஜனநாய மறுப்பும் எமது நாட்டில் ஒரு பகுதியில் மட்டுமே நிலவுகிறது. அங்கு பிரபாகரனின் ஆட்சி நிலவுகிறது. ஜனாதிபதி புஷ் தெரிவித்ததைப் போன்று ஜனநாயகம் மட்டுமே சமாதானத்திற்கு இட்டுச் செல்லும் என்பதே ஜே.வி.பியும் நம்புகின்றது. இலங்கையில் ஜனநாயகம், சுதந்திர தேர்தல்கள் மனித உரிமை பேச்சு சுதந்திரம் சட்டத்திற்கு மதிப்பு பகிரங்கத்தன்மை சிறுவர்களின் உரிமைகள் என்பவற்றில் அமெரிக்கா இலங்கைக்கு உதவமுடியும். இலங்கையில் பிறந்த தற்சமயம் அமெரிக்க பிரஜையான ஒருவர் 50 இலட்சம் டொலர்களை வழங்கியதை அமெரிக்கா விசாரணை செய்யவேண்டும். இந்த நபரின் நடவடிக்கை ஒருபயங்கரவாத நடவடிக்கையென்பது மட்டுமல்ல அமெரிக்காவின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலுமாகும். இவ்வாறு முக்கிய அம்சங்களைச் சுட்டிக் காட்டி எழுதப்பட்டுள்ள கடிதத்தை ஜே.வி.பி தலைவர் கையெழுத்திட்டு நேரடியாக அமெரிக்க உதவிச் செயலாளர் கிறிஸ்னா றொக்காவிடம் கையளித்தார். இக் கடிதம் 24-04-2005 Sunday Leadr பத்திரிகையில் வெளிவந்தது.

மேற்படி கடிதத்திற்கு பதிலளிக்கு முகமாக ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார மே மாதம் 6ம் திகதி எழுதிய பகிரங்கக்கடித்தின் சாராம் சம் பின்வருமாறு.

**ஜே.வி.பி யினர்- ஏகாதிபத்தியத்தின் புதிய கையாட்களா?**

சோமவன்ச அமரசிங்கா அவர்களே!

கிறிஸ்ரீனா றொக்காவுக்கு நீங்கள் எழுதிய கடிதத்தை பார்த்ததும் என் கண்களையே நம்ப முடியவில்லை. ஈராக்கிய மக்களின் கசாப்புக் கடைக்காரனான ஜனாதிபதி புஷ்சை நீங்கள் புகழ்வது எவ்வாறு எனப் புரியவில்லை.

புஷ் அவரது நாட்டில் அரைவாசி மக்களால் நிந்திக்கப்படுகிறார். அவரது வலதுசாரி அடிப்படை வாதத்திற்கு எதிராக உலக மக்கள் உள்ளனர்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

### மலையகத்தில் பரந்து

4ஆம் பக்க தொடர்ச்சி........

(2)ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புழு மருந்து (புச்சிமருந்து) வீட்டிலுள்ள அனைவரும் உட்கொள்ளவேண்டும். அத்தோடு மீண்டும் புழு முட்டைகள் எமது குடலை அடையாமலிருக்க மலம் கழித்த பின்னரும் உணவு உண்ண முன்னரும் சவர்க்காரம் கொண்டு கைகழுவவேண்டும். எமது நகங்களை வெட்டி சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.

மேலும் புழுக்குஞ்சுகள் (லாவாக்கள்) எமது கால் விரல் இடைவெளியூடாக அல்லது தோலினூடாக எமது உடலை மீண்டும் அடையலாம். எனவே நாங்கள் பாத அணிகளை வெளியே செல்லும் போது கட்டாய மாக அணியவேண்டும். அத்தோடு தோட்டங்களில் வேலை செய்பவர்கள் வேலை முடித்தவுடன் கால்களை சவற்காரம் கொண்டு நன்றாக கழுவவேண்டும்.

கர்ப்பிணி தாய்மார்கள் நல்ல போசாக்கான உணவை உட்கொள்ள வேண்டும். மீன் நெத்தலி இறைச்சி, பால், கீரைவகைகள், மற்றும் பழவகைகளை இக்காலப்பகுதியில் அதிகமாக உண்ண வேண்டும். அத்தோடு குருதிப்பரிசோதனையின் போது (Hhg%) ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருந்தால் சிகிச்சை நிலையங்களில் கொடுக்கப்படும். இரும்புச்சத்து வில்லைகள், போலிக் கமிலம்(Folic Acid) வில்லைகள் மற்றும் கல்சியம் வில்லைகளை கிரமமாக உட்கொள்ள வேண்டும். குடும்பத் திட்டமிடல் மூலம் முதற்பிள்ளைக்கும் இரண்டாவது பிள்ளைக்குமிடையில் குறைந்தது மூன்றுவருட இடைவெளியாவது இருக்கவேண்டும்.

மதுபானம் அருந்துவதால் ஈரல் பாதிக்கப்படுகிறது. இதனால் களம், இரைப்பையிலுள்ள நாளங்கள் வெடித்து இரத்தவாந்தி உண்டாகிறது. அத்தோடு குடற்புண் உருவாகி குருதி இழக்கப்படுகிறது. எனவே மதுபான பழக்கத்தை கைவிடுவதால் இரத்தசோகை ஏற்படுவதை தவிர்க்கலாம்.

மற்றும் மூலவியாதி மாதவிடாயின் போது அல்லது கருப்பையிலிருந்து குருதி அதிகமாக வெளியேறினால் உடனடியாக வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்றுக் கொள்ளவேண்டும்.

எனவே ஆரோக்கியமான ஒரு மனித சமுதாயம் உருவாகவேண்டு மானல் அவர்கள் எவராயினும் நல்ல பழக்கவழக்கங்களை கற்றுக் கொண்டு அதன்படி நடந்து தீய பழக்கவழக்கங்களிலிருந்து விலகியும் வாழ்க்கையை திட்ட மிட்டும் நடாத்த வேண்டும். நாம் செய்யும் ஒவ்வொரு காரியங்களையும் தர்க்க ரீதியா (Logical Thinking) சிந்தித்து சிக்கனமாக செயற்படுவோமானல் பொருளாதார வசதி குறைந்த ஏழைகளானாலும் குறைந்த விலையில் இலகுவில் கிடைக்கும் பொருட்களை கொண்டு விவேகமாக செயற்படல். வேண்டும் நாம் உடல் ஆரோக்கியத்தில் எவருக்கும் குறைந்தவர்களாக மாட்டோம். அதே நேரத்தில் உடல் ஆரோக்கியம் சம்பந்தமான புத்தகங்களை தேடிப்படித்து ஆரோக்கியமாக வாழக் கற்றுக் கொள்ள வேண்டும். உடல் ஆரோக்கியமானது ஒரு சமூகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு இன்றி அமையாததொன்றாகும். அதே வேளை பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையாத சமூகம் ஆரோக்கிய மானதாக இருக்கமுடியாது. இதற்கு அரசாங்கத்தின் சமூகநல திட்டங்கள் அவசியமாகின்றன. அவை உரியவாறும் முறையானதாகவும் மக்களை வந்தடைகின்றனவா என்பதே கேள்வியாகும்.

### பொதுவுடமை.......

7ஆம் பக்க தொடர்ச்சி...

அறுபதுகளில் இந்தோனிசியா நாட்டின் தேசியவாதியாகிய சுகர்ணோ இந்தோனிசிய பொதுவுடமைக் கட்சியுடன் நெருங்கிய நட்புறவைக் கொண்டிருந்தார். தனது அமைச்சரவையில் கம்யூனிஸ்டுக்களை இடம் பெறச்செய்து நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றார். இதனைப் பொறுக்க முடியாத நிலையிலேயே அமெரிக்கா தனது சி.ஐ.ஏ மூலம் சுகர்ட்டோ என்ற ராணுவ உயர் அதிகாரி மூலம் ராணுவச் சதி நடாத்தி அதிகாரத்தைக் கைப்பற்ற வைத்தது. அந்த சர்வாதிகாரி ஐந்து லட்சம் பொதுவுடமையாளர்கள் நேர்மையான தேசியவாதிகள் மற்றும் முற்போக்காளர்களை வேட்டையாடி இரத்தப் பசியைத் தீர்த்துக் கொண்டான்.

1956ல் சுயஸ் கால்வாயை தேசியமயமாக்கிய வேளை எழுந்த அச்சுறுத்தலின் போது எகிப்திய ஜனாதிபதி நாசர் சோவியத் யூனியன் சீனா போன்றநாடுகளின் நட்புறவுடன் ஏகாதிபத்திய மிரட்டலை முறியடித்தார்.

பலஸ்தீனவிடுதலை இயக்கத்தின் தலைவர் யஸீர் அரபாத் பாலஸ்தீன பொதுவுடமைக் கட்சியுடன் நெருக்கமாகி விடுதலை இயக்கத்தில் அக்கட்சியை ஒரு தரப்பாகவும் இணைத்தும் கொண்டார். சோவியத் யூனியன், சீனா, கியூபா போன்ற சோஷலிச நாடுகளுடன் மிக நெருக்கமாகவும் இருந்து வந்தார்.

தென்னாபிரிக்காவின் தேசிய விடுதலை இயக்கமான ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் இயக்கத்தில் தென்னாபிரிக்கப் பொதுவுடமைக் கட்சி ஒரு பிரதான பங்காளியாக இணைந்து போராடி வந்தது. நெல்சன் மண்டேலா இன்றுவரை பொதுவுடமையாளர்களுடன் நட்புறவைப் பேணி வருகின்றார். தென்னாபிரிக்காவின் நெல்சன் மண்டேலாவிற்கு அடுத்ததாக மக்கள் செல்வாக்குப் பெற்ற கம்யூனிஸ்ட் தலைவராக விளங்கிய கிறிஸ்ஹானியை ஏகாதிபத்தியவாதிகள் சுட்டுக் கொன்றனர். காரணம் அவர் மண்டேலா விற்குப் பின்பு ஜனாதிபதி பதவிக்கு வரக் கூடியவராக இருந்தமையேயாகும்.

இன்றும் ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் நவ கொலனித்துவத்தையும் ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்து நிற்பதில் நேர்மையான தேசியவாத சக்திகளுடன் பொதுவுடமைக் கட்சிகள் நெருக்கமான உறவுகளைக் கொண்டு செயலாற்றி வருகின்றன. ஒரு சமகால உதாரணம் தென் அமெரிக்க நாடான வெனிசுலாவின் ஆளும் தேசியவாதக் கட்சியும் அதன் ஜனாதிபதியான ஹியூகோ சாவெய்சும் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிராக விரல் சுட்டி நின்று தமது நாட்டிற்கும் மக்களுக்கும் தலைமை தாங்கி நிற்கின்றார்கள். அவர்கள் பொதுவுடமையாளர்களுடன் மிக நெருக்கமாகவே இருந்து வருகிறார்கள். குறிப்பாக கியூபாவுடனும் அதன் தலைவர் ஃபிடல் காஸ்ரோவுடனும் கைகோர்த்து தமது நாட்டின் வளங்களையும் பாதுகாப்பதில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேற் கூறியவற்றிலிருந்து வரலா ற்றில் தத்தமது நாடு மக்கள் அவர் களது இருப்பு எதிர்காலம் என்பன வற்றின் மீது அக்கறை காட்டிய நேர்மையான தேசியவாதத் தலைமைகள் அந்தந்த நாடுகளின் பொதுவுடமைக் கட்சிகளுடனும் தலைமைகளுடனும் ஐக்கியப்பட்டு முன்சென்றிருப்பதை கண்டு கொள்ள முடிகின்றது அவ்வாறான தேசிய வாதத் தலைமைகள் தேசிய வாதத்திற்குரிய எல்லைகளைக் கடந்து மாக்சிச சோஷலிசப் பரப்பினுள் பிரவேசித்துக் கொண்டன. அத்தகைய தேசியவாதிகளும் தலைமைகளும் எதிரி யார்? நண்பர் யார்? என்பதை நேர்மையாளர்களுடன் இணைந்து இனம் கண்டு தமது நிலைப்பாட்டை விரிவுபடுத்தி வெற்றிகளை வென்றெடுத்தனர். அதன் மூலம் நாடுகளுக்கும் மக்களுக்கும் தத்தமது தேசிய இனங்களுக்கும் வரலாற்றுப் பங்களிப்பை வழங்கினர். நமது சூழலிலும் மேற் கூறிய விடயங்கள் வரலாற்று அனுபவங்களின் ஊடே உற்று நோக்கப்படல் வேண்டும். அதிலிருந்து பாடங்கள் படிக்கப்படவேண்டும்.

**கரன்**

# குத்துக் கரணங்கள்

பட்டணத்தடிகள்

## அசோகன் ஏமாந்தான்



இலங்கையை தனியே பௌத்த சிங்கள நாடாக ஆக்குவதற்கான குழு முயற்சிகள் ஆங்கிலேயரிடம் இருந்து சுதந்திரம் கிடைத்த நாள் முதல் நடந்தேறி வருகின்றன. அவை ஆளும் அரசின் பூரண ஆதரவுடன் நன்கு திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்று வருவதும் யாவரும் அறிந்ததே.

அவை வடக்கு கிழக்கில் அபிவிருத்தியின் பெயரிலான குடியேற்றத் திட்டங்களாகவும், மேற்குக் கரையில் சலுகை, முன்னுரிமை வாய்ப்புகளுக்கான வற்புறுத்தல்களாகவும் அரங்கேறி வருகின்றன. இவை உள்நாட்டு யுத்தம் மூர்க்கத் தனமாக நடக்கின்ற காலத்திலும் கனகச்சிதமாக அமுல் செய்யப்பட்டே வந்துள்ளன.

ஆனால் சமாதானத்துக்கான (பேச்சு வார்த்தைக்கான) போர் ஓய்வுக் காலத்துள், கடந்த 3 வருடகாலத்தில் இந்த பௌத்த சிங்கள மயமாக்கலின் வேகம் இராணுவ பலத்தின் மயப்பட்டு முடுக்கிவிடப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

1. யாழ்ப்பாணத்தின் கந்தரோடையில் உள்ள பௌத்த மதச் சின்னங்கள் இராணுவ முகாமின் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டு சிங்கள மக்களின் சுற்றுலாப் பிரதேசமாக ஆக்கப்பட்டுள்ளது. இராணுவம் அங்கு இல்லாத காலத்திலும் அந்த சின்னங்கள் வரலாற்று ஆர்வலர்களால் பாதுகாக்கப்பட்டே வந்தன என்பதை பலர் மறந்து விடுகின்றனர்.

2. வடக்கே- கீரிமலையில் இருந்து மாத்தல் செல்லும் பாதையில் 'சேந்தான் குளம் பகுதியில் ஒரு அதிசயம் நிகழ்ந்திருக்கிறது. 15 வருட காலத்தில் ஒரு வெள்ளரசு மரம் விருட்சமாகியிருக்கிறது. அங்கே ஒரு அழகான பன்சாலை அமைக்கப்பட்டு சங்கமித்தை காலடி வைத்த பற்றிய 'கல்வெட்டு' புனித சின்னம் ஆக்கப்பட்டு சிங்கள சுற்றுலாப் பயணிகளுக்கு மட்டும் அனுமதிக்கப்படுகின்றது.

3. ஓமந்தையில் பிள்ளையார் கோவில் வளவில் 'புராதன பௌத்த ஆலயம் "ஜயசிக்குறு"விற்குப் பின்பு எழுந்துள்ளது. இந்நிலைமை இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் பிரதேசங்களில் நிறையவே இருக்கின்றன.

4. திருகோணமலை நகர. மத்தியில் இரவோடு இரவாக முளைத்து இராணுவ பாதுகாப்பில் நிலையாக இருக்க முனையும் புத்தர்சிலை

இவை எல்லாம் பௌத்த சிங்கள இனவாதிகள் நேரடியாகவே அரசியலில் இறங்கியதன் விளைவாகும். அதுவும் அல்லாமல் இன்னொரு மகாவம்சத்தை உடனடியாக எழுதி அதையும் அப்பழுக்கற்ற வரலாற்று ஆவணமாக ஆக்கும் முயற்சியுமாகும்.

இனி விடயத்துக்கு வருவோம்

1. அன்று மணிமுடி, அரியணை, அரண்மனை, அரசபோகம் ஏதும் வேண்டாம் என்றே சித்தார்த்தன் துறவியானான். ஆனால் இன்றுள்ள துறவிகளோ அவற்றை இலகுவாக அடைவதற்கு பௌத்த தர்ம அடையாளங்களையே முன்னிறுத்துகின்றனர்.

2. அசோக மன்னன் கலிங்கப் போரில் வெற்றிகண்டு மமதை கொண்ட போது அவனுக்கு சாத்வீக ஞானத்தைக் கொடுத்தது பௌத்த தர்மம் என்று சரித்திரம் கூறுகின்றது. ஆனால் இன்று இனச் சுத்திகரிப்பிற்கு தயாரான பௌத்த துறவிகள் இன்னொரு கலிங்கப் போரை நடத்தும் ஆவேசத்தில் துடிப்பதைக் காணமுடிகிறது.

பௌத்தம் பிறந்த நாட்டில் இருந்து பௌத்தம் வாழும் நாட்டிற்கு பௌத்தத்தின் பெயராலேயே ஆதிக்கக் கரங்கள் நீட்டப்படுகின்ற குறுக்கு வழியையும் காண முடிகின்றது.

3. இன்னும் அனுராதபுரம், பொலன்னறுவை (புலந்திய நகர்) பகுதிகளில் - கிராமங்களில் கணபதி - விநாயகர் சிலைகள் வீதிகள் சந்திகள் மரநிழல்களில் வீற்றிருப்பதன் வரலாற்றை யாரும் அறிய முனைவதில்லை. அதேபோல் இந்து மத தெய்வங்கள் பௌத்த விகாரைகளுள் இருப்பதையும் யாரும் கண்டு கொள்வதில்லை.

4. கொல்லாமையை உபதேசித்த கௌதமனின் சிலையை நடுவதற்கும், காப்பதற்கும் 'கொலை'கள் கருவியாக்கப்படுகின்றன.

அவை எல்லாம் போகட்டும் இலங்கையில் நீதித்துறையே தலைகுனிந்து வெட்கிக்கும் அளவிற்கு பௌத்த மதத்தின் பெயரால் அசிங்கங்கள் அரங்கேறுகின்றன.

சுதேச நிர்வாகத்தில் உள்ளூராட்சிச் சபைச் சட்டங்களும் உபவிதிகளும் மிக முக்கியமான பங்கு வகிப்பவை. சுருங்கச் சூறினால் எமது வீட்டின் எல்லையில் மதில் கட்டவோ அல்லது வீதி ஓரத்தில் ஓர் விளம்பரப் பதாகை போடவோ வேண்டுமானால் அப்பிரதேச உள்ளூராட்சி சபையின் அனுமதியைப் பெற வேண்டும்.

ஆனால் எந்த அனுமதியும் இல்லாமல் எழுந்த புத்தர் சிலையை தம்வசம் உள்ள சட்ட அதிகாரத்தினால் நியாயத் தன்மையினால் அகற்றுவதற்கு முடியாமல்- திருகோணமலை நகரசபையும் நகர அபிவிருத்தி சபையும் முழிப்பதைப் பார்க்கும் போது ஜனநாயகம் பௌத்த தர்மம் பற்றிய சந்தேகங்கள் எழுகின்றன.

மனிதனை மனிதனாக மதிக்க முடியாத சன்மார்க்கங்கள் இருந்து தான் என்ன? பௌத்த தத்துவத்தையே மலிவாக விலைபேசும் போதகர்கள் இருந்து தான் என்ன? முண்ணாண் இல்லாத நீதி நிர்வாகத் துறை இருந்து தான் என்ன? மதங்களைக் கடந்து மானுடம் தேடும் மனிதம் எப்போது இம் மண்ணில் தலை தூக்குமோ?

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# அடி வாங்கி வரும் அமெரிக்காவும்
## எழுச்சி பெற்று வரும் உலக மக்களும்!

இரண்டு வருடங்களுக்கு முன்பு அமெரிக்கா தனது படைகளை ஈராக்கினுள் இறக்கி ஆக்கிரமிப்பில் ஈடுபட்டது. பொய்க் காரணங்களைக் கூறி உலக மக்களையும் அமெரிக்க மக்களையும் ஏமாற்ற முனைந்தது அமெரிக்கா. உண்மையான திட்டம் எண்ணெய் வளத்தைக் கொள்ளையிட்டு அரபு நாடுகளில் ஆதிக்கம் செலுத்துவதேயாகும். அதற்காக ஈராக்கிய மக்களைக் கொன்று குவித்து வருவதில் தயக்கம் எதனையும் காட்டவில்லை இந்த அமெரிக்கப் பிசாசுகள். ஏற்கனவே ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப் படைகள் இறங்கி மக்களைக் கொன்று குவித்தது. அங்கு இப்போது அமெரிக்கப் படைகள் தமது ஆக்கிரமிப்பு யுத்தத்தை தொடர்வது மட்டுமன்றி தமக்குரிய ஒரு பொம்மை ஆட்சியையும் ஏற்படுத்தி வைத்துள்ளது. இருப்பினும் அமெரிக்கப் படைகளுக்கு எதிரான தாக்குதல்கள் ஆப்கானிஸ்தானில் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

அதே வேளை ஈராக்கில் அமெரிக்க ஆளும் வர்க்கத்தினர் எதிர்பார்த்திராத அளவுக்கு எதிர்த் தாக்குதலை அமெரிக்கப் படைகள் பெற்று வருகின்றன. ஈராக்கிய மக்களை இஸ்லாமியப் பிரிவுகளான ஸியா சுன்னி என்ற வகையில் பிளவுபடுத்தவும் குர்திஷ் மக்களைப் பயன்படுத்தவும் அமெரிக்கா எடுத்து வந்த முயற்சிகள் வெற்றி பெறவில்லை. இவை மட்டுமன்றி ஈராக்கில் இயல்பு வாழ்க்கையைக் கொண்டு வருவதாகக் காட்ட தேர்தல் நாடகத்தை நடாத்தி தனக்கு அடிவருடும் அரசாங்கத்தையும் தோற்றுவித்துள்ளது. எவ்வாறு இருந்த போதிலும் ஈராக்கிய மக்களின் கோபாவேசத்திற்கு முன்னால் ஆக்கிரமிப்பாளர்கள் நின்று பிடிக்க முடியாது திணறி வருகின்றனர். ஒவ்வொரு நாளும் கார்க் குண்டு வெடிப்புகளும் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களும் இடம் பெற்ற வண்ணம் உள்ளன. இது வரை இராண்டாயிரத்திற்கு மேலான அமெரிக்கப்படையினர் கொல்லப்பட்டுள்ளனர். ஈராக்கில் தனது பொம்மை அரசாங்கத்தை நிலைநிறுத்தி அதன் கீழான ஆயுதப் படைகளை வலுப்படுத்தி அமெரிக்கப் படைகளை அழிவில் இருந்து காப்பாற்றிக் கொள்ளவதற்கு முயற்சிகளை புஷ் நிர்வாகம் செய்து வருகிறது. ஆனால் ஈராக்கிய மக்கள் இவற்றுக் கெல்லாம் மறுத்தான் அடி கொடுத்து வருகிறார்கள்.

ஈராக்கில் அமெரிக்கப்படைகள் மிகக் கொடூரமான வழிகளிலும் கேடுகெட்ட வழி முறைகள் மூலமும் ஈராக்கிய மக்களை ஒடுக்கி வருகி



றது. ஈராக்கிய சிறைச்சாலைகளிலும் கியூபாவிற்கு அருகில் வைத்துள்ள குவாண்டனாமோ சிறைச்சாலையிலும் அமெரிக்கப் படைகள் செய்து வரும் சித்திரவதைகள், மனச்சாட்சியுள்ள அமெரிக்கர் ஒவ்வொருவரையும் வெட்கித்தலைகுனிய வைத்தது. இவை அனைத்திற்கும் சேர்த்தே ஈராக்கில் நாளாந்தம் அமெரிக்கப்படையினர் அடிக்குமேல் அடி வாங்கி வருகின்றனர்.

இத்தகைய அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு ராணுவ நடவடிக்கைகளாலும் பொருளாதார சுரண்டல் வழிமுறைகளாலும் உலக மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து எழுச்சி பெற்று வரும் போக்கு நாளாந்தம் வளர்ச்சிபெற்று வருகிறது. தாராள ஜனநாயகம், தாராள பொருளாதாரம், தனியார்மயம் உலக மயமாதல் என்பனவற்றின் மாயத்தோற்றங்களும் போலித்தனங்களும் அம்பலமாகிவரும் சூழலில உலக மக்கள் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் மீது தமது எதிர்ப்புகளை கோபக்கனல்களாக மாற்றி வருகிறார்கள். இவை பல்வேறு நாடுகளில் வெவ்வேறு ரூபங்களில் வெளிப்பட்டும் வருகின்றன.

இவ்வாறான மக்களின் எதிர்ப்புக்களையும் அவற்றுக்கு சில அரசாங்கங்கள் காட்டி வரும் ஆதரவுப் போக்குகளையும் கண்டு அமெரிக்க ஆளும் வர்க்கம் சினமடைந்து வருகின்றது. அண்மையில் அமெரிக்க கண்ட நாடுகளின் மாநாட்டில் உரையாற்றிய அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் கொண்டலீசா றைஸ் கூறுகையில் “ஜனநாயக ரீதியாகத் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்கள் ஜனநாயக ரீதியில் செயற்படுகின்றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.” எனக் கூறினார். இதன் அர்த்தம் சில தென்னமெரிக்க நாடுகளில் அமெரிக்க எதிர்ப்பு வலுவடைந்து வருவதை அந் நாடுகளின் அரசாங்கங்கள் ஊக்குவித்து வருவதேயேயாகும். மேற்படி கூற்றுக்கு பதிலடி கொடுத்தாற் போல் வெனிசுலாவின் ஜனாதிபதி ஹீயுகோ சாவெய்ஸ் அதே மாநாட்டில் உரையாற்றும் போது “கண்காணிக்க வேண்டியது தெரிவு செய்யப்பட்ட ஜனநாயக அரசாங்கங்களை அல்ல அமெரிக்காவையே ஜனநாயக அரசாங்கங்கள் கண்காணிக்க வேண்டும்” எனக் கூறியுள்ளார்.

உலக மயமாதலின் மூலம் உலகை அமெரிக்கா தனது ஒற்றைக் குடையின் கீழ் கொண்டு வந்து உலக மேலாதிக்கத்தை நிலை நாட்டலாம் என்ற ஏகாதிபத்திய மூலஉபாயக் கனவு ஒருபோதும் நிறைவேற மாட்டாது. உலக மக்களின் மீள் எழுச்சி மாக்ஸிசம்– சோஷலிசப் பாதையில் வேகமாக வளர்ச்சி பெற்று வருவதன் மூலம் அமெரிக்கக் ஆதிக்கம் வெறும் கனவாகவே இருந்து விடச் செய்யும்.

# சர்வதேச நாணய நிதியம் யார் கையில்?

வறிய நாடுகளின் கடன் நிவாரணத்திற்காக கையிருப்பில் சர்வதேச நாணய நிதியத்தின் தங்கத்தின் ஒரு பகுதியை விற்க வேண்டுமென்ற யோசனையை அமெரிக்க காங்கிரஸ் பிரமுகர் ஒருவரும் புஷ் நிர்வாகமும் முட்டுக்கட்டை போட்டுள்ளது. காங்கிரசின் பொருளாதார கமிட்டியின் தலைவரான ஜிம் சாக்ஸ்ரன் ஐ.எம்.எவ் தங்கத்தை விற்கும் திட்டத்தை அமெரிக்க காங்கிரசும், ஜனாதிபதி புஷ்சும் எதிர்ப்பதாக உறுதிபடக் கூறியுள்ளார்.




“ஐ.எம்.எவ்வின் தங்கத்தின் விற்பனையால் வரக்கூடிய இலாபம் ஆரம்பத்தில் நிதியத்திற்கு நிதி வழங்கிய நாடுகளுக்கும் அந்த நாடுகளின் வரியிறுப்பாளர்களுக்குமே சென்றடைய வேண்டுமென சாக்ஸ்ரன் ஒரு அறிக்கையில் தெரிவித்தள்ளார்.

# “சுதந்திர வர்த்தகம் நிவாரணியல்ல”
## கன்ரபரி அங்கிலிக்கன் பேராயர் கூறுகிறார்-

வறுமையை முடிவுக்கு கொண்டு வருவதற்கு சகலருக்கும் ஒரே மாதிரியான தீர்வாக சந்தைப் பொருளாதார முறைமையை முன்வைப்பது “போலியான நம்பிக்கை” யென உலக அங்கிலிக்கத் தேவாலயத்தின் கன்ரபரி அர்ச் பிஷப்பான றொவான் விலியம் கூறுகிறார்.

மற்றவர்களுடைய உரிமைகளை மறுக்கும் தற்போதைய உலகப் பொருளாதாரமானது குழந்தைகளை மரணத்தின் பிடியில் விட்டு விடுகிறது மட்டுமல்லாது நூறு கோடிக்கு மேற்பட்ட மக்களை வறியவர்களாக்குகிறதென பிரிட்டனின் கிறீஸ்த்தவ உதவி யென்ற நன்கொடை அமைப்பின் 60வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடு முகமாக சென் போல் கதீட்புரில் இடம் பெற்ற பிரசங்கத்தின் போது விலியம்ஸ் பேராயர் தெரிவித்தார்.

“மேற்கத்தைய அரசுகள் கூறுவது போல சுதந்திர வர்த்தக கோட்பாடானது சகல நாடுகளுக்கும் ‘அனைத்து’ தீர்வாகும் எனவும் செழிப்பைக் கொண்டு வருமெனவும் “போலியான நம்பிக்கையை” ஏற்படுத்தும்” என விலியம்ஸ் பேராயர் தெரிவித்தார்.

இத்தகைய நேர்மையான குரல்கள் எந்தளவுக்கு ஏகாதிபத்திய உலகமயமாதல் பேய்களின் செவிகளில் ஏறப் போகிறது. ஆனால் மக்கள் இவ் உண்மைகளை உணர்ந்து கொள்ளும் காலம் அதிக தூரத்தில் இல்லை.

# இரண்டாவது உலக யுத்த முடிவின் 60ம் ஆண்டு பூர்த்தி 9–5–2005

இரண்டாவது உலக யுத்தத்தின் போது நான்கு கோடி மக்கள் உயிர் இழந்தனர். சோவியத் யூனியனில் இரண்டு கோடி எழுபது இலட்சம் மக்கள் உயிர்த் தியாகம் செய்தனர். நாசி ஜேர் மனியைத் தோற்கடிப்பதின் முன்னணிப் படையாக ஸ்டாலின் தலைமையிலான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் செஞ்சேனையும் திகழ்ந்தன. இரண்டாவது உலக யுத்தம் 1945 மே மாதம் 9ம் திகதி முடிவுக்கு வந்தது.



உயிர்த் தியாகங்கள் மட்டும் வெற்றிக்கு இட்டுச் செல்லாது. ஸ்டாலின் மகத்தான வழிகாட்டலின் கீழ் சோவியத் கம்யூனிஸ்ட கட்சி யுத்தத்தை வழி நடத்தியது. சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மூல உபாயமும் ராணுவ தந்திரோபாயமுமே விடுதலைக்கு இட்டுச் சென்றது.

அண்மையில் கிழக்கு சைபீரியாவின் யகூசியா சக்ஹா குடியரசில் நாஷி ஜேர்மனியை தோற்கடித்த 60வது வருடாந்த மே 9ம் திகதி கொண்டாட்டங்களையொட்டி இடம் பெற்ற நிகழ்ச்சியின் போது புதிதாக வைக்கப்பட்ட ஸ்டாலின் உருவச்சிலைக்கு அரசாங்கப் பிரமுகர்களும் பல்லாயிரக்கணக்கான மக்களும் மலர் அஞ்சலி செலுத்தினர். முன்னைய சோவியத் குடியரசுகளில் கம்யூனிஸ்ட்டுகளின் செல்வாக்கு வளர்ச்சியடைவதாக செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன. உலக மயமாக்கலுக்கு எதிராக புதிய சக்தியொன்று வளர்ச்சி பெறுவதையே இது குறிக்கிறது. சில மேற்குலக ஊடகங்கள் கருத்து வெளியிட்டும் வருகின்றன.

“ரசியாவின் மாபெரும் புதல்வன் ஸ்டாலினுக்கு ஒரு நினைவு ஸ்தூபியை நிறுவியுள்ளோம். தேசத்திற்காக தன்னிடமிருந்த முழுத்திறனையும் அன்பையும் அர்ப்பணிப்பையும் வழங்கிய ஸ்டாலின் அதற்குப் பிரதி உபகாரமாக எதையும் பெறவில்லை” என மிர்னியின் (MIRNY) நகரபிதா அனறொலி பொப்போவ் மேற்படி நிகழ்வில் உரையாற்றும் போது கூறினார்.

“அவர் இறக்கும் போது அவரது சட்டைப்பைக்குள் ஒரு ரூபிள் தானும் இருக்க வில்லை. அவருக்கு வங்கிக் கணக்கு இருந்ததில்லை. வீட்டில் நல்ல தளபாடங்கள் இருந்ததில்லை” எனவும் மேலும் அவர் தெரிவித்தார். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விடயத்தைக் குறிப்பிட்டாக வேண்டும். இரண்டாவது உலக யுத்தத்தின் போது ஒரு கட்டத்தில் ஸ்டாலினுடைய மகனை ஜேர்மன் படை சிறைப்பிடித்தது. ஏற்கனவே சோவியத் படைகளால் சிறைப்பிடிக்கப்பட்ட ஒன்பது ஜேர்மன் தளபதிகளை ஸ்டாலினுடைய மகனுக்கு பரிமாறிக் கொள்ளுமாறு ஜெர்மன் படைத்தரப்பிலிருந்து தகவல் அனுப்பப்பட்டது. “எனது மகன் சாதாரண படை வீரன். அவனுக்காக ஒரு ஜேர்மன் படைத்தளபதியைத் தானும் கைதிப் பரிமாற்றம் செய்ய முடியாது” என ஸ்டாலின் திட்டவட்டமாகக் கூறிவிட்டார். பின்னர் ஸ்டாலினுடைய மகனை ஜேர்மன் படையினர் சுட்டுக்கொன்றனர். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்காக சோவியத் நாட்டிற்காக எதையும் இழக்கத் தயாராய் இருந்த மாபெரும் தோழர் ஸ்டாலின் உலக கம்யூனிச இயக்கத்தினரால் என்றும் நினைவு கூரப்படுவார்.

# உலகமயமாகும் சேரிகள்

“அதிகரித்துவரும் வறுமையும் மக்கள் நகரங்களை நோக்கிய நகர்தலும் சேரிகளில் வாழும் மக்களின் எண்ணிக்கையை 2050ம் ஆண்டளவில் மும்மடங்காக்கவுள்ளது. இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் சேரிகளில் வாழும் மக்களின் எண்ணிக்கை முன்னூறு கோடியாக அதிகரிக்கும்.”

இவ்வாறு ஐ. நாவின் வீடமைப்பு அமைப்பான ஹபிற்றாற் (HABITAT) கூறுகிறது. இந்த அமைப்பின் தலைமையகம் நைரோபியில் உள்ளது. உலகில் அதிக எண்ணிக்கையில் சேரிகளைக் கொண்டது நைரோபியாகும். இங்கு குறைந்தது ஐந்து இலட்சம் மக்கள் சேரிகளில் வாழ்கின்றனர்.

சர்வதேச சமூகத்தை எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையான சேரிகள் பற்றி பிரச்சினையை முறையாக அணுகத்தவறி வருகிறது என ஹபிற்றாற்றின் தலைவர் அனா ராபாய்யூக்கா கூறுகிறார். சேரிகளின் அதிகரிப்பு பொது சுகாதாரத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பாதிப்பானது என்றும் கூறப்படுகிறது. நகர்ப்புறத்து வறுமையைப் பற்றி அந்த அம்மையார் குறிப்பிடும் போது “மெதுவாக வருகின்ற சுனாமி” என வறுமையை ஒப்பிட்டு டிசம்பரில் இந்து சமுத்திரப்பகுதியை நாசம் செய்த இராட்சத அலைகளைவிட இந்த வறுமை மோசமானது எனத் தெரிவிக்கிறார்.

சரித்திரத்தில் என்றுமில்லாதவாறு கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி உழைப்பைத்தேடி மக்களின் நகர்வு முப்பது வீதத்தால் ஆபிரிக்கா, ஆசிய, இலத்தின் அமெரிக்க நாடுகளில் சேரிகளை உருவாக்கியுள்ளதாக குறித்த மகா நாட்டிற்கான செய்தியில் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

உலகமயமாதலால் கிராமப்புற மக்களே மிகவும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். விவசாயத்துறை ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் புறக்கணிக்கப்படுகிறதன் விளைவால் மக்கள் நகரங்களை நோக்கி படையெடுக்கின்றனர். இந்த மக்கள் நகரங்களில் சேரிகளை உருவாக்குகின்றனர். வறுமையும் சேரிகளும் இன்று உலகமயமாகிக் கொண்டு வருகின்றது. உலகமயமாதலை ஆகோ ஓகோ என்று வாய் பிளக்க வரவேற்போர் இச் சேரிகள் பற்றி என்ன கூறப் போகிறார்கள்.

# அசையும் அனைத்தும் அமெரிக்க இலக்கு

ஊடகங்கள் ஒரு சில அரசியல் தலைவர்களைப் புகழ் பாடி ஒப்பற்ற தலைவர்களாக்கி விடுவதில் தமது வல்லமையைக் காட்டிவருவது அமெரிக்காவின் இயல்பு. முன்னாள் இராஜாங்க செயலாளர் ஹென்றி கீசிங்ஞரை உலகின் சமாதானப் பிரியராகவே காட்டி வந்துள்ளன. அவரின் சொற்பொழிவுகளை மேற்கோள் காட்டியே பத்திரிகை வியாபாரம் செய்தும் வந்துள்ளன. அடிக்கடி அவர் புகழ்பாடவும் தவறவில்லை.

அமெரிக்கா அன்று கம்பூச்சியா மீது குண்டுமாரி பொழிவதற்குத் தயாரான சமயம் அவரிடம் பேட்டிகண்ட ஒரு பத்திரிகையாளர் கம்பூச்சியாவில் அமெரிக்க இலக்கு என்ன வெனக் கேட்ட போது ஹென்றி கீசிஞ்ஞர் “அசையும் அனைத்தும் “எனத் தாம தமின்றிப் பதிலளித்தார். அசைந்து கொண்டிருந்த கம்பூச்சிய மக்களை அசையாது இருக்குமாறு, லட்சக் கணக்கானோரை நிரந்தரமாகவே முடமாக்கி அசையாமற் செய்த பெருமை அமெரிக்க ஆட்சியாளருக்கே உரியது. அந்த அமெரிக்க கொலை வெறித்தாண்டவம் பற்றி முதலாளித்துவ ஊடகங்களோ அல் லது மக்களுக்காக கண்ணீர் வடிப்ப வர்களோ வாய்திறப்பதில்லை. ஆனால் பொல்பொட் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றவை பற்றியே ஊதிப் பெருப்பித்து வரலாறு காணாத கொலைகள் என வர்ணித்து ஏதாவது ஒரு மண்டை ஓட்டுக் குவியலையும் படம் போட்டுக் காண்பித்துக் கொள்வர். இது முதலாளிய பத்திரிகை தர்மம். அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளராக கொண்டோலீசா றைஸ் அம்மையார் பதவி ஏற்ற போது மேற் கூறிய ஹென்றி கீசிஞ்ஞரின் பொன்மொழிகளுக்கு பெருமளவு பிரசாரத்தை ஊடகங்கள் மேற் கொண்டிருந்தன.

அதன் பின்னணி என்ன? இரண்டாவது தடவையாக பதவியேற்றிருக்கும் ஜோர்ஜ புஷ் உலகிற்கு என்ன செய்யவிருக்கிறார் என்பதைக் கோடிட்டுக் காட்டுகின்றதா?

இத்தனைக்கும் மத்தியில் இலங்கைக்கு “மீட்பு” பணிக்காக வந்த அமெரிக்க படையினரின் “சேவையை” ஜே.வி.பீ தலைவர் சோமவன்ச பாராட்டி நன்றியும் தெரிவித்துள்ளார். அமெரிக்க படைவருகையைத் தாம் எதிர்க்கவில்லை எனக் கூறி தமிழர் தலைமைகள் அமெரிக்காவிற்கு முன்னால் கைகட்டி நிற்கின்றனர். என்னதான் இருந்தாலும் அமெரிக்கா அமெரிக்காதான் என உள்ளூர மனம் மகிழ்ந்தும் காணப்படுகின்றனர்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# தமிழ் சினிமாவும் கதாநாயகர்களும் தமிழரின் இரத்தத்தைஉறிஞ்சும் அட்டைகள்

"இந்த தமிழ்ப்புத்தாண்டில் 14 வருடங்களுக்குப் பிறகு ரஜனி நடித்த 'சந்திரமுகி' படமும் கமல் நடித்த 'மும்பை எக்ஸ்பிரஸ்' படமும் நேரடியாகக் களத்தில் மோதுவதால்(?) ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு சூடு பிடிக்கத் தொடங்கி விட்டது. இந்த போட்டியில் விஜய் நடித்த 'சச்சின்' படமும் கலந்து கொள்வதால் மும்முனைப் போட்டியில் யார் வெற்றி பெறுவார்கள் என்ற ஆவலும் ரசிகர்கள் மத்தியில் எழுந்து இருக்கிறது" என்று வானொலி, மற்றும் சந்தை ஏடுகள் அடங்கிய செய்தி ஊடகக் கும்பல் தமிழ் சினிமா கழிசடைகளுக்குப் பரிவட்டம் கட்டும் வேலையில் மும்முரமாக இறங்கி விட்டன.

"தியேட்டர்களில் திருவிழாக்கோலம். அலைமோதும் ரசிகர்கள் கூட்டம், கட் அவுட், பேனர், அலங்கார வளைவு, பாலபிஷேகம், தேங்காய் உடைப்பு, பட்டாசு வெடிப்பு, அதி காலை 4 மணி காட்சியில் ரஜினி ரசிகர்களின் ஆர்வத்தால் ரகளை-கல்வீச்சு" என்று தமிழகத்தையே தங்களின் திறந்தவெளி கழிப்பிடமாக்கி நாறடித்தது. தமிழ் சினிமா ரசிகர்கள் என்ற பொறுக்கிகள் கூட்டம். மலத்தை தடவிவிட்டு பணத்தை பறித்து ஓடும் வழிப்பறி திருடர்கள் போல் பதற்றத்தை உருவாக்கி படத்தை 'ரிலீஸ்' செய்து பணத்தைச் சுருட்டியது தமிழ் சினிமாவின் படைப்பாளிகள். முதலாளிகள் கூட்டம்.

'தமிழ்ப் புத்தாண்டு ரிலீஸ்' என்று 30 ரூபாய் டிக்கெட்டை 50 ரூபாய் ஆக உயர்த்தியதோடு, அதையும் 500 ரூபாய் வரை 'பிளாக்' டிக்கெட்டாக விற்று ஒரு காட்சியில் ஒரு லட்சம் ரூபாய் வரை சுருட்டி வரலாறு காணாத வசூல் மழையில் நனைந்தனர். ரஜினி, கமல், விஜய் என்ற மூன்று நடிகர்களின் படத்திற்கு மொத்தம் 600 'பிரிண்ட்டு'களுக்கு மேல் போட்டு ஒவ்வொரு பிரிண்ட்டுக்கும் நாளொன்றுக்கு 5 காட்சிகள் வீதம் மொத்தமாக ஒரே நாளில் 30 கோடி ரூபாய் கொள்ளையடித்தனர்.

இந்த பகற்கொள்ளைக்கார சினிமா கும்பலுக்குப் பூரண அரசு மரியாதை



தமிழ்நாட்டில் ரஜனியின் சந்திரமுகி "கட் அவுட்" டுக்குப் பாலாபிஷேகம் செய்யும் பிழைப்புவாத ரசிகர்கள்.

அளித்து கௌரவிக்கிறார் பார்ப்பன பாசிச ஜெயலலிதா.

சினிமா படப்பிடிப்புக் கட்டணம், கேளிக்கை வரி மற்றும் திருட்டு வி.சி.டி இவற்றின் 'மரணப் பிடி'யிலிருந்து தமிழ் சினிமாவை மீட்ட ஜெயலலிதா, மேலும் அன்புக்கரம் நீட்டி அதை அரசு மடியில் ஏந்திக் கொண்டார். விழா, விருது மற்றும் பலகோடி ரூபாய் மானியம் என்று தமிழ் சினிமாவை ஊட்டி வளர்க்கிறார்.

மறுபுறம், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள் மற்றும் இளைஞர்களின் வாழ்வுரிமைக்கான போராட்டங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கும் பாசிச ஜெயலலிதா, 'இப்போராட்டங்கள் தமிழகத்தின் ஒட்டு மொத்த சமுதாய நலன்களுக்கு எதிரானது' என்று கொச்சையாகத் தாக்குகிறார். ஆனால் அரை நிர்வாண, ஆபாச பிற்போக்கு இரட்டை அர்த்த வசனங்கள் நிரம்பி வழியும் கழிசடை தமிழ் சினிமாவிற்கு சூடு சொரணை இல்லாமல் போலீசு பாதுகாப்பு கொடுக்கிறார்கள்.

சினிமா நடிகர்கள், இயக்குநர்கள் மற்றும் சினிமா முதலாளிகளான தயாரிப்பாளர்கள், திரையரங்கு உரிமையாளர்கள், விநியோகஸ்தர்கள் என்ற கூட்டு களவாணி கும்பல் சினிமா ரசிகர்கள் என்ற இலவச குதிரைகள் மீது ஏறி திரைப்படங்கள் மூலம் சீரழிவு, ஆபாசம், பிற்போக்கு, மூட த்தனங்களை தமிழகம் முழுக்க விதைத்து, அமோக விளைச்சலை அறுவடை செய்கிறது. வரலாறு காணாத வசூல் மழையில் திளைக்கிறது.

இதில், சகல ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் பிரபல தலைவர்கள் பலர் கூட்டு! போலீசு அதிகாரிகள், அரசு உயர் மட்ட அதிகாரிகள் சகலரும் தங்கள் பினாமிகள் மூலம் 'பிரபல' நடிகர்களின் திரைப்பட விநியோக உரிமைகளை வளைத்துப் போடுகிறார்கள்.

காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்த திருச்சி அடைக்கல ராஜ் தி.மு.க. கட்சியின் தற்போதைய மத்திய மந்திரி ரகுபதி. அ.தி.மு.க.வின் சசிகலா நடராசன் ஆகியோர் தமிழ் சினிமாவை இயக்கும் ரகசிய 'தாதா'க்கள்! இவர்கள், தமிழ் சினிமாவில் கொட்டை போட்ட பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பு கொண்ட 'ஏவிஎம்' நிறுவனத்தையே மிரட்டும் வல்லமை படைத்தவர்கள்.

பிரபல நடிகர்களின் படங்களுக்கு பைனான்ஸ் வழங்குவது, அந்நடிகர்களின் கால் ஷீட்களை மொத்தமாக கையில் வைத்திருப்பது பினாமிகள் மூலம் தமிழகம் முழுக்க திரையரங்குகளை நடத்துவது வரை இவர்களது சினிமா சாம்ராஜ்ஜியம் பரந்து விரிந்திருக்கிறது.

உள்ளூர் ரவுடி கும்பலும் போலீசு அதிகார வர்க்க கும்பல்களும் இந்த 'தாதா'க்களின் திரையரங்குகளில் உள்ள 'கேன்டீன்' பார்க்கிங் உரிமங்களைப் பினாமிகள் பெயர்களில் குத்தகைக்கு எடுக்கின்றனர். இந்த உரிமைக்காக போலீசு அதிகார வர்க்கத் துறைகளில் பெரும் போட்டியே நடக்கிறது.

இந்த கொள்ளைக் கூட்டம் தான் சினிமா படைப்பாளிகள் முதலாளிகள் என்ற பெயரில் தமிழகத் தின் பண்பாட்டையும் பகுத்தறிவு பாரம் பரியத்தையும் சீரழிக்கிறது.

தமிழர்களின் பண்பாடு நாகரீகம் அதன் தொன்மை பற்றி பேசும் திராவிடக் கட்சிகள்தான் சினிமா கழிசடைகளின் விசுவாசமான பாதுகாவலனாகத் திகழ்கின்றன. மறத்தமிழரான வைகோவின் ம.தி. மு.க கட்சியின் முக்கிய தூண் தாணு மிகப் பெரும் சினிமா தயாரிப்பாளர். கழிசடை சினிமாக்களை தமிழில் பிரம்மாண்டமாக எடுப்பதிலும் விளம்பரம் செய்வதிலும் புகழ் பெற்றவர்.

தனியார்மயம் தாராளமயத் தின் கீழ் சந்தை வெறி பிடித்து அலையும் ஏகாதிபத்திய நிறுவ னங்கள் சினி மாவை விட வேகமாக நடிகர்கள் நடிகைகளை மக்களிடம் விற்கின்றன. சினிமா விளம்பரம் என்ற பெயரில் ஆபாச- சீரழிவுகளை மக்களி டம் கொண்டு சென்று நுகர்வுவெறியைப்பரப்பி சந்தைகளை ஆக்கிரமிக்கின்றன.

இதன் மூலம் நடிகர்களை தமிழர்களின் படுக்கையறைக்கு அழைத்து வரும் வேலையை பன்னாட்டு நிறுவனங்களும், பன்னாட்டு நிறுவனங்களின் நுகர்பொருட்களை தமிழர்களின் சமையல் அறையில் விற்கும் வேலையை நடிகர்களும் செய்கின்றனர். ஊடகங்களில் ஏற்றி இவர்களை சுமந்து வரும் முக்கிய வேலையை கருணாநிதியின் குடும்ப நிறுவனங்கள் செய்கின்றன.

தமிழ்ப் புத்தாண்டில் தங்களது ரசிகர்களுக்கு, சினிமா கழிசடைகளின் பன்சிங்ங் டயலாக்கு இது தான்! சொந்த மனைவியைக் கூட்டிக் கொடுங்கள்! சொந்த நாட்டை காட்டிக் கொடுங்கள்!

இதற்கு தமிழ் சினிமா ரசிகர்கள் என்ன பதில் சொல்லப் போகிறார்கள்?

**பச்சையப்பன்**

நன்றி: புதிய ஜனநாயகம் (தமிழ் நாடு) மே 2005 இதழ்

## பேரம்

-மலையப்பன்-

எசமானர்கட்காக
மரமேறி இளநீர் பிடுங்கினோம்.
காய்களின் உட் பகுதி தமக்கென்றும்
வெளிப்பகுதி நமக்கென்றும் பங்கிட்டார்கள்.
மரவள்ளிப் பயிர் செய்தோம்.
மண்ணின் கீழ் விளைந்தது தமதென்றும்
மேல் விளைந்தது நமதென்றும் பங்கிட்டார்கள்.
நாடக அரங்கொன்று அமைத்தோம்
முன்வரிசை ஆசனங்கள் தமக்கென்றும்
பின்வரிசை ஆசனங்கள் நமக்கென்றும்
பங்கிட்டார்கள்.

எங்கள் உழைப்புக்கு நியாயமான பங்கு வேண்டி
எங்கள் தலைவர்களிடம் முறையிட்டோம்.
"எல்லா இடத்தும் உங்களுக்கே கூடிய பங்கு
என்றாலும் முறைப்படுகீர்கள்"
என்று எங்களைக் கண்டித்தார்கள்.
இந்த நிலைமை மாறவேண்டும் என்று
வற்புறுத்திக் கூறினோம்.
போராட வேண்டாம். பேசியே வெல்லுவோம;"
என்று சொல்லிப் போனார்கள்.

நீண்ட பேச்சுவார்த்தகளின் பின் மீண்டு
நல்ல தீர்வுகளை வென்றதாய்ச் சொன்னார்கள்.
"இனிமேற் கொண்டு
மாங்காய்களின் உள்ளே இருக்கும் விதை உமக்கென்றும்
வெளிப்பகுதி தமக்கென்றும்
கீரைகளைப் பயிரிட்டால்
மண்ணின் கீழே விளைவது உமக்கென்றும்
மேலே விளைவது தமக்கென்றும்
சினிமாக் கொட்டகைகளில்
எல்லா முன்வரிசைகளும் உமக்கென்றும்
பின்வரிசைகள் மட்டுமே தமக்கென்றும்
அவர்களை ஒப்புக் கொள்ளச் செய்துவிட்டோம்"
என்று பெருமையுடன் அறிவித்தார்கள்.

'இதென்ன தீர்வு' என்று
எம் அதிருப்தியைத் தெரிவித்தோம்.
"உங்களை யாராலும் திருப்திப்படுத்த இயலாது"
என்று தலைவர்கள் அலுத்துக் கொண்டார்கள்.

## சொல்லாமலே

ஊடகம் ஊடறுந்து போனதேனோ.
ஊன்றுகோல்கள் தொலைந்ததேனோ
கொலைகள் தமிழ் மீதா?
தமிழன் மீதா?
எமக்கு தெரியும்
உமக்கும் தெரியும்
ஆனாலும் கொலைகள் பற்றி
நமக்கு தெரியாது - ஏனெனில்
நடிக்கத்தெரிந்தவர் நாமே!!!

உதிரம் கொதிக்க
உணர்வுகள் மட்டும் மரித்து போனது....!
வேகம் குறைந்தது....!
எழுத்துக்கள் மௌனம் கொண்டன - இனி
வேண்டாம் ஐயகோ இனி வேண்டாம்!
உண்மைகள் கூறி மடியும் வாழ்க்கை
இனியும் வேண்டாம்-!! என நாம் கூறினால்
நாம் நீங்களாகி விடுவோம்
நாம் உணர்வுள்ளோர்!
நாம் உணர்வுள்ளோர்.

உண்மைகளை ஊனமுற்று முறிந்து போன
உங்கள் கைகளால் கொல்லமுடியாது.
உங்களால் வெல்லவும் முடியாது.

இளையவர்கள் மரித்து போகவில்லை
தூங்கிப் போகவுமில்லை - இவை
யாருக்கும் புரியாமலுமில்லை
மீண்டுமொருமுறை ஆரம்பமாகும்
அத்தியாங்கள்.....
வானில் எறியப்பட்ட
கற்கள் பூமி நோக்கி விழும்
விஞ்ஞான விளக்கம் புரிந்துகொள்ளும்
சந்தர்ப்பங்கள் தூரமில்லை.

நா. மரியா என்டனீட்டா
நாவலப்பிட்டி

## ஜே.வி.பி தலைவருக்கு....

9ம் பக்க தொடர்ச்சி..

ஈராக்கிற்கும் ஆப்கானிஸ்தா னுக்கு எதிராக யுத்தம் நடத்திவரும் புஷ்சை ஜே.வி.பி புகழ்பாடுகின்றனர். அமெரிக்கா உலகின் பல்வேறு நாடுகளில் ஜனநாயக ஆட்சிகளைக் கவிழ்த்தது ஜே.வி.பியினருக்கு தெரியாதா?

விடுதலைப் புலிகள் மனித உரிமை, ஜனநாயக உரிமை என்பனவற்றை மீறியுள்ளனர் என்பதில் எங்களுக்கு எதுவித மயக்கமும் இல்லை. எவ்வாறாயினும் எல்.ரி.ரி.யினருடன் புனரமைப்பு அல்லது இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக நேரடியாகப் பேசாவிடில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படப் போவதில்லை.

எனவே தமிழ், முஸ்லீம் ஏன் சிங்களவர்கள் தொடர்பாக எதுவித இரக்கமுமற்ற முறையில் அவர்களின் சுனாமிப் பரிதாப நிலையை நீங்கள் உதாசீனம் செய்துள்ளீர்கள்.

புலிகள் மீதுள்ள உங்களின் வெறுப்பானது உங்களை தமிழ்விரோதபேரிவாத நிலைக்குத் தள்ளியுள்ளது. ஜே.வி.பி யினரின் நிலைப்பாடு பற்றி சகலருக்கும் தெரியும். ஆனால் நீங்கள் உலக ஏகாதிபத்தியத்தின் தலைமை நாட்டுடன் கூடிக்குலாவ முன் வந்தமை பயங்கரமானது, பரிதாபகரமானது. நீங்கள் பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்ற முதலாவது புரட்சிகர கட்சியென்றும் கலப்பு பொருளாதாரத்தை ஏற்றகட்சியென்றும் பெருமையுடன் கூறி புஷ்சின் ஆசியை வேண்டி நிற்பது தான் மிகக் கேலிக்கும் பரிதாபத்திற்குரியதாகும்.

புரட்சியென்றால் சமூக மாற்றம். அது சமுதாயத்தை நல்ல நிலைக்கு இட்டுச் செல்வதாகும். அது எந்த விதத்திலும் ஜனநாயகத்திற்கு முரண்பட்டதல்ல.

1971 பின்பு 1989- 90 காலப்பகுதியில் நீங்கள் நடாத்திய அராஜகம், பயங்கரவாதம், இலக்கற்ற வன்முறையால் புரட்சிபற்றி குழம்பிப் போயுள்ளீர்கள். ஜே.வி.பி அதன் நிஜத்தை மாற்றுவதென்பது உங்களின் பிரச்சினை. ஆனால் அதற்காக உலகின் பிரதான ஆக்கிரமிப்பாள நாட்டை உள்நாட்டு விவகாரங்களில் ஈடுபட அழைப்பது ஆபத்தானது. நேர்மையான தொழிற்சங்கவாதிகளும் கிராமப்புற ஏழைகள் இளைஞர்கள் ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக ஜே.வி.பி மாறுவதை எதிர்த்துக்கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று12 யூலை 2005 பக்கம்12 விலை 12/- சுழற்சி 81

அரசாங்கமே

- எரிபொருள்களுக்கு தொடர்ந்து விலை ஏற்றாதே !
- அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் குறை !
- வாழ்க்கைச் செலவுக்கேற்ற சம்பள உயர்வு வழங்கு !
- தொழிலாளர் விவசாயிகள் புத்திஜீவிகளை நசுக்காதே
- தாராளமயம் தனியார்மயம் உலகமயமாதலை தடுத்து நிறுத்து!

# ஜனாதிபதியின் துணிச்சலும் பிரதமரின் கோழைத்தனமும்



சுனாமி நிவாரணப் பணிகளுக்காகவும் மீளமைப்பிற்காகவும் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கான உடன்பாட்டில் அரசாங்கமும் விடுதலைப் புலிகள் இயக்கமும் கையெழுத்திட்டமை வரவேற்கத்தக்கது. இப்பொதுக்கட்டமைப்பைக் கொண்டு வருவதில் ஜே. வி. பி. யின் எதிர்ப்பும் மிரட்டலும் இருந்து வந்தது. ஜாதிக ஹெல உறுமயவின் உண்ணாவிரதப் போராட்டம் ஒரு புறத்தில் இருந்து வந்தது. பௌத்த மத பீடங்களின் மகாநாயக்கர்கள் மறுபுறமாக வற்புறுத்தல்கள் செய்தனர். இந்தியா மனமின்றி நடந்து கொண்டதுடன் எதிர்ப்புகளுக்குப் பின்னாலும் நிற்கச்செய்தது. இத்தனையையும் கடந்து தீவிர பேரினவாதப் பிரசாரங்கள் மத்தியில் ஜனாதிபதி பொதுக்கட்டமைப்பை கொண்டு வந்துள்ளமை துணிச்சலான நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. அதேவேளை பொதுக்கட்டமைப்பு வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது பாராளுமன்றத்திலிருந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெளியேறியமை என்பது கோழைத்தனமானதாகும். அவர் பேரினவாதிகளுக்கு இணங்கிப்போய்விட்டார் என்பது மட்டுமல்ல அவரின் பேரினவாத நிலைப்பாடும் நன்கு அம்பலமாகியுள்ளது. அவர் ஜே.வி.பி யின் உதவியுடன் ஜனாதிபதியாகும் கனவில் இருப்பதும் பகிரங்கமாகியுள்ளது. அத்துடன் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க போன்றோரின் எதிர்நிலை அநாகரிகமானதாகவே காணப்பட்டது.

அதேவேளை பொதுக்கட்டமைப்பு வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது சு.க.கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் சிலர் நடந்து கொண்ட விதம் பாராட்டத்தக்கதுடன் ஐ. தே. கட்சி அதன் அரசியல் நோக்கங்களுக்கு அப்பால் இதனை ஆதரித்தமையும் வரவேற்கத்தக்கதாகும்.

பல முட்டுக்கட்டைகள் எதிர்ப்புகள், தயக்கங்களுக்கு மத்தியில் ஜனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியது போன்று முடங்கிப்போயிருக்கும் சமாதான நடவடிக்கைகளை தொடரவும், தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணவும் உறுதியான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். இதில் தற்போதைய துணிவை ஜனாதிபதி காட்ட வேண்டும்.

இந்நிலைமையில் தமிழ்த் தரப்பினர் பொறுப்புடன் நடந்து கொள்வது அவசியம். பொதுக்கட்டமைப்பு வரைவு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது ஜே. வி. பி க்கு எதிர்ப்பு தெரிவிப்பதாக நினைத்து தமிழீழம் வாழ்கவென்றும் பொதுக்கட்டமைப்பின் மூலம் தமிழீழத்திற்கான அடிப்படையை பெற்றுக் கொண்டுள்ளதாகவும் தமிழ்தேசியக்கூட்டமைப்பு எம். பிக்கள் சிலர் பாராளுமன்றத்தில் கோஷமிட்டுள்ளனர். இது ஆரோக்கியமான விடயமல்ல. இது பேரினவாத நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாகவே இருக்கும். 1956 ஸ்ரீ எதிர்ப்பால் எழுந்து கலவரத்திற்கு தமிழரசு கட்சி செய்த பங்களிப்பு போன்ற தவறான நடவடிக்கைகளில் தமிழ்த் தரப்பினர் இறங்காமல் இருப்பதே விவேகமானதாகும்.

சரியான உறுதியான நிலைப்பாட்டை எடுத்தால் முட்டுக்கட்டையாக இருக்கும் அரசியல் சம்பிரதாயங்களையும் சந்தர்ப்பவாதப் போக்குகளையும் தூக்கி எறிந்துவிட்டு இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண முடியும் என்பதை ஜனாதிபதி சந்திரிகா இச் சந்தர்ப்பத்திலாவது உணர வேண்டும்.

அத்துடன் பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தியது மட்டுமன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் மறுவாழ்வும் அளிக்கப்பட வேண்டும். ஊழல் மோசடிகள் குறுகிய அரசியல் லாபங்களுக்கு அப்பால் பொதுக்கட்டமைப்பு இயங்க வேண்டும். "உதவி வழங்கும் நாடுகளின்" உள்ளார்ந்த மறைமுக நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுக்கும் வகையில் பொதுக்கட்டமைப்பானது பயன்படக் கூடாது. அதே வேளை சில முஸ்லீம் கட்சிகளிடமிருந்து பொதுக்கட்டமைப்பு பற்றி அதிருப்தியும் எதிர்ப்பும் தெரிவிக்கப்படுகின்றது. அவர்களது கோரிக்கையின் முக்கிய அம்சம் தனித்தரப்பாக முஸ்லிம்கள் சார்பாக பொதுக் கட்டமைப்பில் ஒப்பமிட்டிருக்க தமக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்பதேயாகும். பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் முஸ்லீம் மக்களுக்கான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே சில முஸ்லீம் கட்சிகள் கிளப்பும் பிரச்சினை ஏற்கனவே விவாதத்தில் இருந்து வரும் தனித்தரப்பு என்ற விடயத்தையேயாகும். இது முற்றிலும் அரசியல் பிரச்சினையும் அங்கீகாரம் பற்றியதுமாகும். ஆனால் பொதுக்கட்டமைப்பு சுனாமி பேரழிவிற்கான மறுவாழ்வுக்குரியதே யாகும். இதில் குழப்பத்தை ஏற்படுத்துவது பேரினவாதிகளுக்கே உதவக் கூடியதாகும். என்பதை முஸ்லீம் தலைமைகள் உணர்ந்து பொதுக்கட்டமைப்பை நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பை வழங்குவதே நியாயமானதாகும்.

# மன்னாரிலுள்ள மலையக அகதிகளின் எதிர்காலம்?

1995 ஆம் ஆண்டளவில் கிளிநொச்சிப்பகுதியிலிருந்து யுத்தத்தின் காரணமாக இடம்பெயர்ந்து மன்னார் பகுதியில் அகதிகளாக இருந்து வரும் மலையகத்தமிழ்க் குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்கிறது. இவ்வாறு 154 குடும்பங்கள் இருப்பதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

அக்குடும்பங்களுக்கு வழங்கப்பட்டு வந்த நிவாரணங்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. அவர்களை மீண்டும் கிளிநொச்சிக்கு போகும்படி அரசாங்க அதிகாரிகள் கேட்டுள்ளனர். அவர்களுக்கு மன்னாரில் நிரந்தர வசிப்பிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படவில்லை.

அவர்களை மன்னாரிலிருந்து வெளியேற்றி விடவேண்டும் என்பதில் சில அரசாங்க அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் மும்முரமாக இருப்பதாகத் தெரிகிறது.

அவர்கள் இடம்பெயர்வதற்கு முன்பிருந்த கிளிநொச்சி பகுதிக்கே செல்ல வேண்டும் என வற்புறுத்தப்படுகிறார்கள். ஆனால் கிளிநொச்சிப்பகுதிக்கு சென்று வசிப்பதற்குரிய ஏற்பாடுகள் எதுவும் அங்கு நடைபெறுவதாகவும் தெரியவில்லை. அவர்களை கிளிநொச்சிப் பகுதிக்கு அழைத்து கொள்வதற்கு அக்கறை காட்டப்படுவதாகவும் தெரியவில்லை. கிளிநொச்சிக்கு சென்று உறவினர்களின் வீடுகளில் தங்கினால் அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் பின்னர் எங்காவது நிரந்தரமாக தங்குவதற்கும் ஏற்பாடு செய்யப்படும் என்ற வாக்குறுதிகளை சிலர் கொடுத்தாலும் அதற்கு உத்தரவாதம் இல்லாத நிலையே காணப்படுகிறது.

அவர்கள் தொடர்ந்து மன்னாரில் தங்குவதை அப்பிரதேசத்தின் சில அரசியல்வாதிகளும் விரும்பவில்லை. அதனாலேயே அவர்களுக்கான நிவாரணங்கள் நிறுத்தப்பட்டு அவர்களை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கைகள் எடுக்கப்படுவதாகத் தெரிகிறது. இது எத்தகைய நியாயத்திற்கு உட்பட்டது என இம் மக்களிடையே கேள்வியும் அதிருப்தியும் ஏற்பட்டுள்ளது. இதனால் தங்களது எதிர்காலம் பற்றிய அச்சத்துடனேயே இம் மலையக அகதி நிலை மக்கள் இருந்து வருகிறார்கள்.

# சேது சமுத்திரம்

1ம் பக்கம் தொடர்ச்சி.......

எவ்வித எதிர்ப்புக்குரலும் எழவில்லை என்பது புரியவில்லை. தனக்கு மூக்குப்போனாலும் எதிரிக்கு சகுனப்பிழை வந்தால் நல்லதே என்ற நிலையில் இருந்து வருகிறார்களோ தெரியவில்லை. அவ்வாறே அரசாங்கப் பக்கத்திலிருந்தோ அல்லது போலித்தன நாட்டுப் பற்றாளர் எனக் கூக்குரல் எழுப்புவோரிடமிருந்தோ எவ்வித எதிர்ப்பும் வெளிவரவில்லை. ஆனால் சேது கால்வாய்த் திட்டத்தின் அபாயம் பற்றி மக்கள் விழிப்படைவது அவசியமானதாகும். அதற்கு தமது எதிர்ப்பையும் கண்டனத்தையும் வெளிப்படுத்தல் வேண்டும்.

அதேவேளை இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் என்பதை இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வார்சிங் அண்மைய இலங்கை விஜயத்தின் போது வெளிப்படுத்தினார்.

இத்தகைய ஒப்பந்தத்தின் அடிப்படை நோக்கம் எளிதில் புரியக் கூடியதேயாகும். 1987ல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை இந்திய ஒப்பந்தத்தையும் அதன் கீழான "சமாதான படை" வரவையும் அதன் மூலம் ஏற்பட்ட துயர நிகழ்வுகளையும் விளங்கிக் கொண்ட எவரும் தற்போதைய வரைவில் உள்ள ஒப்பந்தத்தின் பாரதூரத் தன்மையின் அபாயத்தைப் புரிந்து கொள்வார்கள்.

இத்தகைய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தின் மூலமும் இந்திய மேலாதிக்கப்பிடி இலங்கையை இறுக்கிக் கொள்ளும். அதே வேளை தமிழ மக்களால் முன்னெடுக்கப்பட்டு வரும் சுயநிர்ணய உரிமைக்கான விடுதலைப் போராட்டம் முறியடிக்கப்படும் அபாயத்தை எதிர்நோக்கும். இவ் ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்தால் தென்னாசியப் பிராந்தியம் முழுவதற்கும் ஒரு முன் மாதிரியாகக் கொள்ளப்பட்டு அயல் நாடுகள் மீதான இந்திய மேலாதிக்கம் தனது ஆதிக்கக் கரங்களை நீட்டிக் கொள்ளும். இலங்கை தனது இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியத்தை இழப்பதுடன் பொருளாதார அரசியல் பண்பாட்டுத்துறைகளில் மட்டுமன்றி ராணுவ ரீதியிலும் இந்திய மேலாதிக்கத்தின் ஆணைக் கோலுக்கு அடங்கிக் கொள்ளும் ஒரு நாடாக மாற்றமடைந்து கொள்ளவே செய்யும். இது பற்றி நாட்டின் இறைமை சுதந்திரம் நாட்டுப்பற்று பற்றி வாய்கிழியப் பேசிவரும் ஜே. வி. பி. ஜாதிக ஹெல உறுமய, மற்றும் பௌத்த சிங்களப் பேரினவாதிகள் என்ன கூறப்போகிறார்கள். அவர்கள் ஏற்கனவே இந்திய மேலாதிக்கக் கரங்களுக்குள் இலகுவாகவே சென்றடைந்து விட்டதனால் மௌன அங்கீகாரம் வழங்கவே செய்வர். இந்த இலங்கை இந்திய பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை எதிர்த்து எத்தகைய எதிர்ப்புக்குரல் எழுப்பப்பட போகின்றது என்பதைப் பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும். இதில் தென்னிலங்கைப் பேரினவாதிகளும் ஊடகங்களும் இறைமை சுதந்திரம் போனாலும் பரவாயில்லை புலிகளுக்கு எதிராக அமைந்தால் திருப்தி என்ற நிலையில் தான் இருந்து வருகிறார்கள்.

இந்நிலையிலேயே மலையகத்தில் யப்பானியத் திட்டத்துடனும் கடன் உதவியுடனும் மேல் கொத்மலை நீர் மின் திட்டம் உருவாக்கப்பட்டு வருகின்றது. இதன் அழிவுகரமான அம்சங்கள் பற்றி நாம் ஏற்கனவே தொடர்ச்சியாக வற்புறுத்தி வந்துள்ளோம். இத்திட்டத்தின் மூலம் மலையகத்தின் முக்கிய பிரதேசமான தலவாக்கெல்லையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் வர்க்க இனத்துவ சூழலியல் பாதிப்புகள் இடம் பெற்று மலையக மக்களின் வாழ்வியல் கேள்விக்குறிகளுக்கு உள்ளாக்கப்படும். மேன்மேலும் இது போன்றதிட்டங்களால் மலையகத் தமிழ்த் தேசிய இனத்தின் இருப்பும் எதிர்காலமும் அச்சுறுத்தலுக்கு ஆளாக்கப்படும்அபாயம் பரவவே செய்யும். இவற்றை முன்னுணர்ந்து மலையகத்தில் மேல் கொத்மலைத்திட்டத்திற்கு எதிரான மக்கள் இயக்கம் பல்வேறு எதிர்ப்பு வெகுஜனப் போராட்டங்களை நடாத்தி வருகின்றமை வரவேற்கத் தக்கதாகும். தொடர்ந்து முழு மலையக மக்களையும் அணிதிரட்டிய வெகுஜனப் போராட்டத்தால் மேல்கொத்மலை நீர் மின் திட்டத்தைக் கைவிடச் செய்ய வேண்டும்.

மேற்குறித்த மூன்று விடயங்கள் மக்கள் எதிர்ப்புகளை மீறி நடைமுறைப்படுத்துவது என்பது எமது நாட்டைப் பொறுத்து வடக்கு கிழக்கு மலையக மக்களுக்கு அப்பிரதேசங்களுக்கும் எதிர் கால அபாயங்களையே கொண்டு வரப்போகின்றன. இவை மக்களுக்கு எதிராக வெட்டப்படும் மரணக்குழிகளாகவே அமையப் போகின்றன. இவற்றைத் தடுத்து நிறுத்த பரந்துபட்ட மக்கள் இயக்கங்களும் எழுச்சிகளுமே அவசியமானவையாகும்.

# சுனாமிப் பொதுக்கட்டமை..

1ம் பக்க தொடர்ச்சி...

நடைமுறைகள் பல் வேறு சவால்களைத் தாண்டிச் செல்ல வேண்டியுள்ளது. சம்மந்தப்பட்ட இரு தரப்பினருக்கும் உள்நோக்கங்களும் திட்டங்களும் இருக்கவே செய்யும். அவ்வாறே இவற்றை நடை முறைப்படுத்தும் உயர் அதிகாரிகள் தொட்டு கீழ் நிலை அதிகாரிகள் வரை இவ் நிவாரண, புனரமைப்பு, புனர்வாழ்வு நிதியை சுயநல அடிப்படையில் துஷ்பிரயோகம் செய்யவும் கூடும். இவற்றின் மூலம் சுனாமி அழிவு மீட்புக்கான இந் நிதியானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு சென்றடையாமல் போய் விடக்கூடும். ஏற்கனவே அரசாங்கம், அரசு சார்பற்ற நிறுவனங்கள், அதிகாரிகள் முதல் தொண்டர்கள் வரை நடாத்திய தில்லு முல்லுகள் பற்றி பாதிக்கப்பட்ட மக்கள் பல்வேறு முறைப்பாடுகளுடன் இருந்து வருகிறார்கள்.

எனவே ஆறு மாதகாலமாகப் பல்வேறு எதிர்ப்புக்கள், சவால்கள், இழுத்தடிப்புக்கள் என்பனவற்றுக்குப் பின் நடைமுறைக்கு வந்துள்ள சுனாமி அழிவுக்குரிய மீள் கட்டுமான மறுவாழ்வுக்கான பொதுக்கட்டமைப்பு உரியவாறு தடங்கலின்றி பாகுபாடு புறக்கணிப்புகளுக்கு அப்பால் வடக்கு கிழக்கின் தமிழ் முஸ்லீம் சிங்கள மக்கள் அனைவருக்கும் சென்றடைய வேண்டும் என்பதே மிக அவசியமானதும் முக்கியமானதுமாகும்.

☆ தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமையை வென்றெடுப்போம் !
☆ அழிவு நிறைந்த போலியான அபிவிருத்தி திட்டங்களை நிராகரிப்போம் !
☆ ஏகாதிபத்திய உலகமயமாதலை எதிர்ப்போம் !
☆ புரட்சிகரப் பாதையில் அணிதிரள்வோம் !




வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3 மடி, கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A.K.சிறில் சி.பெரேரா மாவத்தை, கொழும்பு 13.